# நிமிர்வோம்

டிசம்பர் : 2019 | ரூ : 20

மலர் : 3 | இதழ் : 12 | டிசம்பர் : 2019 | விலை : 20

## அரசியலில் ‘பக்தி’யை நுழைப்பது ஆபத்து: அம்பேத்கர் எச்சரிக்கை





## இஸ்லாமியர்களும் திராவிட இயக்கமும் – ஒரு வரலாற்றுப் பார்வை

- எல்லை மீறிய அயோத்தி தீர்ப்பு

# உள்ளே...

உச்சநீதிமன்றம் எழுதிய ‘ஸ்ரீராம ஜெயம்’ 4
- *தலையங்கம்*

பெண்களின் அறிவு சமூகத்துக்குப் பயன்பட வேண்டும் என்றார், பெரியார் 5
- *இரமணி*

இசுலாமியர்களும், திராவிட இயக்கமும் - ஒரு வரலாற்றுப் பார்வை 11
- எஸ். அன்வர், சமூக ஆய்வாளர்

‘நிலம்-நீர்-காற்று-தீ’யிலும் தீண்டாமை சூழ்ந்து நிற்கிறது 16
- *நக்கீரன்*

கடவுள் மறுப்பு - இந்தி எதிர்ப்பு - கர்ப்பத் தடையில் பெரியாரின் பார்வை 21
- *கொளத்தூர் மணி*

அரசியலில் ‘பக்தி’யை நுழைப்பது ஆபத்து 23
- *அம்பேத்கர் எச்சரிக்கை*

ஜாதி எதிர்ப்புப் போராளி பள்ளிகொண்டா கிருஷ்ணசாமி 32
- *எட்வின் பிரபாகரன்*

குடியுரிமைக்கு மத அடையாளமா? 36
- *ஷதன் ஃப்ராஷத்*

எல்லைகளைத் தாண்டிய அயோத்தி தீர்ப்பு 39
- *எஸ்.வி.ஆர்.*

நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
டிசம்பர் 2019 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

வினியோகப் பொறுப்பு
சூலூர் பன்னீர்செல்வம்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363
வெ. மனோஜ்
7373684049

# உச்சநீதிமன்றம் எழுதிய 'ஸ்ரீராம ஜெயம்'

400 ஆண்டுகளுக்கு மேலாக 'பாப்ரி மஸ்ஜீத்' இருந்த இடத்தை இராமன் கோயில் கட்டுவதற்கு சட்ட அங்கீகாரம் அளித்திருக்கிறது உச்சநீதிமன்றம். இந்த வழக்கில் மனுதாரர்களில் ஒருவர் 'ஸ்ரீராமன்', 'குழந்தை இராமனாக' (ராம்லல்லா) தன்னையும் ஒரு மனுதாரராக்கி வழக்கில், இணைந்தான். தனக்காக ஒரு வழக்கறிஞரையும் நியமித்துக் கொண்டான். 'மஸ்ஜீத் இருந்த இடத்தில்தான் நான் அவதரித்தேன்' என்று வழக்கறிஞர் மூலமாக வாதாடினான். அயோத்தி வழக்கு முதலில் தொடரப்பட்டது. 1954இல் 'ஸ்ரீ ராமபிரான்' தன்னை வழக்கில் இணைத்துக் கொண்டது. 1989இல் வழக்கின் நடுவிலே வந்த ஸ்ரீராமபிரானுக்கு நீதிமன்றமும் 'ஸ்ரீராம ஜெயம்' எழுதி வழக்கை முடித்து விட்டது.

இந்த வழக்கில் மட்டுமல்ல; கடந்த காலங்களிலும் மதவெறி கட்டமைத்த உணர்வுகளே சட்டத்தை மிரட்டிப் பணிந்து போகச் செய்திருக்கிறது. 1949இல் நள்ளிரவில் மசூதியின் நடுப் பகுதியை இடித்து, மய்ய மண்டபத்தில் இராமன், சீதை சிலைகளைப் போட்டபோது 'அத்துமீறல்' குற்றங்களை புறந்தள்ளி அவதார நம்பிக்கையே வெற்றி பெற்றது. தொடர்ந்து மசூதி சட்டம் ஒழுங்கு பிரச்சினையைக் காட்டி பூட்டப்பட்டது. 1989இல் மீண்டும் திறக்கப்பட்டதற்குக் காரணமும் மதவெறியின் மிரட்டல்தான். 1992இல் மசூதி இடிக்கப்பட்டது. இடிப்புக்கு நியாயம் கேட்ட இந்த வழக்கிலும் 'இராமன்' நம்பிக்கையே சட்டத்தைப் பின்னுக்குத் தள்ளி வெற்றி பெற்று விட்டது.

அரசியல் சட்ட முன்வரைவை நிர்ணய சபையில் அறிமுகப்படுத்தியபோது அம்பேத்கர் வெளிப்படுத்திய அச்சம் இப்போது உண்மையாகிவிட்டது (அந்த உரையை இந்த இதழில் பதிவு செய்துள்ளோம்). சங்பரிவாரங்கள் கடந்தகாலங்களில் என்ன கூறினார்கள்? ராமன் அவதரித்த இடம் பாப்ரி மஸ்ஜீத் கட்டப்பட்ட இடம் தான் என்பது இந்துக்களின் நம்பிக்கை; நீதிமன்றம் தலையிட முடியாது என்றே சங்பரிபாரங்கள் 1980களிலிருந்து பேசினார்கள்; அதில் தீர்மானம் போட்டார்கள். ஆட்சி அதிகாரம் அவர்களிடம் கை மாறிய பிறகு, தங்களின் மத நம்பிக்கையை நீதிமன்றத்தின் மீதான நம்பிக்கையாக வெகு எளிதில் அவர்களால் மாற்றிக் கொள்ள முடிந்தது. “உச்சமன்றத் தீர்ப்பை தலைவணங்கி ஏற்க வேண்டும்” என்று தீர்ப்பு வருவதற்கு முன் 'சட்டம் ஒழுங்கு காவலர்களாகப்' பேசத் தொடங்கினார்கள்.

“இந்தத் தீர்ப்பை நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் வழங்கவில்லை” என்று உச்சநீதிமன்றம் கூறுகிறது. இது அவர்களின் குற்ற உணர்வின் வெளிப்பாடோ என்று தான் கருத வேண்டியிருக்கிறது.

மஸ்ஜீத்தை மூன்று பங்குகளாக பங்கீட்டு 2010இல் அலகாபாத் உயர்நீதிமன்றம் தந்த தீர்ப்பை ஏற்க மறுத்த உச்சநீதிமன்றம் அதற்கான காரணமாக எதைக் கூறுகிறது? அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்புச் சட்டத்துக்கு புறம்பானது என்று கூறவில்லை. மாறாக, “நாட்டில் நீடித்த அமைதியை உருவாக்காது” என்றே கூறுகிறது.

ஆக, நாட்டில் அமைதியையும் நல்லிணக்கமும் தரக் கூடிய ஒரு தீர்ப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதே நீதிமன்றத்தின் நோக்கம். ஆட்சி அதிகாரம் ஏற்கும் தீர்ப்பாக 'பெரும்பான்மை மிரட்டலுக்கு' பணியும் தீர்ப்பாகவே இருக்க வேண்டும் என்ற முடிவுக்கும் உச்சநீதிமன்றம் வந்திருக்கிறது.

நீதிமன்றங்கள் என்பவை வழக்கு மன்றங்கள்தான்; நீதி வழங்குபவை அல்ல என்றார், பெரியார். இப்போது வழக்கு மன்றமும் மத நம்பிக்கைகளின் மன்றமாக மாறி நிற்கிறது.

சரிந்து வரும் தனி நபர் வருமானம்; பொருளாதார நெருக்கடி; வேலை இல்லா திண்டாட்டம்; சிறு, குறுந் தொழிற்சாலைகள் முடக்கம், ஜி.எஸ்.டி. வரிச் சுமை என்ற மக்கள் பிரச்சினைகள் புறந்தள்ளப்பட்டுவிட்டன. 'ஸ்ரீராமபிரான்' அயோத்தியில் குடியேறி விட்டால் இவை எல்லாவற்றையும் தீர்த்து வைத்து விடுவான் என்று மக்களை நம்பச் சொல்கிறார்களா?

பெரும்பான்மை இந்துக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுகிறோம் என்கிறார்கள். அதே பெரும்பான்மை 'இந்து' மக்கள் சந்திக்கும் பொருளியல் வாழ்க்கை நெருக்கடிப் பற்றி கவலைப்படத் தயாராக இல்லை. இதற்கான காரணம் தெளிவானது தான். பெரும்பான்மை 'சூத்திர–பஞ்சம' இந்துக்களை தங்களது 'ஜாதி–வேத மதப்' பிடிக்குள் திணித்து வைக்கத் துடிப்பவர்கள் 'சிறுபான்மை' பார்ப்பனர்கள். அந்த சிறுபான்மையின் சமூக அதிகாரத்தை மீண்டும் நிலைநிறுத்துவதே பா.ஜ.க.வும் சங்பரிவாரங்களும் பேசும் பெரும்பான்மைக்குள் புதைந்து கிடக்கும் கசப்பான உண்மை!

# பெண்களின் அறிவு சமூகத்துக்குப் பயன்பட வேண்டும் என்றார், பெரியார்

● இரமணி

*"டீசன்சி (Decency) சுத்தம் கண்ணுக்கு வெறுப்பில்லாத ரம்மியம் வேண்டாம் என்று நான் சொல்லுவதாக யாரும் கருதக்கூடாது. அது அவசியம் வேண்டும். ஆனால், அது அதிகம் பணம் கொண்ட, மக்கள் கவனத்தை ஈர்க்கத் தகுந்த 'பேஷன்' அலங்காரத்தால் அல்ல என்றும், சாதாரண குறைந்த தன்மையில் முடியும் என்றும் உணரவேண்டும்" – பெரியார்.*

பெருங்கடல் ஆழமானது; எல்லோருக்குமானது; அப்படி ஒரு பெருங்கடல். பெரியார். எப்படி பெருங்கடலிலிருந்து அவரவருக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்ளலாமோ அப்படி பெரியாரைப் படிக்கும் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தேவைப்பட்ட ஒரு பெரியாரை எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அந்த பெருங்கடலை பெருங்கடலிடமிருந்தேதான் அறிந்துகொள்ள முடியும். அந்த வகையில் இவர் எனக்குக் கிடைத்தப் பெரியார்.

பெரியாரை எந்த ஒரு சட்டகத்திலும் அடைக்க முடியாது. எப்படி எத்தனை

சட்டகங்களை அடைத்து வைத்து கட்டினாலும், பெருங்கடலின் ஒற்றை அலையால் அதனை உடைக்க முடியுமோ, அப்படி சமூகத்தின் அழுக்குகளை தன் அதிர்ச்சி மதிப்பீடுகளால் உடைத்து எறிந்தவர் பெரியார். எப்படி ஒரு பெருங்கடல் பாரபட்சம் பார்க்காமல் தாக்குமோ, அப்படி தன்னுடைய போராட்டத்தில் யாரையும் பாரபட்சம் பார்க்காமல் விளாசியவர் பெரியார். குறிப்பாக பெண்ணுரிமைப் போராட்டத்தில் தந்தை பெரியாரின் கைத்தடி எவரையும், எதையும் விட்டுவைக்கவில்லை.

மனித சமூகம் கட்டமைத்திருக்கும் அத்தனை அடிமைத்தனங்களும் பெண்களில் இருந்து தொடங்குகிறது என்பதை ஆராய்ந்து, அதிலிருந்து விவாதங்களைத் துவக்கியிருக்கிறார் பெரியார்.

“உலகில் மனித வர்க்கத்திற்கு அடிமை தத்துவம் ஒழிய வேண்டுமானால், பெண்ணுலகை அடிமையாக கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும், ஒழிய வேண்டும். இது ஒழிந்த நிலையிலேயே சமத்துவம், சுதந்திரம் என்னும் முளை முளைக்கும் இடம்” என்கிறார்.

பார்ப்பனரல்லாத மக்களின் சமூக நீதி உரிமைக்காக மிக வீரியத்துடன் பெரியார் பணியாற்றி வந்த காலத்தில், பார்ப்பன ஆதிக்கம் கோலோச்சிய சட்டமன்றத்திற்கு தேர்ந் தெடுக்கப்பட்ட பார்ப்பனரல்லாத நீதிக்கட்சி பிரதிநிதியான சர். ஏ. பி பாத்ரோ என்கிற சட்டமன்ற உறுப்பினர் பால்ய விவாஹத்திற்கு எதிரான சட்டத்திற்கு எதிராக 1928இல் பேச, “அவர் பார்ப்பனரல்லாத கட்சியில் இருந்து ராஜிநாமா செய்துவிட்டு, பார்ப்பனர் கட்சிக்குப் போய்விட வேண்டும். அவரை இனி பார்ப்பனரல்லாதார் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்வது பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கே அவமானம்” என்று எழுதி யிருக்கிறார்.

சூத்திர மக்களின் உரிமைகளுக்காக தன்னுடன் இணைந்து பயணிக்கும் சகாக்கள் தங்கள் வீட்டுப் பெண்களை நடத்தும் விதம் குறித்து பேசுகையில், ”திராவிட பேரறிஞர்களின் மனைவிகள், தங்கை, தமக்கைகள், பெண்கள், எங்கே எப்படி பிறந்தார்கள்? எப்படி வளர்ந்தார்கள்? எப்படி தகுதி ஆக்கினார்கள்? எப்படி இருக்கிறார்கள்? ஷராப்புக்கடைகள், ஜவுளிக் கடைகள் ஆகியவற்றில் விளம்பரத்திற்கு வைத்திருக்கும் அழகிய பொம்மைகள், உருவகங்கள் போல் அல்லாமல், நாட்டுக்கு, மனித சமுதாயத்திற்கு, பெண்கள் உலகத்திற்கு, இவர்கள் என்ன மாதிரியில் தொண்டாற்ற அல்லது தாங்களாவது புகழோ கீர்த்தியோ பெறத் தக்கப்படி வைத்தார்களா? இவர்களே இப்படி இருந்தால் மற்ற பாமர மக்கள் தங்கப் பெட்டியின் உள்ளே வெல்வெட் மெத்தை போட்டு பூட்டி தானே வைப்பார்கள். நம் பெண்கள் - நகைகள் மாட்டும் ‘ஸ்டாண்டா?’ இந்தப் பிரபல ஆண்கள் பிறந்த வயிற்றில்தான் அவர்கள் தங்கை, தமக்கை பிறந்தார்கள்? இவர்கள் தகப்பன்மார்கள் தான் அவர்களுக்கும் தகப்பன்மார்கள். அப்படி இருக்க, இவர்களுக்கு இருக்கும் புத்தி, திறமை அவர்களுக்கு ஏன் இல்லாமல் போகும்? இதை பயன்படுத்தாதது நாட்டிற்கும் சமூகத்திற்கும் நட்டமா இல்லையா?” என்று திராவிடப் பேரறிஞர்களைக் கேள்வி கேட்கிறார்.

ஆரிய, வைதீக எதிர்ப்பிற்கு திருக்குறளைப் பயன்படுத்திய பெரியார் திருக்குறளிலும் சில குறள்களில் பெண்ணடிமைத்தனம் சார்ந்த கருத்துக்கள் இருப்பதை குறிப்பிட்டு, “வள்ளுவனி லிருந்து ஒவ்வொரு பெரிய மனிதனும் பெண்ணை அடிமைப் பொருளாகத்தான் கருதி இருக்கிறானே தவிர, ஆண்களோடு சரிசமானமான உரிமை யுடையவர்களாகக் கூறவில்லையே” என்கிறார்.

ஆயிரக்கணக்கான பள்ளிகளை ஏற்படுத்துதல், வகுப்புவாரி உரிமைக்கு சட்டம் இயற்றுதல், மருத்துவப் படிப்பிற்கு சமஸ்கிருதம் அறிந்திருப்பது அவசியமென்றிருந்ததை ஒழித்தல், இந்துசமய அறநிலையத்துறை அமைத்தல் போன்ற பல்வேறு செயற்கரிய சாதனைகளை செய்த நீதிக் கட்சி ஆட்சியில் 23.3.1930 இல் தேவதாசிச் சட்டம் குறித்து குறிப்பிடும் போது, “இதற்காக - இந்தச் சட்டம் தொடர்பாக சர்க்கார் பொதுமக்களிடம் அபிப்ராயம் கேட்பது கோமாளித்தனம் என்பதே நமது அபிப்ராயம். ஏனெனில், கோவில்களில் கடவுளிகள் பெயரால் பெண்களுக்குப் பொட்டுகட்டி, அவர்களையே பொது மகளிர்களாக்கி, நாட்டில் விபச்சாரித் தனத்திற்கு செல்வாக்கும், மதிப்பும், சமய சமூக முக்கிய ஸ்தானங்களில், தாராளமாய் இடமும் அளித்து வரும் ஒரு கெட்ட வழக்கம், நமது நாட்டில் வெகு காலமாய் இருந்து வருகிறது . ஒரு நாட்டில், நாகரீகமுள்ள அரசாங்கமாகவாவது அல்லது நாட்டின் சுயமரியாதையையோ பிரஜைகளுடைய ஒழுக்கத்தையோ, நலத்தையோ கோரின அரசாங்கமாவது ஒன்றிருந்தால், இந்த இழிவான கெட்டப்பழக்கம், கடவுள் பெயராலும், மதத்தின் பெயராலும், சமூகத்தின் பெயராலும்,

தேசிய வழக்கத்தின் பெயராலும் இருந்து வர, ஒரு கண நேரமும் விட்டுக்கொண்டு வந்திருக்காது என்று சொல்லுவோம். அடுத்த சட்டமன்ற கூட்டத்திலாவது இச்சட்டம் நிறைவேறாமல் போகுமேயானால், சர்க்காரின் யோக்கியத்திலும், ஜஸ்டிஸ் கட்சியாரின் சுயமரியாதையிலும் தெருவில் போகிறவனுக்குக் கூட மதிப்பும் நம்பிக்கையும் இருக்காது என்று சொல்லுவோம்'' என்று கடுமையாக சாடுகிறார்.

அதுபோல, "சாரதா சட்டம் (குழந்தை மணத் தடுப்புச் சட்டம்) என்கிற ஒரு சட்டம் பிரிட்டிஷ் சர்க்கார் தயவினால் 'பாசா'கியும், இந்திய தேசியவாதிகளாலும், "பூரண சுயேச்சைவாதி"களின் முயற்சியாலும் அது சரியானபடி அமுலுக்கு வரமுடியாமல் முட்டுக் கட்டை போடப்பட்டு வருவதும், அச்சட்டம் கூடாதென்று வாதாடி ஒழிப்பதாகத் தெரியப் படுத்தினவர்களை ராஜாங்க சபைக்கும், மாகாண சபைக்கும் நமது பிரதிநிதிகளாக அனுப்பியது நம்மவர்களுக்கு மிகமிக மானக்கேடான காரியமாகும்'' என்று எழுதுகிறார்.

இப்படி கொள்கையில் சமரசமின்மை, குறிப்பாக பெண் விடுதலை குறித்தான அவரது பார்வை தன் சொந்த சகாக்களையே எதிர்க்கும் நிலைக்கு அவரை அழைத்துச் சென்றது. பார்ப்பனரல்லாத கட்சித் தலைவர்கள், நீதிக்கட்சி தலைவர்கள், ஏன் திருக்குறளையும்கூட விட்டு வைக்காமல் விமர்சிக்கிறார்.

இன்றைக்கு 21 ஆம் நூற்றாண்டிலும் மறுமணம் பரவலாகாத நிலையில், "இந்த நாட்டின் ஆளுகை உரிமை இந்தியருக்கே கிடைக்க வேண்டுமென அரசியல் சீர்திருத்தக் காரர்களும், இந்திய மக்களுக்குள் இருக்கும் வகுப்பு பிரிவினையும், சாதி வேற்றுமையும் தொலைய வேண்டும் என்பதாக சமூக தீர்திருத்தக் காரர்களும் போராடுகிறார்களேயன்றி பெண் மக்களுள் ஒரு பகுதியினர் அழிந்து வருவதை பாராமுகமாகவே பார்த்து வருகின்றனர்'' என்று விதவை மறுமணம் பற்றி 1926லேயே பேசுகிறார் தந்தை பெரியார். 1900களிலேயே தன்னுடைய தங்கை மகளுக்கு மறுமணம் செய்து வைத்தவரல்லவா அவர்!

பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராகப் பல்வேறு தரப்பினர் மீது தனது சாட்டையைச் சுழற்றிய பெரியார், பெண்களின் கால் விலங்கை உடைக்கும் கருவியாக கல்வியை முன் வைத்தார். அதுபற்றி, "பெண்களை வெளியில் செல்ல

**"அறிவு, அனுபவம், ஆராய்ச்சி ஆகியவற்றின்மீது ஏற்பட்ட மணமுறைகளுக்கே இங்கு வேலை உண்டு. அவை பழையவையானாலும், புதியவையானாலும், தமிழனுடையதானாலும், ஆரியனுடையதானாலும், அய்ரோப்பியனுடையதானாலும் இருந்து போகட்டும்'' பெரியார்.**

விடுவதில்லை; பிறருடன் தாராளமாகப் பழக அனுமதிப்பதில்லை. 'சன்னலின் அருகே நிற்காதே, 'வாசலில் யார் போகிறார்கள் என்று எட்டிப் பாராதே!' 'ஆண்கள் வந்தால் அடுப்பாங்கரைப் பக்கம் ஓடிவிடு' என்றெல்லாம் கூறி அவர்களை ஒன்றும் தெரியாத முட்டாள்களாக்குகிறோம். இவை மாய்ந்துபோய், பெண்களுக்கு உண்மை யான விடுதலை வரவேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் எந்த விதத்திலும் வேற்றுமை இருக்கக்கூடாது. பெண்கள் வெறும் மிருக இனம்போல் நடத்தப்படும் இந்நிலை ஒழிந்தேயாக வேண்டும்; தாமாக ஒழித்துக் கொள்ள முயற்சிக்க மாட்டார்கள்; முன்வர மாட்டார்கள். ஆண்கள் தான் முன்வந்து, விட்டுக் கொடுத்து, பெண்களைச் சமநிலைக்குக் கொண்டு வரவேண்டும். தாய், தந்தையர் ஆண்களைவிட மேலாகப் பெண்களுக் குத்தான் அதிகப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டும்'' என்று 1948இல் சென்னை விக்டோரியா மண்டபத்தில் பேசியவர், அதற்கு 10 ஆண்டுகள் முன்பே, "இப்போது பெண்கள் படித்து முன்சீப், கலெக்டர், மந்திரியாக வேலை பார்க்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் சம உரிமை கொடுத்தால் ஆண்களைவிட நன்றாக வேலை செய்வார்கள். 4 ஆண்களும் 1 பெண்ணும் குடும்பத்தில் இருந்தால் முதலில் அந்தப் பெண்ணைத் தான் படிக்கவைக்க வேண்டும். அப்படி படிக்க வைத்தோமேயானால் நம்மை யெல்லாம் வண்டியில் வைத்து ஓட்டுவார்கள்'' என்பதாக வாழ்க்கை துணைநலம் என்ற நூலில் தன்னுடைய அவாவை வெளிப்படுத்துகிறார்.

வெறுமனே படிக்க வைத்தால் மட்டும் போதுமா? இன்றைக்கும் பெரிய பெரிய படிப்பை யெல்லாம் படிக்கவைத்துவிட்டு, 'படிப்பையும்' நகை பணம் போல வரதட்சணையின் ஒரு பகுதியாக இணைத்து மாடுகளைப் போல பேரம் பேசி விற்றுக்கொண்டிருக்கிறார்களே? பெண்கள் பெரிய படிப்புகளைப் படித்துவிட்டு கரண்டியை தானே பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்? கல்வி யறிவு பெற்ற பெண்ணாகவே இருந்தாலும் பெண் களின் கல்வியறிவு குடும்ப சுமையின் காரணமாக பயன்படாமல் போவது குறித்து கூறும் பொழுது,

“ஒரு பெண்ணை தாய் தகப்பன் பி.ஏ படிக்க வைத்து, ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்து, அந்தப் பெண் சமையல் செய்யவும், குழந்தை வளர்க்கவும், நகை, துணி அலங்காரங்களுடன் மக்கள் கவனத்தை ஈர்க்கவும் செய்தால், பி.ஏ படிக்க வைத்தப் பணம் வீண் என்பதோடு, அதற்காக சர்க்கார் செலவளித்த வரிப்பணமும் வீண் தானே? இது தேசிய குற்றமாகாதா?” என்று பெண்களின் அறிவு சமூகத்திற்குப் பயன்படாமல் போவதை தேசிய குற்றம் என்கிறார்.

1946 ஆம் ஆண்டு திருப்பத்தூரில் தந்தை பெரியார் ஆற்றிய சொற்பொழிவில் பெரியார் வெளிப்படுத்தும் ஆதங்கம் குறிப்பாக இந்தக் காலத்திற்கு அதிகம் பொருந்திப்போவது, “இங்கு படித்த பெண், படியாத பெண் எல்லோரும் பொம்மைகளாகவே இருக்கிறார்கள். பெற்றோர் களும், கணவன்மார்களும் அவரவர்களது பெண்களை அழகிய பொம்மைத் தன்மையை உடையவர்களாக ஆக்கி அதைக் கொண்டே திருப்தி அடைகிறார்கள்; பெருமை அடை கிறார்கள். நான் சில படித்த பெண்களைப் பார்க்கிறேன். வயிற்றில் ஒரு குழந்தை; கட்கத்தில் ஒரு குழந்தை; கையில் பிடித்துக்கொண்டு ஒரு குழந்தை; இவ்வளவோடு சிலருக்கு முன்னால் ஓடும்படி ஒரு குழந்தையை விட்டு - இப்படியாகப் படைகளோடு நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும் கூட்டங்களுக்கு வந்து நடுவிலிருந்துகொண்டு, நிகழ்ச்சிகளுக்கு இடையூறும் தொல்லையும் கொடுப்பதைப் பார்க்கிறேன். நகைக்கும் துணிக்கும் போடும் பணத்தைப் பாங்கியில் போட்டு குறைந்த வட்டியாவது வாங்கி, குழந்தை பிறந்தவுடன் அதை எடுக்க அந்த வட்டியில், ஓர் ஆள் வைத்தாவது அதைப் பார்த்துக்கொள்ளச் செய்தால், அன்பு குறைந்துவிடுமா? பெற்ற தகப்பன் குழந்தையைத் தன்னுடன் கூடவே வைத்துத்தானா அழகு பார்க்கிறான்? அன்பு காட்டுகின்றான்? கொஞ்சி விளையாடுகின்றான்? ஆகையால், குழந்தையை ஆட்கள் மூலம் வளர்க்க வேண்டும். சமையல் - ஆட்கள் மூலம் செய்விக்க வேண்டும். பெண்கள் ஆண்களைப் போல் உயர்வேலை பார்க்கவேண்டும்; பொம்மைகளாக - நகை மாட்டும் ஸ்டாண்டுகளாகக் கூடாது என்கிறேன்” என்கிறார்.

பெண் விடுதலைக்கான போராட்டக் களத்தில் பெரியார் நிறைய அதிர்ச்சி வைத்தியங் களைக் கொடுத்தார். மரித்துப்போன சமூகம், மீண்டும் உயிர் பிழைக்க இந்த மாதிரியான அதிர்ச்சி வைத்தியங்கள் அவசியமாகத்தான் இருந்தது. ஆனால், பெரியார் வெறும் அதிர்ச்சி மதிப்பீடுகளைக் கொடுத்த அவசரகால மருத்துவர் மட்டுமே கிடையாது, தவறுகளை ஆராய்ந்து அவற்றை நீக்க வழிகளை யோசித்த சமூக விஞ்ஞானி.

நம் பெண்கள், நாட்டுக்கும் சமூகத்துக்கும் பயன்படாமல் அலங்காரப் பொம்மைகளாக ஆனதற்கு, ஆண்களின் கண்களுக்கு விருந்தான தற்குக் காரணம், இந்தப் பாழாய்ப் போன - ஒழுக்கமற்ற சினிமாப் படங்களேயாகும். சினிமாப் பெண்களின் தன்மை என்ன? ஒழுக்கம் என்ன? வாழ்க்கை என்ன? இலட்சியம் என்ன? இவை எல்லாவற்றையும் நம் பெண்கள் கருதாமல் - புகழ், வீரம், பொதுநலத் தொண்டு முதலியவற்றில் கீர்த்தி பெற்ற ஆண்களைப் போல் தாங்களும் ஆகவேண்டுமே என்றில்லாமல் - இப்படி அலங்கரித்துக் கொண்டு திரிவது பெண்கள் சமுதாயத்தின் கீழ்ப்போக்குக்குத்தான் பயன்படும் என்றும் வருந்துகிறேன்” என்கிற பெரியாரின் கோபம், இன்றைய அலங்காரங்கள் சூழ்ந்த பெண்களின் அங்கங்கள், பண்டமாக மாற்றப்பட்ட முதலாளித்துவ உலகில் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. வீட்டைவிட்டு வெளியே வந்து சரிசமமாக வேலை செய்ய வேண்டும் என்கிறார். ஆனால், அலங்காரமும் கூடாது என்கிறார். பின்னர் எப்படி வெளியில் சென்று எல்லோரும் மதிக்கும்படி வேலைப் பார்ப்பது?

ஒரு ‘ருக்குமணி’, ஒரு ‘விஜயலட்சுமி’ என்கின்ற பார்ப்பனப் பெண் தானா பொது வாழ்வில் ஈடுபடத்தக்கவர்களாக, மந்திரிகளாக ஆக வேண்டும்? ஏன் நம்மவர்கள் ஏராளமாக வெளியில் வரக்கூடாது? இவர்களைத் தடுப்பது சீலை, நகை, துணி அலங்காரவேஷம் அல்லாமல் வேறு என்ன?” என்று அதற்கும் பதில் சொல்கிறார்.

பெண்கள் விட்டொழிக்க வேண்டியது பற்றி கூறியவர், அறிவு பெற கல்வியும், ஆண்களை சார்ந்திருக்காத பொருளாதார விடுதலையும் பெண்களுக்கு அவசியமென முன் வைக்கிறார். “பெண்களுக்கு படிப்பு தொழில் ஆகிய இவை இரண்டும் பெற்றோர்களால் கற்பிக்கப்பட்டு விட்டால், சொத்து சம்பாதிக்கும் சக்தி வந்து விடும். பிறகு தங்கள் கண்வன்மார்களை தாங்களே தேர்ந்தெடுக்கவும், அல்லது பெற்றோர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், கணவனோடு சுதந்திரமாய் வாழ்க்கை நடத்தவும் கூடிய தன்மை உண்டாகிவிடும்” என்றும் பெண் ஏன்

அடிமையானாள் புத்தகத்தில் தந்தைவழிச் சமூகத்தில் பெண்களுக்கு மறுக்கப்படும் சொத்துரிமை, பெண் விடுதலையில் ஒரு முக்கியப் புள்ளி என்பதை உணர்ந்து குறிப்பாக பொருளாதாரரீதியாக சுயாதீனமாக இருக்க வேண்டும் என்கிறார்.

“தனியுரிமை உலகில் பெண்கள் சுதந்திரம் வேண்டுமென்பவர்கள், பெண்களை நன்றாய் படிக்க வைக்க வேண்டும். தங்கள் ஆண் பிள்ளைகளை இலட்சியம் செய்யாமல், பெண்களுக்கே செலவு செய்து படிக்க வைக்க வேண்டும். அவர்களுக்கு வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு தொழில் கற்றுக்கொடுக்க வேண்டும். தாய் தகப்பன்மார் பார்த்து ஒருவனுக்குப் பிடித்துக் கொடுப்பது என்று இல்லாமல், அதுவாக (பெண்ணாகவே பார்த்து) தகுந்த வயதும் தொழிலும் ஏற்பட்டப்பிறகு ஒருவனைத் தேர்ந் தெடுத்துக் கொள்ளும்படி செய்ய வேண்டும்” என்று 1936லேயே பெண்கள் சுயாதீனமாக வாழ வேண்டும் என்று பேசியிருக்கிறார்.

1959இல் புத்திரக்கவுண்டன் பாளையம் என்ற சாதியக்கட்டுப்பாடு இறுகிய ஊரில் “பணக்காரர்களாக அல்லது உயர்சாதி என்று கருதிக் கொண்டிருப்பவர்களிடம்தான் ‘பெண் வெளியில் போகக்கூடாது; அக்கம் பக்கம் பார்க்கக்கூடாது’ என இந்தக் காரியத்தில் அதிகக் கவலை கொண்டும், கட்டுப்பாடு உள்ளது. சாதாரண பாட்டாளி மக்கள், ஏழைகள், அன்றாடக் கூலி மக்களாக வாழ்பவர்களிடத்தில் இவ்வளவு கடுமையான கட்டுப்பாட்டைக் காணமுடியவில்லை.” என்று பேசியிருக்கிறார்.

1930ஆம் ஆண்டு ‘குடிஅரசு’ தலையங்கம் ஒன்றில், “உலகில் பொருளியல் சமத்துவம் ஏற்படுகின்றவரை திருட்டு என்னும் குணமானது குற்றமாகத்தான் பாவிக்கப்படும். இன்று உலகத்தில், சிறப்பாக நமது நாட்டில் இருந்து வரும் கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலியவைகள் எல்லாம் பெரிதும் இயற்கைக்கு எதிராகவும் - அடிமைத்தனத்திற்கு ஆதரவாகவும் - தனிப்பட்ட வர்கள் சுயநலத்திற்கேற்ற சூழ்ச்சிகளுமாகவே இருக்கின்றன.” என்கிறார்.

“தனியுடைமை இல்லாத ரஷ்யா போன்ற நாடுகளில் பெண்கள் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருப்பதை நாம் பார்க்கலாம். தனியுடைமை இல்லாத நாட்டில் திருமணமுறை இருக்காது. வாழ்க்கை ஒப்பந்தம் தான் இருக்கும்” என்று 1948இல் தனியுடைமை எப்படி பெண்களை ஒரு பண்டமாக்குகிறது என்பதைக் குறிப்பிட்டு பேசுகிறார்.

உண்மையில் பெரியார் எளியவர். நடைமுறைக்கானவர். சமூகத்தின் மதிப்பீடுகளால் வரையறுக்கப்பட்ட, நடைமுறைக்கொவ்வாத, அறிவுக்கு எட்டாத அனைத்தையும் தூக்கி யெறிந்தவர். அதில் மிக முக்கியமானது, காதல். காதல் என்றால் உண்மையாக இருக்க வேண்டும். காதல் என்கிற உணர்வு தெய்வீகமானது என்றெல்லாம் பேசியவர்களுக்கு, “தனித்தமிழ் மொழியில் பார்த்தாலும், ஆண் - பெண் கூட்டு சேர்க்கை முதலியன சம்பந்தமான விஷயங் களுக்கும் அன்பு, ஆசை, நட்பு, நேசம் என்பவைகளைத் தவிர வேறு தமிழ் மொழியும் இல்லை. இவைகளுடன் காதல் என்பதைச் சேர்த்துக் கொண்டால், இக்கருத்துக்களையே தான் மாற்றி, மாற்றி ஒன்றுக்கு மற்றொன்று கூறப்படுகின்றதே தவிர காதலுக்கு என்று வேறு பொருளில்லை. ஆதலால், இவைகளின்றிக் காதல் என்பதற்கு வேறு தனி அர்த்தம் சொல்லு கின்றவர்கள் அதை எதிலிருந்து கண்டு பிடித்தார்கள் என்று தெரியவில்லை” என்று காதலைச் சுற்றியுள்ள புனிதங்களை உடைத்தும், “காதல் கொள்ளும்போது காதலர்கள் நிலைமை, மனப்பான்மை, பக்குவம், இலட்சியம் ஆகியவைகள் ஒரு மாதிரியாக இருக்கலாம். பிறகு கொஞ்ச காலம் கழிந்தபின் இயற்கையாகவே பக்குவம், நிலைமை, இலட்சியம் மாறலாம். இந்த மாதிரிச் சந்தப்பங்களிலும் காதலுக்காக ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்துக்கொண்டு சதா அதிருப்தியில் துன்பத்தில் அழுந்த வேண்டியது தானா என்று பார்த்தால் அப்போதும் காதலுக்கு வலுவில்லாததையும் அது பயன்படாததையும் காணலாம்” என்று 1931லேயே பரஸ்பரமாக பிரிந்து செல்லுதல் குறித்து எழுதுகிறார்.

பெண்கள் திருமண பந்தத்திற்கு செல்லாமல், ஒப்பந்த முறையில் ஆணுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்னும் அவாவை வெளிப்படுத்துபவர், சட்டகங்களைக் கடந்தவர், ஏன் சுயமரியாதைத் திருமணம் என்ற சட்டகத்தை காட்டுகிறார்? ஒருபுறம் அதிர்ச்சி மதிப்பீடு களையும், எதிர்கால அவாவை வெளிப்படுத்தி னாலும், மக்களிடமிருந்து விலகிச் செல்லாமல் தற்போதைக்கான எளிமையான நடை முறைக்கான தீர்வுகளைச் சொல்கிறார்.

1934இல் சென்னை சவுக்கார்பேட்டையில், எப்படி வைதீக முறைப்படி நடைபெறும் திருமணம் நடைமுறைக்கு ஒவ்வாமலிருக்கிறது

என்றும், சுயமரியாதைத் திருமணம் எப்படி மிகவும் எளிமையாக, செலவுகளையும் சிரமங்களையும் குறைத்து, பரஸ்பர அன்புடனும் மரியாதையோடும் இருக்கமுடியும் என்று மிகவும் எளிமையாகப் பேசுகிறார். புனித தலங்களுக்கு நடந்து செல்வதை நிறுத்தி, வாகனங்களிலும் விமானங்களிலும் செல்வது சமூகத்தில் ஏற்பட்ட சீர்திருத்தத்தினால்தான் என்றும், இவை அனைத்தும் வசதிக்கேற்றார் போல் மாற்றப்படும் போது, திருமணம் மட்டும் ஏன் இவ்வளவு பேருக்கு சிரமம் தந்து நடைமுறைக்கொவ்வாமல் நடைபெற வேண்டும் என்று அதே வருடமே கோவையில் பேசும் போது மீண்டும் கேள்வி எழுப்புகிறார்.

ஆரிய முறை என்றுதான் திருமண முறையை எதிர்க்கிறோமா என்றால், "அறிவு, அனுபவம், ஆராய்ச்சி ஆகியவற்றின்மீது ஏற்பட்ட மணமுறைகளுக்கே இங்கு வேலை உண்டு. அவை பழையவையானாலும், புதியவை யானாலும், தமிழனுடையதானாலும், ஆரிய னுடையதானாலும், அய்ரோப்பியனுடைய தானாலும் இருந்து போகட்டும்" என்கிறார்.

அதே வேளை, "திராவிடர் திருமணம் என்றாலும் நான் இதை 1946-ம் வருசத்திய (தற்கால நிலைக்கேற்ற) திருமணம் என்றும், இதுவே இன்று உலக மக்கள் திருமணமாக இருக்க வேண்டும் என்றும் சொல்லுகிறேன். ஆனால், இது மாறாமல் இப்படியே இருக்க வேண்டும் என்று நான் சொல்லுவதில்லை. 1946ஆம் வருஷத்தியது என்று நான் சொன்னதால் 1956-க்கும் இப்படியே இருக்கவேண்டுமென்பது கருத்தல்ல" என்று பேசுகிறார்.

பெரியாரின் தர்க்கத்தை எளிமையாக சொல்ல வேண்டுமென்றால், அவர் எல்லா வகையான சமூகத்தின் ஒடுக்குமுறை அமைப்புகளையும் நிராகரித் தவர். பகுத்தறிவுக்கு ஒவ்வாத எவற்றையும் தூக்கிவீசச் சொல்பவர்; அது அவருடைய கருத்தானாலும் சரி, அந்த அளவுக்கு ஜனநாயகவாதியான அவர், தான் ஒரு பிற்போக்கு வாதி என்று வருங்காலத்தில் அழைக்கப்பட வேண்டும் என்று ஆழமாக விரும்பிய கலகக்கார அராஜகவாதி. இந்த பெரியார்தான் எனக்குக் கிடைத்தப் பெரியார்.

தஞ்சை ஆய்வரங்கில் நிகழ்த்திய உரை.
கட்டுரையாளர் : சட்டக் கல்லூரி மாணவி

## வாசகர்களிடமிருந்து...

'நிமிர்வோம்' நவம்பர் இதழ் பெரியாரியல் குறித்து ஆழமான கட்டுரைகளுடன் வெளி வந்திருக்கிறது. 'பெரியார் பேசிய சுயமரியாதையின் உள்ளடக்கம்' கட்டுரையில் தோழர் செந்தில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட கருத்துகள் மிகவும் குறிப்பிடத் தகுந்தது.

"பெரியாரை நோக்கி அவதூறுகளை ஒருபுறம் இந்துத்துவ ஆற்றல்களும், இன்னொருபுறம் தமிழ்த் தேசியத்தின் பெயரால் இனவாத ஆற்றல்களும் அள்ளி வீசி வருகின்றனர். இதனால் இன்றைக்கு நம்மிடையே ஒருவித பதட்டம் தொற்றிக் கொண்டுள்ளது. ஆனால், அத்தகைய பதட்டம் தேவையற்றது. ஏனெனில், இன்றைக்கும் பெண்கள் நம்முடைய சமூகத்தில் கட்டுண்டே உள்ளனர். வருங்காலத்தில் பெண்கள் தமக்கான ஆள்வகை உரிமை கோரி மாபெரும் எழுச்சிக் கொள்வர். அத்தகைய எழுச்சி கொள்ளும் பொழுது தமிழர்களின் புதுமக் கால அரசியலின் முதல் பெண்ணியவாதியாக அவர்கள் கையில் ஏந்தப் போவது பெரியாரின் படத்தையே. ஆயிரக்கணக்கில் வீதியில் இறங்கிப் போராடும்போது உணர்ச்சிப் பெருக்கோடு பெரியாரின் கருத்துகளைப் பேசுவார்கள், அவரை உயர்த்திப் பிடிப்பார்கள். இன்றைக்கு அவதூறுகளைப் பரப்புவோர் எல்லாம் வாயடைத்துப் போவர்."

**– பிரசாந்த், திருப்பூர்**

பெரியாரின் மரபு குறித்து பேராசிரியர் ந. முத்துமோகன் தனது ஆய்வுக் கட்டுரையில் சிறப்பாக சுட்டிக் காட்டுகிறார்.

"தமிழ்மயமாக்குதல் அல்லது தன்வயப்படுத்தல் என்ற முறையியலைப் பெரியார் பயன்படுத்தும்போது, அவர் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக நின்று பேசுகிறார். இந்திய வரலாறு முழுவதிலுமே மேட்டுக்குடிகளுக்கும் அடித்தள மக்களுக்கும் இடையில் இடையறாத போராட்டங்கள் நடந்து வந்தன என்பதற்கு அவர் அடுத்தடுத்து பல எடுத்துக் காட்டுகளைச் சுட்டிக்காட்டுகிறார். அப்படி எடுத்துக்காட்டும் போது பெரியார் தன்னை அவ்வாறு போராடியவர்களுடன் இணைத்துக் காட்டுகிறார். நான் தனித்த மனிதனல்ல, எனக்கு ஒரு மரபு உண்டு, அது ஒரு போராட்ட மரபு என்று பெரியார் குறிப்பிடுகிறார். பண்டைய இந்தியாவில் சார்வாகர்கள், பௌத்தர்கள் ஆகியோரைச் சுட்டிக்காட்டுகிறார்.

பண்டைத் தமிழ் மரபில் திருவள்ளுவரை எடுத்துக் காட்டுகிறார், ஔவையை முன்னெடுத்துப் பேசுகிறார், கபிலரைப் பற்றிப் பேசுகிறார், சித்தர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இப்படி அவர் பேசும்போது நாம் அவரை அடையாளம் கண்டு கொள்ளுகிறோம். நான் மரபில் வேர் கொண்டுள்ளேன், அது ஓர் எதிர்ப்பு மரபு, போராடிய மரபு என்று பெரியார் தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார். தன்னை அவர் ஆண்ட பரம்பரையாக அடையாளப்படுத்தவில்லை. தெய்வீக அருள் பெற்ற பரம்பரையாகக் காட்டிக் கொள்ளவில்லை. அவற்றுக்கு எதிராகப் போராடிய ஒரு விமர்சன மரபாக முன் வைக்கிறார்" என்று மிக ஆழமாகப் படம் பிடித்துள்ளார்.

**– கு. கதிரவன், சேலம்**

# இசுலாமியர்களும், திராவிட இயக்கமும் - ஒரு வரலாற்றுப் பார்வை

● எஸ். அன்வர், சமூக ஆய்வாளர்

1967 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த சமயம். சென்னையை அடுத்து, அச்சிறுப்பாக்கத்திற்கு அருகில் உள்ள பள்ளிப்பேட்டை கிராமத்தில் வசிக்கும் முஸ்லிம்கள், தொழுகைக்காக பள்ளிவாசல் எழுப்புவதற்கு உள்ளூர்வாசிகளிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது. அதற்காக உயிர்பலியாகிறது. தங்கள் உரிமையை விட்டுக் கொடுத்துவிடக் கூடாது என்று முனைப்புடன், நோன்பு பெருநாளுக்கு முந்தைய இரவில் அங்கே குழுமியிருக்கும் முஸ்லிம்களுக்கு, நள்ளிரவில், அவர்கள் பதட்டத்தை அதிகரிக்கும் வண்ணம் அந்த குக்கிராமத்தை நோக்கி வாகனப் படையெடுப்பு. கலவரத்தை எதிர்கொள்ளத் தயாராக கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தின் மகனான மியாகானின் தலைமையில் கூடியிருந்த அந்த சிறு முஸ்லிம் கூட்டத்தினருக்கு வாகனங்கள் அருகில் வர பெருங் குழப்பம். வந்தவையெல்லாம் நீல நிற காவல்துறை வாகனங்கள். அதிலிருந்து இறங்கிய போலீசார், கீற்றுக் கொட்டகை கட்டுவதற்குத் தேவையானவற்றை இறக்கி விட்டு, காலை பெருநாள் தொழுகைக்கு முன்னர் பள்ளிவாசல் எழுப்பப் பட்டிருக்க வேண்டும் என்று தங்களுக்கு மேலிடத்தி லிருந்து உத்தரவு வந்திருப்பதாக மியாகானிடம் கூற, கூடியிருந்த அனைவருக்கும் இன்ப அதிர்ச்சி ஏற்பட்டது. நடந்தது இதுதான்.

முஸ்லிம்கள் பள்ளிவாசல் கட்டுவதற்கு எதிர்ப்பு, அதுவும் தன் கட்சிக்காரர்களாலேயே என்ற செய்தியை அன்று டெல்லியில் இருந்த காயிதே மில்லத்திடம் இருந்து தெரிந்து கொண்ட முதலமைச்சர் அண்ணா உடனடியாக எடுத்த நடவடிக்கைதான் அது. காவலர் பாதுகாப்புடன் பெருநாள் தொழுகையை மன நிறைவுடன் தொழுது முடித்த முஸ்லிம்களுக்கு இன்னொரு ஆச்சரியமும் காத்திருந்தது. தொழுது முடித்த மியாகானை சந்திக்க அருகிலுள்ள பயணியர் விடுதியில் முதல்வர் அண்ணா காத்திருக்கிறார் என்ற செய்திதான் அது. விடுதியில் அண்ணாவுடன் காவல் துறை மற்றும் அரசு அதிகாரிகள் மட்டுமின்றி, இதற்கு முட்டுக்கட்டையாக இருந்த தன் கட்சி அமைச்சர்கள் இருவரும் இருந்தனர். கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டு இருந்த நிலையிலும் அண்ணா இஸ்லாமியருக்கு ஏற்பட்ட இக்கட்டை களைய நேரடியாக களத்தில் இறங்கியிருந்தார். சில மாதங்களிலேயே பேரறிஞர் அண்ணா இறந்து போனார். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியுடன் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த இசுலாமியர்களுடனும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அப்போது முதல் நல்லுறவு இருந்துகொண்டுதான் உள்ளது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வட இந்தியாவின் அரசியல் மதத்தின் அடிப்படையில் வடிவம் பெறத் தொடங்கியது. அதே வேளையில் சென்னை மாகாணத்திலோ பார்ப்பனர்- பார்ப்பனரல்லாதோர் என்ற அடிப்படையில் அரசியல் வடிவம் பெறத் தொடங்கியது. யார் இந்த பார்ப்பனர்கள்? 1920ஆம் ஆண்டில், திராவிட இயக்கத்தின் தொடக்க காலம் அது, அப்போது சென்னை சட்டசபையில் நடந்த ஒரு விவாதம் இதற்கு வெளிச்சம் தருகிறது. நிர்வாகத்தை இந்தியமயமாக்குவது தொடர்பான விவாதம் அது. காவல்துறையில் ஐரோப்பியர்களுடன் சேர்த்து இந்தியர்களுக்கும் சில பொறுப்புகளை வழங்க வேண்டும் என சி.வி. வெங்கட்ரமண ஐயங்கார் ஒரு கோரிக்கையை வைத்தார். காவல்துறை பதவிகளை பார்ப்பனரல்லாதோருக்கும் வழங்க வேண்டுமென நீதிக்கட்சித் தலைவர்களுள் ஒருவரான டாக்டர் நடேசன் விவாதித்தார். பார்ப்பனரல்லாதோர் என்றால் முகமதியர்கள், இந்திய கிறித்துவர்கள், பார்ப்பனரல்லாத இந்துக்கள், ஜெயினர்கள், பார்சீகர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் என்றும் விளக்கமளித்தார். இத்தகைய புரிதலின் அடிப்படையில்தான் இசுலாமியர்களுக்கும், திராவிட இயக்கத்திற்குமான உறவு வடிவமைக்கப்பட்டது.

**பெரியார் இசுலாமிற்கு அளித்த ஆதரவு என்பது நிபந்தனையற்றது அல்ல. இந்து மதத்தில் உள்ள மூட நம்பிக்கைகளுக்கு எதிராக பெரியார் பரப்புரை செய்ததைப்போல இசுலாமில் உள்ள மூட நம்பிக்கைகளையும் கடுமையாக கண்டித்தார்.**

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இசுலாம் அரேபிய தீபகற்பத்தில் வேகமாக பரவியது. அந்த சமயத்தில் தமிழ்நாட்டிற்கும், மேற்கு ஆசியாவிற்கும் இடையில் இருந்த கடல் வழி வர்த்தகத் தொடர்புகள் வழியாக இசுலாம் தமிழ்நாட்டு கரையையும் தொட்டது. அவர்கள் செல்வங்களை கொண்டு வந்து மிளகு அல்லது முத்துக்கள் வாங்கிச்சென்றது மட்டுமின்றி தங்களுக்கான ஒரு சிறப்பான இடத்தையும் கண்டறிந்தனர். அதை Mazbar என்றும் அழைத்தனர். இத்தகைய வர்த்தக உறவின் மூலமே தமிழ் முஸ்லிம்கள் உருவாகினர்.

காலனிய ஆட்சி வளர்ந்து வந்த சமயத்திலும்கூட நூற்றுக்கணக்கான திராவிட இசுலாமிய கட்டடக் கலை பாணியிலான மசூதிகள் உருவாகின. அந்த கால கட்டத்தில் வெளியான இசுலாமியர்களின் கணிசமான இலக்கிய வெளியீடுகளும் தமிழ்ச் சமூகத்தில் அவர்களின் இருப்பிடத்தை உறுதியாக்கியது. இத்தகைய சூழலில்தான் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திராவிட இயக்கம் வடிவம் பெற்றது. அதன் ஒருங்கிணைந்த ஒரு அங்கமாக இசுலாமியர்களும் இருந்தனர்.

நீதிக் கட்சியாக இருந்த போதிலிருந்தே திராவிட இயக்கத்தின் அரசியல் வெளிப்பாடு என்பது சமூக நீதியை காக்க போராடுவதாக இருந்தது. காந்தியின் தலைமையில் காங்கிரஸ் இருந்தபோது, ஒட்டோமான் மன்னரிடமிருந்து கிலாபத்தை பாதுகாப்பதற்கான அலி சகோதரர்கள் தலைமையிலான இயக்கத்திற்கு ஆதரவு அளித்தது. நீதிக்கட்சியும் *கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவளித்தது.

* முதல் உலகப் போரின் முடிவில் வெற்றி பெற்ற பிரிட்டிஷ் இஸ்லாமியர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்ட ஒடுக்குமுறைக்கு எதிராக உருவாக்கப்பட்ட இயக்கம் கிலாபத். 1919இல் இந்தியாவில் முகம்மது அலி, சவுகார் அலி என்ற இருவர் தோற்றுவித்த இயக்கத்துக்கு காந்தி ஆதரவுக் கரம் நீட்டிய ஒத்துழையாமை இயக்கத்துடன் இணைத்து இந்து-முஸ்லிம் ஒற்றுமையை உருவாக்கினார்.

இதற்கிடையில் சென்னை மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பை நீதிக்கட்சி ஏற்ற போது, இசுலாமியர்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியது மட்டுமின்றி, பல்வேறு அலுவலகங்களிலும் அவர்களுக்கான இடத்தை உறுதிப்படுத்தியது. சமூக தேவை களையும் கவனத்தில் கொண்டது. காங்கிரசும், அலி சகோதரர்களும் பிரிந்த சிறிது காலத்தில் கிலாபத் இயக்கமும் குழப்பத்தில் முடிந்தது. காங்கிர சுக்காரராக இருந்தபோது தீண்டாமையை எதிர்த்துப் பேசிவந்த பெரியார், கட்சியில் இருந்த உயர்ஜாதி தன்மையை கண்டு அதிருப்தியடைந்தார். அதனால் காங்கிரசில் இருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டு பின்னர் நீதிக் கட்சியில் இணைந்தார். 1944ஆம் ஆண்டில் நீதிக்கட்சியை திராவிடர் கழகமாக பெயர் மாற்றினார்.

பெரியார் ஒரு நாத்திகராக இருந்தபோதும் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான ஒரு மாற்று மருந்தாக இசுலாத்தை ஆதரித்தார். பெரியாரின் எழுத்துக்களும், பொதுக் கூட்ட மேடைப் பேச்சுக்களும் ஒடுக்கப் பட்டவர்கள் இசுலாமை ஏற்றுக் கொள்ள ஊக்குவித்தன. அதே வேளையில் பெரியார் இசுலா மிற்கு அளித்த ஆதரவு என்பது நிபந்தனையற்றது அல்ல. இந்து மதத்தில் உள்ள மூட நம்பிக்கை களுக்கு எதிராக பெரியார் பரப்புரை செய்ததைப்போல இசுலாமில் உள்ள மூட நம்பிக்கைகளையும் கடுமையாக கண்டித்தார். மொகரம் பண்டிகையின்போது பின் பற்றப்படும் தீமிதி விழா அல்லது சந்தனக்கூடு விழா ஆகியவை இந்துக்கள் கோயில் பண்டிகையின் போது பின் பற்றும் மூடநம்பிக்கைகளைப் போலவே உள்ளது என பெரியார் கண்டித்தார். தாவூத் ஷா போன்ற முசுலிம்களுக்கே இது பிடிக்கவில்லை. இவர் தமிழ் முசுலிம் சமூகத்தின் சீர்திருத்தவாதிகளில் ஒருவராக கருதப்பட்டார் என்பதும் முரண்பட்ட ஒன்று.

ஜின்னாவையும், அவரது தனிநாடு கோரிக்கையையும் பெரியார் ஆதரித்தே வந்தார். 1948ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் தேதி ‘விடுதலை’ நாளேட்டில் பெரம்பூர் (மாயவரம்) கூட்டத் தின் தீர்மானம் இடம் பெற் றுள்ளது. அதில், “முஸ்லிம்கள் எங்களை ஆதரித்தாலோ அல்லது எதிர்த்தாலோ எது நடந்தாலும், நாளை திராவிட நாடு சுயராஜ்யத்தை அடையும் போது அதனால் உங்களுக்குப் பாதிப்பு வராது என உறுதி யளிக்கிறேன். ஏனெனில் இசுலாமியர்களும் திராவிடர் களே என திராவிடர் கழகம் உறுதியாக நம்புகிறது” என்று பெரியார் கூறியுள்ளார்.

அப்போது சட்டமன்றத்தி லும், நாடாளுமன்றத்திலும் திராவிட இயக்கம் இல்லாத குறையை இஸ்மாயில் சாகிப் ஓரளவு நிவர்த்தி செய்தார். இட ஒதுக்கீட்டின் தேவை குறித்து முகமது இஸ்மாயில் சாகிப் தொடர்ந்து வலியுறுத்தினார். இந்தியை தேசிய மொழியாக்க முயற்சித்ததை கண்டித்தும், தாய்மொழியான தமிழை வலியுறுத்தியும் சட்டமன்றத்தில் பேசினார்.

பாகிஸ்தான் பிரிவினையின் போது நாட்டில் ஏற்பட்ட கலவரங்களால் முஸ்லிம் தலைவர்கள் தங்களது கட்சியை கலைக்கவும், அலுவலகங்களை மூடவும் முடிவு செய்தனர். ஆனால் அந்த சூழலிலும் தமிழ் நாட்டில் முஸ்லிம் லீக் தலைவர்கள் சென்னை மாகாண அரசினர் தோட்ட விருந்தினர் மாளிகையில் தங்களது எதிர்கால செயல்பாடுகள் குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்தனர். அப்போது பெரியார், ராஜாஜி இருவருமே இவர்கள் கட்சியை கலைத்து விடுவர் என்றே எண்ணினர். ஆனால் பிரிவினைக்குப் பிந்தைய முஸ்லிம்களின் நிலையைப் பார்த்த முகமது இஸ்மாயில் சாகிப், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்காக தொடர்வது என முடிவு செய்தார்.

கட்சியை கலைத்துவிட்டு காங்கிரசில் இணைய இஸ்மா யில் சாகிப்பிற்கு ஜவஹர்லால் நேரு அழுத்தம் கொடுத்ததாக அவரது பேரனும், காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரியின் தாளாளருமான தாவூத் மியா கான் கூறுகிறார். அத்தகைய **கடினமான சூழலிலும் சென்னை மாகாணத்தில் மட்டுமே முஸ்லிம் லீக்கால் செயல்பட முடிந்தது. அதற்கு அடிப்படையில் திராவிட இயக்கம் காரணமாக இருந்தது.** முஸ்லிம்களின் பிரச்னை களுக்காக திராவிட இயக்கம் எப்போதும் அனுசரனையுடன் இருந்தது. இந்த உறவுதான் பிரிவினைக்குப் பிறகு நாடு முழுவதும் முஸ்லிம்கள் ஓரங்கப் பட்டபோதும், சென்னை மாகாணமாக இருந்தபோதும், பின்னர் தமிழ்நாடாக மாறிய பின்பும் முஸ்லிம்கள் புயலாக செயல்பட காரணமாக அமைந்தது.

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையும், காந்தி படு கொலையிலும் அவர்களுடைய நோக்கம் சென்னை மாகாணத்தில் வீழ்ச்சியில்தான் முடிந்தது. காந்தி படுகொலை செய்யப்பட்ட சமயத்தில் திருவண்ணாமலை, ஈரோடு மற்றும் ராஜபாளையம் பகுதி களில் முசுலிம்களை குறிவைத்து பெரும் கலவரங்களும், திட்டமிட்ட தீ விபத்துகளும் நடந்தேறின. சுமார் 100 முசுலிம் வீடுகள் தீ வைத்து எரிக்கப் பட்டன. 50 கடைகளுக்கு தீ வைக்கப்பட்டது. இதன்மூலம் ஏற்பட்ட இழப்பு சுமார் 50 லட்சம் ரூபாய் இருக்கும் என மதிப்பிடப்பட்டது. சமூக மற்றும் நாடக ஆர்வலரான பிரளயன் திருவண்ணாமலை யில் நடந்த கலவரம் குறித்து கூறுகையில், "கலவரம் நடந்த பிறகு சில திடீர் பணக்காரர்கள் உருவாகினர். கலவரத்தில் கொள்ளையடித்த பணத்தின் மூலம் அவர்கள் பணக்காரர் களாக உருமாறினர். அவர்களை அப்பகுதியில் **காந்தி பணக்காரர்** என்றே அடை யாளப்படுத்தினர்" என்கிறார். அப்போது கடலூரில் சில இடங்களில் கலவரம் நடந்த போது திராவிடர் கழகம் நிவாரணப் பணிகளை மேற் கொண்டது என நினைவு கூர்கிறார் முஸ்தபா மரைக்காயர். இவர் பிறகு சிங்கப்பூருக்கு குடிபெயர்ந்து விட்டார்.

இசுலாமியர்கள் அனு பவித்து வந்த பல உரிமைகள் மற்றும் சலுகைகள் இந்திய விடுதலைக்குப் பிறகு காங்கிரசு ஆட்சியில் பறிக்கப்பட்டது. அரசு முகம்மது கல்லூரியில் முசுலிம்களுக்கான இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டது. பொது மகளிர் கல்லூரியாகவும் மாற்றம் செய்யப்பட்டது. இதே போல் நீதிக் கட்சியின் ஆட்சி யின் போது தொடங்கப்பட்ட யுனானி மருத்துவத்திற்கான பள்ளியும் மூடப்பட்டது. ஆற்காடு இளவரசர் மற்றும் தலைமை காஜியின் குடியிருப்பு களில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதா என சோதனைகள் மேற்கொள்ளப் பட்டது. காவல்துறை பட்டாலியன் அமைப்புக்குள் முசுலிம்கள் வருவதை அரசு தடை செய்ததையும் மிக மோசமான முடிவுகளாக அப்போது பார்க்கப்பட்டது. 1952ஆம் ஆண்டின் தொடக்கத் தில் கோபால் ரெட்டி சென்னை மாகாண நிதி அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர்தான் இந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டது.

**இசுலாமியர்கள் அனுபவித்து வந்த பல உரிமைகள் மற்றும் சலுகைகள் இந்திய விடுதலைக்குப் பிறகு காங்கிரசு ஆட்சியில் பறிக்கப்பட்டது.**

இத்தகைய சிக்கலான காலங் களில் பெரியார் இசுலாத்தை தொடர்ந்து ஆதரித்து வந்துள்ளார். அப்போது பெரியாரிடம் இருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தை அண்ணா கண்டிருந்த நிலையில் அவரும் முசுலிம் களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார். திராவிடர் கழகத்தைப் போல நாத்திகத்தை வலியுறுத்தாமல், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என திராவிட முன்னேற்ற கழகம் தனது கொள்கையை முன்வைத்ததால் அந்தக் கொள்கையும் தேர்தல் அரசியலில் பங்கேற்க வேண்டுமென்ற திட்டமும் முசுலிம்களிடையே தி.மு.க. விடம் நெருக்கத்தை அதிகரித் தது.

காங்கிரசு ஆட்சியில் முசுலிம் களுக்கு இழைக்கப்பட்ட பல்வேறு அநீதிகளை அண்ணா சுட்டிக்காட்டினார். குறிப்பாக, பிரபலமான முசுலிம்கள் பலர் காங்கிரஸ் கட்சியில் இருந்த போதும் அவர்களுக்கு அமைச் சரவையில் இழைக்கப்பட்ட அநீதியை அண்ணா சுட்டிக் காட்டினார். 1946ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு வரை காங்கிரசு ஆட்சியில் ஒரு முசுலிம் கூட அமைச்சராக நியமிக்கப்படவில்லை. 1962ஆம் ஆண்டில் காமராஜர் தலைமை யிலான காங்கிரசு அரசு அமைந்த போதுதான் அப்துல் மஜீத் அமைச்சராக நியமிக்கப் பட்டார். இந்த காலகட்டத்தில் காங்கிரசு எந்த ஒரு முசுலிமையும் சட்டமன்ற வேட்பாளராக நியமிக்க வில்லை. ஆனால் திமுக அணியில் இந்திய யூனியன் முசுலிம் லீக்கை சேர்ந்த திருச்சி அப்துல் வாஹப் ஜானி 1962ஆம் ஆண்டில் சட்டசபை உறுப் பினராக இருந்தார். 1980 வரையில் மேலும் 2முறையும் திமுக ஆதரவுடன் அவர் சட்டசபை உறுப்பினராக தேர்வானார்.

1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டங் களுக்குப் பிறகு தமிழ் முசுலிம் பங்கேற்பில் மீண்டும் ஒரு எழுச்சி காணப் பட்டது. திமுகவில் சிறு பான்மையினர் பிரிவு தொடங்க வேண்டுமென பொதுக் குழு கூட்டத்தில் கோரிக்கைகள் எழுந்தன. ஆனால் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப்

இருக்கும் வரை திமுகவில் சிறுபான்மையினர் பிரிவு தொடங்கத் தேவையில்லை என அண்ணா மறுத்து விட்டார். 1967ஆம் ஆண்டில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்குடன் கூட்டணி அமைத்தே திமுக சட்டமன்றத் தேர்தலை எதிர் கொண்டது. அண்ணா வைத் தொடர்ந்து அதே மரபை கலைஞர் கருணாநிதியும் பின்பற்றினார்.

திமுக ஆட்சிக்கு வந்தபிறகு மிலாது நபிக்கு அரசு விடுமுறை அளித்தார் கலைஞர். இசுலா மியர்களை பிற்படுத்தப்பட் டோர் பட்டியலில் இணைத்து அவர்களுக்கான இடஒதுக் கீட்டையும் கலைஞர் உறுதி செய்தார். யுனானி மருத்துவ முறையை மீண்டும் அறிமுகப் படுத்தினார். காங்கிரசு ஆட்சிக் காலத்தில் அரசால் கையகப் படுத்தப்பட்டு பெண்கள் கல்லூரி என பெயர் மாற்றப் பட்ட முகம்மது கல்லூரிக்கு காயிதே மில்லத் பெண்கள் கல்லூரி எனப் பெயர் சூட்டினார் கலைஞர் கருணாநிதி. அதுமட்டுமின்றி சென்னை புறநகரில் புதிய கல்லூரி ஒன்றை கட்டுவதற்கும் இலவசமாக நிலம் ஒதுக்கினார். அந்த இடத்தில்தான் தற்போது காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரி இயங்கி வருகிறது.

1980களில் தமிழ்நாட்டில் இருந்து பல முஸ்லிம்கள் மேற்கு ஆசிய நாடுகளுக்கு எண்ணெய் உற்பத்தி வேலைகளுக்காக சென்றனர். அரபு நாடுகளில் அவர்களுக்கு ஏராளமான தொழில் வாய்ப்புகளும் கிடைத்தன. அந்த சமயத்தில் தான் மீனாட்சிபுரம் கிராமத்தில் ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட மக்களும் இசுலாத்திற்கு மதம் மாறினர். எம்ஜிஆர் தனது மத நம்பிக்கைகளை வெளிப் படுத்தும் விதமாக மூகாம்பிகை கோயிலுக்கு சென்றதும், ராமர் கோயில் கட்டுவதற்காக கரசேவைக்கு ஜெயலலிதா தொண்டர்களை அனுப்பியதும் தமிழகத்தில் அடிப்படைவாதம் வளர்வதற்கு அடித்தளமாக அமைந்தன.

திமுக பெரும் சவால்களை எதிர்கொண்டிருந்த நிலையில் எண்ணற்ற இளைஞர்கள், நாட் டிலும் வெளியிலும் அரசியலில் இருந்து துண்டிக்கப்பட்டு இருப்பதாக இசுலாமிய இளைஞர்களும் உணர்ந்தனர். புதிதாக உருவாகி வந்த வஹாபி அல்லது சலாஃபி போன்ற மிகவும் கண்டிப்பான அமைப் புகள் அவர்களின் பூரண தேர்வாக இருந்தன. மற்ற இளைஞர்களைப் போலல்லா மல், முசுலிம் இளைஞர்கள் கலை, பொழுதுபோக்கு போன்றவற்றில் நேரம் ஒதுக்குவதையும் தவிர்த்தனர். இது ஒடுக்கு முறைக்கு உள்ளான முஸ்லிம் களை மைய நீரோட்டத்தில் இருந்து மேலும் விலக்கியது. ஏனெனில் **புதிதாக உருவான அந்த கண்டிப்பான முசுலிம் இயக்கங்கள் கலை, இலக்கியம், சினிமா, இசை போன்றவை இசுலாத்தில் ஹராம் (தடை) செய்யப் பட்டவை என கூறின. இதுவே மைய நீரோட்டத்தில் இருந்து அவர்கள் விலகவும் காரணமாக இருந்தது.** அவர்களின் வேர்களை அவர்களே வெட்டிக் கொண்டது போல அமைந்தது.

ஆனால் அப்படிப் பட்ட காலகட்டத்திலும் கூட 1995ஆம் ஆண்டில் பெரம்பலூரைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் இளைஞர் அப்துல் ரவூஃப் ஈழத் தமிழர் பிரச்னைக்காக தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். ஈழத் தமிழர் பிரச்னைக்காக தமிழகத்தில் நடந்த முதல் தீக்குளிப்புச் சம்பவமும் அதுவே.

அப்போது முதல் இப்போது வரை இசுலாமிய அமைப்புகள் திராவிட அமைப்புகளுடனும், அரசியல் கட்சிகளும் இணைந்தே பயணித்து வரு கின்றன. மற்ற மாநிலங்களைப் போலல்லாமல் தமிழ்நாட்டில் மதக்கலவரம் என்ற பேச்சுக்கே இடமில்லாத நிலையை ஏற்படுத்தியதற்கு நூறாண்டு களுக்கு மேலாக நீடித்து வரும் இந்த உறவே காரணமாய் அமைந்துள்ளது. இப்போதும் கூட அயோத்தியில் இசுலாமி யர்களுக்கு உச்ச நீதிமன்றம் இழைத்த அநீதியான தீர்ப்பை எதிர்த்து உரக்கக் குரல் கொடுக்கும் மண்ணாக தமிழகம் மட்டுமே இருக்கிறது. அயோத்தி தீர்ப்பை கண்டித்து இசுலாமிய அமைப்புகள் மட்டுமன்றி பெரியாரிய அமைப்புகளும், பல் வேறு முற்போக்கு அமைப்பு களும் போராட்ட களங்களை கண்டு வருகின்றன.

கடவுள் மறுப்பு என்பது பெரியார் இயக்கத்தின் கொள்கையாய் இருந்தாலும், இந்து மத இழிவில் இருந்து ஒடுக்கப்பட்டவர்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்ற எண்ணமும், இசுலாமி யர்களின் மீது பார்ப்பனர்கள் காட்டிய வன்மையான ஒடுக்கு முறைகளுமே இசுலாமியர் களுக்கும் திராவிட இயக்கத் திற்கும் ஒரு ஆழமான பிணைப்பை ஏற்படுத்தியுள்ளது.

- டெல்லி அம்பேத்கர் பல்கலைக்கழகம் 2018இல் நடத்திய திராவிட இயக்கம் குறித்த ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதி.
தமிழில் : ர. பிரகாசு

*சுற்றுச் சூழலில் ஜாதியம் – பார்ப்பனியம்* (2)

# 'நிலம்–நீர்–காற்று–தீ'யிலும் தீண்டாமை சூழ்ந்து நிற்கிறது

● நக்கீரன்

*பெரியார் கேட்டார் : "நெருப்பென்றால் என்னவென்று தெரியாத காலத்தில் 'சக்கிமுக்கி' கற்களால் நெருப்பை உண்டாக்கியவன், அந்தக் காலத்துக் கடவுள்தான்; 'அந்தக் காலத்து எடிசன்'தான். அதைவிட மேலான வத்திப்பெட்டி வந்தபிறகு எவனாவது சக்கிமுக்கி கல்லைத் தேடிக்கொண்டு திரிவானா?" (17.10.1948, திருவொற்றியூர்)*

**ஐம்பூதங்களில் தீண்டாமை**

அனைத்து வகைமைகளிலும் 'இயல்பு' என்பதற்கு எதிராக 'மீவியல்பு' என்கிற தன்மை உண்டு என்பார் மானுடவியல் அறிஞர் விக்டர் டர்னர். அதன்படி மீவியல்பு மனிதர்கள் (Liminal Persons), மீவியல்பு காலங்கள் (Liminal Periods), மீவியல்பு வெளிகள் (Liminal Spaces) ஆகியவை உள்ளன. மந்திரவாதி, பைத்தியம், குஷ்டரோகி முதலிய மனிதர்கள் மீவியல்பு மனிதர்கள். நடுநிசி போன்ற அச்சுறுத்தும் காலம் மீவியல்பு காலம். சுடுகாடு, பாழுங்கிணறு, பாழடைந்த பங்களா போன்றவை மீவியல் இடங்கள். இது உலகெங்கும் காணப்படும் நிலையே. ஆனால் ஆரியவர்த்தத்தில் இது சாதிய கட்டமைப்புகளாக மாறின. இங்கு மீவியல்பு மனிதர்களாக, தீண்டபடாதோர் அமைந்தனர். அவர்களுக்குரிய மீவியல்பு இடமாகச் சேரிகள் ஒதுக்கப்பட்டன (தி.கு.இரவிச்சந்திரன், 2014).

திசைகளில் சாதியத்தை உறுதி செய்தவாறே இயற்கையின் கூறுகளான ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிலும் சாதியம் தன் தடத்தைப் பதித்தது. நிலத்தை நுகர்தல், நீரைச் சுவைத்தல், காற்றைத் தீண்டுதல், நெருப்பைப் பார்த்தல், வெளியைக் கேட்டல் எனத் தீண்டாமையின் எல்லை விரிவடைந்தது. நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகியவை சாதியக் கருத்தியல் படிந்து அவை மாசடைந்தன.

**நிலம்:**

சண்டாளர் ஆளைத் தொட்டால் மட்டுமல்ல, நிலத்தைத் தொட்டாலும் தீட்டே. ஊருக்கு வெளியே மரத்தடி, சுடுகாடு, மலையடிவாரம், காடுகளின் ஓரம் போன்றவை பஞ்சமர்களுக்கான வசிப்பிடங்கள் ஆக்கப் பட்டன (மனு,10:39). ஊரின் எல்லைக்குள் சண்டாளர் நுழைந்தால் வேதம் ஓதுவது நிறுத்தப் பட்டது. மனுவின் காலத்தில் தெருவுக்குள் நுழையும் சண்டாளர் தம் முதுகில் ஒரு மரக் கொப்பினைக் கட்டிக்கொண்டு வரவேண்டும். நிலத்தில் படியும் அவர்களுடைய கால் தடத்தை அது துடைப்பம் போல் அழித்துக்கொண்டே வரும்.

தமிழகத்தில் பெருங்கோயிலை மையமாகக் கொண்ட நகரமைப்பிலும் சாதிய நில ஒதுக்கீடு இருந்தது. கோயிலைச் சுற்றியுள்ள மாடவீதி பார்ப்பனர்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கடுத்த ரத வீதி வேளாளர்களுக்கும்; அதற்கடுத்த பகுதிகள், சந்துகள் ஆகியவை கோயிலுடன் தொடர்புடைய சேவை சாதி களுக்கும் இருப்பிடமாக இருந்தன. தாழ்த்தப்பட்டவர்களுக்கான குடியிருப்பு மட்டும் ஊருக்கு வெளியே ‘சேரியாக’ அமைந்திருந்தது என்று இதனை விளக்குவார் தொ. பரமசிவம் (தி.கு. இரவிச்சந்திரன், 2014).

கேரளாவின் புகழ்பெற்ற வைக்கம் போராட்டத்தில் குறிப்பிட்ட ஒருசாலையில் நடக்க ஈழவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அது பொதுப்பணத்தில் அமைக்கப்பட்ட சாலை. அங்கிருந்த சட்டப்படியான நிலை இதுதான்: மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருந்த சாலைகளை A, B என இருவகைகளாகப் பிரித்திருந்தனர். A வகைச் சாலைகளை அனைத்து வகுப்பினரும் எந்த வேறுபாடுமின்றிப் பயன் படுத்தலாம். ஆனா B சாலைகளைக் குறிப்பிட்ட சில சாதியினர் மட்டுமே பயன்படுத்தலாம். வைக்கத்தில் கோயிலை ஒட்டியிருந்த சிக்கலுக் குரிய அந்தச் சாலை B வகுப்பு சாலை. எனவே கீழ்சாதி மக்கள் அதைப் பயன்படுத்து வதிலிருந்து தடுப்பது அரசின் கடமை எனக் கூறப்பட்டது (பி.சிதம்பரம் பிள்ளை, 2013).

கேரளத்தில் சென்ற நூற்றாண்டு வரை தீண்டாமை உச்சத்தில் இருந்தது. தாழ்த்தப் பட்டவர் நம்பூதிரிகளிடம் இருந்து நிலத்தில் எவ்வளவு தொலைவு விலகியிருக்க வேண்டும் என்பதற்குக் கணக்கிருந்தது. ஈழவர்கள் 20-36 அடிகள்; செருமான்களும் புலையர்களும் 64 அடிகள்; நாயாடிகள் 72 அடிகள் தள்ளி நிற்க வேண்டும் (ப்ரஜ் ரஞ்சன் மணி, 2018).

கோவில் குடமுழுக்கும் நிலத்தின் தீட்டுக் கழிக்கும் செயலே. கீழ்சாதி மக்களின் உழைப்பில் உருவான கோயில் நிலத்தின் தீட்டினைக் கழிப்பதே அச்சடங்கு. புதுமனை புகுவிழாவிலும் வீட்டுக்குள் மாடு நுழைதல் என்பது நிலத் தீட்டுக் கழிப்பின் அடையாளம் (தி.கு.இரவிச்சந்திரன், 2014). ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் ஏன், இந்திய ஒன்றியக் குடியரசின் தலைவராகவே இருந்தாலும் அவர் ஒரு ‘தலித்’ என்றால் அவர் புனித இடத்துக்கு வந்து சென்றதும் அந்நிலத்தின் தீட்டுக்கழிக்கும் செயல் நடப்பதை இன்றும் காண்கிறோம்.

**நீர்:**

தூய நீர் மின்சாரம் கடத்தாது. அதில் கரைந்துள்ள அயனிகளால்தான் அவை மின் கடத்தியாக மாறுகிறது. இதேபோல் தூய மானுடம் தீட்டுக் கடத்தாது. ஆனால் அதற்குள் சாதி கரைந்தால் தீட்டுக் கடத்தியாக மாறுகிறது. சாதியம் கரைந்துள்ள சனாதன மதம் நீரையும் தீட்டுக் கடத்தியாக மாற்றியுள்ளது. ஒரு தாழ்த்தப்பட்டவர் நீரைத் தீண்டினால் அது தீட்டாகிவிடுகிறது. ஆனால் அதே நீரால் அவரிருந்த இடத்தைக் கழுவினால் தீட்டு நீங்கிவிடுகிறது. இந்த அரிய கண்டுப்பிடிப்புக்கு எப்படி இன்னும் நோபல் பரிசு வழங்கப்படாமல் இருக்கிறது என்று தெரியவில்லை ?

‘சண்டாளனுடைய கிணற்று நீரைச் சண்டாளர்களே அனுபவிக்க முடியும்’ என்றது அர்த்த சாஸ்திரம் (1:14). கிணறு மட்டுமல்ல தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிக் குளங்களும் ஒதுக்கப்பட்டு, பொதுக் குளங்கள் தீண்டாமையைக் கடைப்பிடித்தன. மகாராட்டிரா

மகார் நகரின் 'சௌதார் பொதுக்குள'த்தில் டாக்டர் அம்பேத்கர் தலைமையில் தலித் மக்கள் திரண்டு நீரெடுத்த வரலாற்றை அறிவோம். அதன் பின்னரும் ஒரு வரலாற்று நிகழ்வு நடந்தது. சௌதார் குளத்து நீர் தீட்டானதால் பார்ப்பனர்கள் அக்குளத்திலிருந்து 108 குடம் நீரெடுத்துச் சாணம், கோமியத்தை அதில் கரைத்து மீண்டும் குளத்தில் கொட்டி தீட்டை நீக்கினர் (ஆ.சிவசுப்பிரமணியன், 2016). ஏனெனில் தீட்டான நீருக்கு 'பஞ்சகவ்யம்'தான் தீட்டுநீக்கி என்று 'சம்வார்த்த ஸ்மிருதி (183) கூறியுள்ளது (தி.கு. இரவிச்சந்திரன், 2014).

குளங்களில் மட்டுமல்ல ஓடுகின்ற நீரான ஆறுகள் வாய்க்காலிலும் சாதிகள் இருந்தன. தமிழகத்தில் சேரிகள் எப்போதும் பள்ளமான பகுதியிலேயே அமைந்திருந்தன. இதுவும் நீர்த் தீண்டாமையே. ஊரின் மேட்டுப்பகுதியில் வசித்த உயர்சாதியினர் புழங்கிய நீரைதான் பள்ளப் பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்துமாறு வசிப்பிடங்கள் அமைக்கப் பட்டிருந்தன. ஓர் ஊரின் தாழ்த்தப்பட்ட மக்கள் புழங்கிய நீர்தானே அதற்கடுத்த ஊரின் மேட்டுப் பகுதிக்குச் செல்லும்? அங்குள்ள உயர்சாதி மக்கள் அதைதானே பயன்படுத்த வேண்டும்? என்ன அறிவோ தெரியவில்லை!

'அன்று டைனசோர் குடித்த நீரைத்தான் இன்று நாம் குடிக்கிறோம்' என்கிறது அறிவியல். உலகம் தோன்றியபோது இருந்த நீர் மூலக் கூறுகளே இன்றும் நீர்ச்சுழற்சியில் சுழன்று வருகின்றன. உண்மையைச் சொன்னால் அது டைனசோரின் சிறுநீரில் இருந்த மூலக்கூறாகவும் இருக்கலாம். நாம் குடித்த நீர் மூலக்கூறுகளை விலங்குகளும் குடிக்கலாம். அவ்வகையில் ஒவ்வொரு மனிதரும் பிறர் குடித்த நீரையே குடிக்கின்றோம். இதில் சாதி கலந்த நீர் மூலக்கூறினை எப்படிக் கண்டுப்பிடிப்பது?

நாம் விடும் மூச்சுக்காற்றிலும் நீர் மூலக் கூறுகள் உண்டு. மூச்சுக்காற்று எல்லா மனிதர்களின் மூச்சிலும் புகுந்து வெளிவருகிறது. ஒரு தாழ்த்தப்பட்டவரின் மூச்சில் புகுந்து வெளிவந்த நீர் மூலக்கூறுகள்தான் ஆதிக்கச் சாதியினரின் மூச்சிலும் புகுந்து வெளிவருகிறது. இதற்காக மூச்சு நிறுத்திக்கொள்ளப்படுமா? நீர்த் தீண்டாமை குறித்துப் பேசுவது எல்லாம் வேத இலக்கியம்தான், நம் சங்க இலக்கியங்கள் அல்ல என்பதைச் சாதியத் தமிழர்கள் நினைவு கொள்ள வேண்டும்.

**தமிழகத்தில் பெருங்கோயிலை மையமாகக் கொண்ட நகரமைப்பிலும் சாதிய நில ஒதுக்கீடு இருந்தது. கோயிலைச் சுற்றியுள்ள மாடவீதி பார்ப்பனர்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது.**

### தீ:

வைதீக வழிபாடு என்பது 'அக்னி' வழிபாடு. குளிர்ப்பகுதியில் வசித்தபோது 'சூரிய பகவான்' இல்லாத நேரங்களில் வெம்மைக்கு 'அக்னி பகவான்' உதவியாக இருந்தார். அது வழி பாட்டிலும் எதிரொலித்தது. ஒவ்வொரு வழிபாட்டு நிலைக்கும் தீ மூட்ட வேண்டும். அத்தீயிடையே படையல்கள் கொட்டப்பட வேண்டும். அவை கடவுளர்களால் உண்ணப்படும் (பி.டி.எஸ்.அய்யங்கார், 1989).

அக்னி வழிப்பாட்டின் சடங்கியல் முறை பின்னர்க் கருத்தியல் நிலைக்கு நகர்த்தப்பட்டது. சதி எனும் உடன்கட்டை ஏறுதலில் பெண் தீயில் தள்ளப்பட்டு தெய்வத் தன்மை பெற்றாள். உடன்கட்டை ஏறுதலிலும் அக்னி பகவான் சாதி வேறுபாடு காட்டினார். கி.பி. ஆயிரமாம் ஆண்டளவில் எழுதப்பட்ட பத்மபுராணம் சத்திரியப் பெண்கள் உடன்கட்டை ஏறினால் மேன்மையானவர்கள் என்றது. அதே செயலை பார்ப்பனப் பெண்கள் செய்யக்கூடாது. அவ்விதம் செய்ய உதவுபவர்கள் 'பிரம்மஹத்தி' (பார்ப்பனக் கொலை) செய்தவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று அச்சுறுத்தியது. இதுபோல்தான் தீக்குளிக்கும் செயலும் (அல்லது சோதியில் ஐக்கியமாதல்) பறையரைப் பார்ப்பனராக உயர்த்தியது (டோனி வெண்டிகர், 2016).

அக்னிதான் காடுகளை வேளாண் நிலமாக்க அவற்றை எரித்துக் காட்டுயிர்களையும் பழங்குடி களையும் அழித்தது. பிழைத்தவர்கள் 'அவர்ணகள்' ஆக்கப்பட்டனர். இதனாலேயே பழங்குடி மக்களுக்கு அக்கினி வழிபாடான 'வேள்வித்தீ' மீது எதிர்ப்புணர்வு இருந்தது. இதை இராமயணத்தில் காணலாம். முனிவர்களின் ஆரண்ய வாசத்தின்போது அவர்கள் நடத்திய வேள்வியைப் பழங்குடிகள் எதிர்த்தனர். இராமனிடம் உதவிகேட்டு சென்ற முனிகள், "தெய்வத்தன்மை வாய்ந்த வேள்வித் தீயில் பலி

உணவுகளைப் படைக்கும் நிலையில் யாகக் கலசத்தைத் தூக்கி எறிகின்றனர். தண்ணீர் ஊற்றி வேள்வித் தீயை அணைக்கின்றனர். பானை களையும் உடைத்தெறிகின்றனர்" என்று புகார் தெரி வித்தனர். இது ஆரியரின் தீ வழிபாட்டு முறைக்கு இருந்த எதிர்ப்பின் பதிவாகும். தொடர் விளைவாகப் பாரதப் போருக்கு பின்னர் 'தீ' வழிப்பாட்டு முறை வழக்கிழந்தது என்கிறார் பி.டி.சீனிவாச அய்யங்கார் (பி.டி.எஸ்.அய்யங்கார், 1989).

**காற்று:**

தீண்டாமையின் முற்றிய நிலை காற்றுத் தீண்டாமை. சண்டாளர் மீது பட்ட காற்றுத் தம் மேல் பட்டால் தீட்டு எனப்பட்டது. எனவே காற்று வரும் திசையில் அவர்கள் வரக்கூடாது. சண்டாளர்களைத் தொட்டக் காற்று ஊருக் குள்ளும் வரக்கூடாது என்பதால் நடைமுறையில் காற்றடிக்கும் திசைப் பார்த்து 'சேரி' உருவாக்கப் பட்டது.

காற்று தீண்டாமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு பிட்சாடனர் உருவம். முன்பு சண்டாளர்கள் ஊருக்குள் வருவதை அறிவிக்கக் கால்களில் மணிகளைக் கட்டும் வழக்கம் இருந்துள்ளது. அந்த மணியோசை காற்றில் பரவி சண்டாளரின் வருகையை ஊருக்குள் அறிவிக்கும். உடனே மேல்சாதி மக்கள் தங்களை அவர்களுடைய பார்வையிலிருந்து மறைத்துக் கொள்வர். சோழர்கால வெண்கல படிமங்களில் சிவன் பிட்சாடனர் மூர்த்தியாக வரும்போது அவருடைய ஒரு காலில் மணி கட்டப்பட் டிருப்பதைக் காணலாம். பிட்சாடனர் என்பது சண்டாளரின் வடிவம் (டோனி வெண்டிகர், 2016).

**வானம்:**

வானில் என்ன வகையான தீண்டாமை இருக்க முடியும்? என்ற கேள்வி எழலாம். எல்லா தெய்வலோகங்களும், சொர்க்கமும் நரகமும் அங்கேதானே உள்ளன. இவற்றில் நரகம்தானே சூத்திரர்களுக்கான 'இட ஒதுக்கீடு'. ஆகாயம் எப்போதுமே பரிசுத்தமான இடம். ஒருமுறை விஸ்வாமித்திரர் சண்டாளன் கையிலிருந்த நாயின் முழங்கால் மாமிசத்தை வாங்குகிறார். ஆனாலும் பாபம் அவரை அண்டவில்லை (மனு.10:97). இதை விளக்கும்போது மனு கூறுகிறார்: "ஆகாசத்தில் வீசப்பட்ட சேறு ஆகாசத்தை அழுக்காக்க இயலுமா? அவ்வாறே பார்ப்பனரும் தூய்மை கெட மாட்டார் (மனு.10:93). இங்குப் பார்ப்பனரின் தூய்மையுடன் வானம் ஒப்பிடப்படுவதை நோக்கவும். அவ்வகையில் வான்வெளி பார்ப் பனருக்குரிய 'பரிசுத்த' இடமாக மாற்றப்படுகிறது.

வேதகாலப் பார்ப்பனியத்தின் பிரபஞ்சமாகக் கிராமம், குழுமம், குடும்பம், வேள்வி ஆகியவை இருந்தன. சமகாலப் பார்ப்பனியத்தில் நவீன அரசும் இந்து தேசியமும் அதன் பிரபஞ்சமாக அமைந்துள்ளன. முன்பு அவர்களிடத்து இருந்த வேள்வி செய்யும் உரிமை தற்காலத்தில் உயர் அறிவியல் துறையின் உரிமையாக மாற்றம் பெற்றுள்ளது. உயர் அறிவியல் துறை அவர்களுடைய எழுதப்படாத உரிமையாக மாறியுள்ளது (ராமானுஜம், 2016). குறிப்பாக அணுவாற்றல் துறையில் ஆபத்தான கீழ்மட்ட பணிகளைச் செய்பவர்களை, 'ஒளிரும் அடிமைகள் (Glow Slaves) என்றழைப்பர். இவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்டவர்களாகவோ, ஏழை களாகவோ உள்ளனர். ஆனால் உயர்பொறுப்பில் இருப்பவர்கள் பெரும்பாலோர் பார்ப்பனராகவே உள்ளனர். (சுப.உதயகுமார், 2013). இது வான் தீண்டாமையின் அடையாளமே!

* * *

**சுற்றுச்சூழல் பாதுகாப்பும் தீண்டாமையும்**

தீண்டாமை இரு வடிவங்களில் இயங்கும். ஒன்று அகச்சார்பு (Subjective) தீண்டாமை. மற்றொன்று புறச்சார்பு (Objective) தீண்டாமை. தன்னைப் புனிதமாக்கிக் கொள்ள மற்றமையை விலக்குவது அகச்சார்புத் தீண்டாமை. மலம், மனிதர் போன்றவை அந்த மற்றமையாகும். புறச்சார்புத் தீண்டாமை என்பது புனிதத்தில் இருந்து தன்னை விலக்கிக் கொள்வது. கோவில், வழிப்பாட்டுப் பொருட்கள் போன்றவையே அப்புனிதம். இவ்விரண்டிலும் அகச்சார்பு தீண்டாமையே வழக்கத்தில் மிகுந்துள்ளது (தி.கு.இரவிச்சந்திரன், 2014).

இருவகைத் தீண்டாமையிலும் 'தூய்மை'யே மையப் பங்கு வகிக்கிறது. தூய்மை சுற்றுச்சூழலோடு தொடர்புடையது. காட்டில் வாழும் சில விலங்குகளைத் 'துப்புரவு விலங்குகள்' என்றழைப்பர். அவற்றின் பணி சூழல் மாசடையாமல் காப்பதே. புலி தன் இரைவிலங்கை வீழ்த்தினால் அதன் இறைச்சியை முழுமையாக உண்ணாது. பசிக்குப் போக மீதியை வைத்துவிடும். அவ்விலங்கின் பிணம் அப்படியே கிடந்தால்

நச்சுயிரிகள் பெருகி மற்ற உயிரினங்களுக்கு ஆபத்தாகிவிடும். இந்நிலையில்தான் 'துப்புரவு விலங்குகள்' உதவிக்கு வருகின்றன. செந்நாய்கள் மீதி இறைச்சியைத் தின்னும். அவை மிச்சம் வைத்ததைப் பாறு முதலிய கழுகுகளும் காகங்களும் தின்னும். எலும்பையும் தோலையும் தின்ன கழுதைப்புலி வரும். கடையில் துளியும் தடயமின்றி எறும்புகள் தூய்மையாக்கிவிடும். எனவே துப்புரவு விலங்குகளுக்குச் சூழலியலில் பெரும் மதிப்புண்டு. ஆனால் இதே சூழல் காக்கும் துப்புரவுப் பணியை மனிதர்கள் செய்தால் சாதிய சமூகத்தில் அவர்கள் இழிபிறவிகள் ஆக்கப் பட்டனர்.

நம் ஊரமைப்பில் 'கழிப்பிடம்' வீட்டுக்கு வெளியே அமைந்திருந்தது. இதனால்தான் 'வெளி'க்கு போவது என்பது மலம் கழிக்கச் செல்வதைக் குறித்தது. புழங்குவெளி மிகுதி யாகவும் மக்கள் தொகை குறைவாகவும் இருந்த ஒரு வெப்ப மண்டல நாட்டில் இவ்வழக்கமும் அன்று இயல்பாக இருந்தது. இந்தச் சூழலியல் அமைவுதான் சாதியமாக உருவெடுத்தது. உடலிலிருந்து வெளியேறும் மலம் எவ்வளவு தூய்மையற்றதோ அந்தளவுக்குச் சமூகக் கட்டமைப்புக்கு வெளியிலிருந்த சண்டாளர்களும் தூய்மையற்றவர்கள் ஆக்கப்பட்டனர். அவர்கள் மலத்தோடு ஒப்பிடப்பட்டனர். இந்தத் தீண்டாமை நிலை குறித்துப் பெரியார் வேதனையுடன் சொன்னார்: "மல உபாதைக்குச் சென்றவன் அந்தப் பாகத்தை மட்டும் கழுவிச் சுத்தம் செய்கிறான். ஆனால் இன்னொரு மனிதரைத் தொட்டுவிட்டால் உடல் முழுக்க நனைத்துக் குளிக்கிறான்" *(29.09.1929).*

உண்மையில் ஈக்களுக்கு அளிக்கப்பட்ட மரியாதைகூட மனிதருக்கு வழங்கப்படவில்லை. ஈக்கள் மலத்தில் அமர்பவை. அவற்றுக்கு என்ன தீட்டு வைத்துள்ளனர் என்று பார்த்தால் அவை அழுக்கில் அமர்பவையாக இருந்தாலும் ஈக்கள் மேலே அமர்ந்தால் குளிக்க வேண்டியதில்லை என்கிறார் மனு *(5:133).*

மலம். சிறுநீர், சளி, எச்சில், மாதவிலக்கு ஆகிய உடல் கழிவுகள் அனைத்தும் தூய்மை யற்றவை என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் அவற்றுக்குச் சாதி இருந்ததுதான் கொடுமை. பார்ப்பனரின் எச்சிலாக இருந்தால் அதனைச் சூத்திரன் கையேந்தி வாங்க வேண்டும் என்று ஆபஸ்தம்பத் தர்ம சூத்திரம் கூறுகிறது (ஜோசப் இடமருகு, 2017). இந்த அநீதிக் கண்டு ஆத்திரமடையும் ஒரு சூத்திரர் பார்ப்பனரைப் பார்த்து காரி உமிழ்ந்தால் என்ன தண்டனைத் தெரியுமா? அவருடைய உதடுகளை அறுக்க வேண்டும் *(மனு. 8:282).*

மொத்தத்தில் புனிதம் X தீட்டு என்கிற கருத்தாக்கம் இயற்கையின் சொத்துக்களைக் கைப்பற்றிச் சுற்றுச்சூழலின் மீது ஆதிக்கம் செலுத்தவே உருவாக்கப்பட்டிருப்பது தெளிவு. பார்ப்பனர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இது மற்ற சாதியினரிடையேயும் பரவியதன் விளைவாக இன்று நீர், நிலம் இரண்டுமே ஆதிக்கச் சாதியினரின் உடமையாக விளங்குகிறது. இதனால் இவர்கள் தம்மைப் பார்ப்பனர் தகுதிக்குக் கற்பனை செய்து கொள்கிறார்கள்.


ஒன்றை தெளிவாக அறிதல் நலம். பார்ப்பனர் தூய்மையானவர் என்பதால் 'சவர்ணர்' என அழைக்கப்பட்டனர். சதுர்வர்ணத்துக்கு உட்பட்டிருந்தாலும் சூத்திரர் தூய்மையானவர் அல்ல. அவர்ணர் எனப்படும் சண்டாளரைக் காட்டிலும் கொஞ்சம் தூய்மை யானவர், அவ்வளவுதான். மொத்தத்தில் இருவரும் இழிபிறப்பே. அதிலும் தென்னிந்தியர்கள் அனைவரும் சூத்திரரே என்று உச்சநீதிமன்றமே உறுதி செய்துள்ளது. (தொடரும்)

## *வாசகர்களிடமிருந்து...*

**சு**ற்றுச் சூழலில் பார்ப்பனியம் குறித்து நக்கீரன் எழுதிய கட்டுரை மிகச் சிறப்பானது. அவரது இந்த ஆய்வுரையை ஒரு நூலாக வெளியிட வேண்டும். (நக்கீரன் உரை மூன்று பகுதிகளாக தொடர்ந்து 'நிமிர்வோம்' இதழில் வெளி வரும் – ஆர்)

'நிமிர்வோம்' நவம்பர் மாத இதழ் போற்றிப் பாதுகாக்க வேண்டிய அறிவுப் பெட்டகமாக வெளி வந்திருக்கிறது. 'நிமிர்வோம்' கம்பீரமாக நடைபோட்டு வருவது பெருமகிழ்ச்சியைத் தருகிறது. 'நான் ஏன் ஒரு இஸ்லாமியனாக இருக்கிறேன்?' என்ற மனுஷ்யபுத்திரன் கவிதை நெஞ்சை உலுக்கி விட்டது.

**– பெரியார் யுவராஜ், மயிலாப்பூர், சென்னை**



# கடவுள் மறுப்பு - இந்தி எதிர்ப்பு - கர்ப்பத் தடையில் பெரியாரின் பார்வை

● கொளத்தூர் மணி

*ஆகஸ்ட், 25இல் தஞ்சையில் நடந்த 'பெரியாரின் வேர்களைத் தேடி' ஆய்வரங்கில் நிகழ்த்திய உரை.*

பெரியாரை அறிமுகப்படுத்த வேண்டும் என்று எண்ணியிருந்தவற்றை நான் கூறிவிட விரும்புகிறேன். பெரியார் ஒரு கடவுள் மறுப்பாளர். பல காரணங்களால் கடவுளை மறுத்திருக்கிறார்கள். அறிவியல் பூர்வமான காரணங்களால், நான் அடிக்கடி கூட்டங்களில் சொல்வதுண்டு, உலகின் தோற்றம், பெரு வெடிப்பைப் படிக்கிறோம், நெபுலா ஆய்வைப் படிக்கிறோம், இவைகள் நமக்கு சொல்லிவிடும் உலகம் ஒருவரால் படைக்கப்பட்டதல்ல உருவானதென்று. சரியாக உருமலர்ச்சிக் கொள்கையைப் (evolution theory) படித்தால் அது நமக்கு சொல்லிவிடும், மனிதன் படைக்கப்படவில்லை, மனிதன் உருமலர்ந்தான் என்று அறிவியல் சொல்லிவிடும் கடவுள் மறுப்பை. ஆனால் இந்த கடவுள் மறுப்பை பெரியார் பேசவில்லை. அவர் சமூகத்திற்காகத்தான் கடவுள் மறுப்பைப் பேசினார்.

வெறும் கடவுளை மறுத்துவிட்ட நாத்திகத்தை பெரியார் பேசவில்லை. ஜாதி ஒழிப்பை இலக்காகக் கொண்ட கடவுள் மறுப்பைத் தான் பெரியார் பேசினார். ஜாதி ஒழிப்பு என்பது, பார்ப்பனியத்தை மறுத்த ஜாதி ஒழிப்பை இலக்காகக் கொண்ட கடவுள் மறுப்பு தான். அண்ணா அவர்கள் சொல்வாராம் 'பார்ப்பனிய எதிர்ப்பு மட்டும் எங்கள் கொள்கையாக இருந்தால் எங்கள் தலைமையிடம் ஈரோட்டில் இருக்காது, திருநெல்வேலியில் இருக்கும் என்று' அங்கே இருக்கும் சைவர்கள் பல மடங்கு கூடுதலாகப் பார்ப்பனர்களை எதிர்ப்பார்கள். ஆனால், ஜாதி ஒழிப்பு நோக்கம் அவர்களுக்கு இருக்காது. மூன்று மேற்கோள்களை படித்து விட்டு முடித்துக் கொள்கிறேன்.

முதலாவது அவர் பேசிய கடவுள் மறுப்பிலிருந்து ஒன்று, 'மனிதனுக்கு மனிதன் தொடக் கூடாது, கண்ணில் படக் கூடாது, தெருவில் நடக்கக் கூடாது, கோவிலுக்குள் போகக் கூடாது, குளத்தில் நீர் எடுக்கக் கூடாது என்றவைப் போன்ற கொள்கைகள் தாண்டவமாடும் நாட்டை, பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ, சமுத்திரத்தில் மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ விட்டிருப்பதை பார்த்திருந்தும் கூட கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்றும் அவர் நீதிமான் என்றும் சர்வதயாபரர் என்றும் யாராவது சொல்ல வந்தால் அவர்களை என்ன வென்று நினைப்பதென்று நீங்களே சொல்லுங்கள்' என்று பெரியார் சொல்லுகிறார்.

மற்றொன்று, 'கடவுள் எங்கும் நிறைந்த சர்வ சக்தி உள்ளவர், பட்சபாதம் அற்றவர் என்று சொல்லிக் கொண்டு, கடவுள் தான் தீண்டாதார் என்று சொல்லப்படும் கொடுமைக்கு உட்படுகின்ற மக்களுக்கு ஆதாரம் என்று சொல்லப்படுவது எவ்வளவு கேவலம். அநேகமாக அவர்தான் இந்த தீண்டாமையை படைத்தவர் என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையாயின் அத்தகைய கடவுளை எப்படியாவது ஒழித்து விட்டுத்தான் மறு வேலை பார்க்க வேண்டும். இந்த அநியாயமான சங்கதி அவருக்குத் தெரியாதென்றால் இன்னும் சீக்கிரமாய் ஒழிக்க வேண்டும். இத்தகைய அநியாயங்களை அவரால் விலக்கவோ, அக்கிரமம் செய்பவர்களை அடக்கவோ முடியவில்லையென்றால் அத்தகைய கடவுள் எந்த உலகத்திலும் இருக்க வேண்டியதில்லை அழிக்க வேண்டியது தான் நியாயம், நியாயம் நியாயம்'! இப்படிப் பட்ட கடவுள் மறுப்பைத் தான் பெரியார் முன்வைத்தார். இதிலிருந்து அதனுடைய நோக்கம் நமக்கு தெளிவாக தெரிகிறது.

நேற்று கூட கூறினார்கள் 1928ஆம் ஆண்டிலிருந்து குடும்ப கட்டுப்பாட்டைப் பற்றி, அதற்காக 1930இல் கருத்துகளைத் தொகுத்து ஒரு நூலை வெளியிட்டார். பல பேர் பேசுவது, அளவான குடும்பம் மகிழ்வாக இருக்கும் என்பதற்காக அல்லது நாடு இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்கும் என்பதற்காக, அதிக கல்வியை கொடுக்க முடியும் என்பதற்காக. ஆனால் பெரியாரின் 'கர்ப்ப ஆட்சி' என்பது பெண் விடுதலையை நோக்கமாகக் கொண்டது. மற்றவர்கள் பேசியதற்கும் பெரியார் பேசியதற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அடுத்து இந்தி எதிர்ப்பு.

கட்டாய இந்தி ஒழிக என்பது அவர் முழக்கமாக இருந்தது. முழக்கங்கள் மாறியது. இந்தி ஒழிக - இந்தி ஒழிக, தமிழ் வாழ்க - தமிழ் வாழ்க, இந்தி ஒழிக - தமிழ் வாழ்க! - என்று மாறியது. இப்போது இந்தி எதிர்ப்பைப் பேச வேண்டிய தேவையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது தமிழைக் காப்பாற்ற அவர் அந்த முழக்கத்தை வைத்தார் என்று அவரைப் புகழ்வதற்காகச் சொல்லுவார்கள். ஆனால், பெரியார் சொல்லுவார், 'நான் தமிழைக் காப்பாற்ற வெல்லாம் இந்தியை எதிர்க்கவில்லை. என்னுடைய இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்பது, மொழிப் போராட்டம் அல்ல. தமிழருடைய சிந்தனையில், வாழ்வியலில், கலை பண்பாட்டில் ஆரிய அடுக்குப் பண்பாட்டை திணிக்கிற முயற்சி என்று புரிந்துகொள்ளுங்கள்' என்று தான் சொன்னார். வெறும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்று சொல்லவில்லை. தமிழருக்கும், தமிழுக்கும் சிக்கல் வந்தால் தமிழர் பக்கம் நின்றார், தமிழன் பக்கம் நிற்கவில்லையென்று குறையாகப் பார்க்கவில்லை அதை நாம் நிறையாகப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட அவருடைய தனித்த போக்குகளை அறிந்து கொள்வதற்கு இன்று முன் வைத்திருக்கிற கருத்துக்களோடு நீங்கள் இன்னும் வளப்படுத்திக் கொள்ளுங்கள்.

'பெரியார் இன்றும் என்றும்' நூல் வந்தபோது நல்ல வேளை பெரியார் இல்லை இருந்திருந்தால் திட்டியிருப்பார் என்று கூறினேன். பெரியார் காலத்தில் பெரியாருடைய நல்ல கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்து 'அறிவின் எல்லை' என்ற தலைப்பிட்ட நூலை பெரியார் கையில் கொடுத்தார்களாம். தூக்கி கீழே போட்டாராம். அறிவிற்கு ஏதுய்யா எல்லை என்று. என்றைக்கும் ஒரு சிந்தனை சரியாக இருக்க முடியாது. இன்றைக்கு இந்த சூழலுக்கு நான் சொல்லி யிருக்கிற கருத்து என்றுதான் கூறினார். பெரியாரின் கருத்துக்களை வாய்ப்பாடாக எடுத்துக் கொள்ளுங்கள். வருகிற கணக்கை அதை வைத்து நீங்கள் போட்டுக் கொள்ளுங்கள். பெரியார் கணக்கு என்றும் சரியென்று நாம் சொல்ல வேண்டிய தில்லை, பெரியாரும் அதை எதிர்பார்க்கவில்லை. எனவே அப்படிப்பட்ட விரிந்த பார்வையை நமக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னவர். எதிர் காலத்தில் இராமசாமி என்கின்ற மூடநம்பிக்கைக்காரன் இருந்திருக்கிறான் என்று சொல்லத்தக்க அளவிற்கு வளர்ச்சி பெற வேண்டும் என்று விரும்பியவர் பெரியார். ஒரு பிற்போக்காளன் வாழ்ந்திருக்கிறான் என்று எதிர்காலச் சந்ததியினர் சொல்லத்தக்க அளவிற்கு வளர வேண்டும் என்று விரும்பியவர். அதற்கான வித்துகளை இட்டிருக்கிறார்கள். அதை நீங்கள் வளர்க்க வேண்டும். அதை உங்கள் மனதில் வளர்க்க வேண்டும். அதன் வழியாக ஒரு சமூக மாற்றத்தை சமத்துவ சமுதாயத்தைப் படைக்க முன்வர வேண்டும். ●

# அரசியலில் 'பக்தி'யை நுழைப்பது ஆபத்து — *அம்பேத்கர் எச்சரிக்கை*



*"இந்தியர்கள் தங்கள் மத நம்பிக்கைகளுக்கு மேலாக நாட்டைக் கருதப்போகிறார்களா அல்லது நாட்டைவிட மத நம்பிக்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கப் போகிறார்களா? இது எனக்குத் தெரியாது. கட்சிகள் நாட்டைவிடத் தங்கள் மதக்கோட்பாடு களுக்கே முக்கியத்துவம் கொடுத்தால், நமது சுதந்திரத்துக்கு இரண்டாவது தடவையாக ஆபத்து என்பதுடன் என்றென்றைக்குமாக நமது சுதந்திரத்தை இழப்பது என்பது நிச்சயம்." - அம்பேத்கர்*

***1949 நவம்பர் 25 அன்று அரசியல் சட்ட மசோதாவை முன்மொழிந்து புரட்சியாளர் அம்பேத்கர் நடத்திய வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையிலிருந்து சில பகுதிகள்:***

இந்த வரைவுக்குழு சபையின் உறுப்பினர்களும், வரைவுக் குழுவில் என்னுடன் பணியாற்றிய நண்பர்களும் என்மீது பொழிந்த புகழாரங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளச் சொற்கள் கிடைக்காமல் திக்குமுக்காடுகிறேன்.

ஷெட்யூல்டு சாதியினர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதைத் தவிர வேறு எந்தவித நோக்கங்களுமின்றித் தான் நான் அரசியல் நிர்ணய சபையில் சேர்ந்தேன். அதிக பொறுப்பான பணிகளை ஏற்க நான் அழைக்கப்படுவேன் என்று

நான் சிறிதளவுகூடச் சிந்திக்கவில்லை. என்னை வரைவுக் குழுக்கு சட்டமன்றம் தேர்ந்தெடுத்த போது நான் பெரிதும், ஆச்சரியம் அடைந்தேன். வரைவுக் குழு என்னை அதன் தலைவராகத் தேர்ந்தெடுத்த போது நான் அதைவிட ஆச்சரியம் அடைந்தேன். எனது நண்பர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் போன்ற என்னைவிட மிகவும் தகுதிபெற்ற சிறந்த பெரிய மனிதர்கள் வரைவுக்குழுவில் இருந்தனர் என்மீது இவ்வளவு நம்பிக்கை கொண்டு பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து அவர்களுடைய கருவியாக என்னைப் பயன்படுத்தி நாட்டிற்கு சேவை செய்ய எனக்கு அளித்துள்ள வாய்ப்புக்கு அரசியல் நிர்ணய சபைக்கும், வரைவுக் குழுவிற்கும் நன்றியுடையவனாகயிருப்பேன். (கைதட்டல்)

எல்லா உறுப்பினர்களும் கட்சிக் கட்டுப் பாட்டிற்கு அடங்கி நடந்திருந்தால் அரசியல் நிர்ணய சபையின் நடவடிக்கைகள் சுவையற்றதாக இருந்திருக்கும். கட்சிக்கட்டுப்பாடு அதன் கண்டிப் பான தன்மையால் அரசியல் நிர்ணய சபையை ஆமாம் சாமிகளின் கூட்டமாக மாறியிருக்கும். நல்ல காலமாக சில புரட்சியாளர்கள் இருந்தனர். திரு.காமத், டாக்டர் பி.எஸ். தேஷ்முக், திரு. சித்வா, பேராசிரியர் சாக்னோ, பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா ஆகியவர்களைக் குறிப்பிடவேண்டும். அவர்கள் எழுப்பிய பிரச்சனைகளெல்லாம் பெரும்பாலும் சித்தாந்தம் பற்றியவையே. அவர்களுடைய ஆலோசனைகளை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாதிருந்தது அவர்களுடைய ஆலோசனைகளின் மதிப்பைக் குறைத்துவிடவில்லை; அரசியல் அமைப்பு அவை நடவடிக்கைகளுக்கு உயிரோட்டம் அளிக்க அவர்கள் செய்த சேவையைக் குறைத்து மதிப்பிட முடியாது. நான் அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன். அவர்கள் இல்லையென்றால், அரசியல் சாசனத்தை இயந்திர கதியில் நிறைவேற்ற வேண்டியிருக்கும்; அதைவிட இது முக்கிய மானது.

........ ........ ........

எனது நண்பர்கள் திரு. அல்லாடி கிருஷ்ண சாமி அய்யரும், திரு.டி.டி.கிருஷ்ணமாச்சாரியும் அரசியல் சாசனத்திற்கு எவ்வளவு ஆதரவு அளிக்க முடியுமோ அவ்வளவு ஆதரவு அளித்துள்ளனர். எனவே அரசியல் சாசனத்தின் சிறப்புத் தகுதி களைப் பற்றி இப்பொழுது நான் பேசப் போவதில்லை. ஏனெனில் ஓர்அரசியல் சாசனம் எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் அதைச் செயல்படுத்துவர்களின் தன்மையைப் பொருத்து, அதுமோசமானதாக மாறலாம். ஓர் அரசியல் சாசனமாகச் செயல்படுத்துபவர்கள் நல்லவர் களாக இருப்பின் அது ஒரு சிறந்த சாசனமாகச் செயல்படும். ஓர் அரசியல் சாசனத்தின் செயல்பாடு அதன் தன்மையை மட்டும் முற்றிலும் சார்ந்ததன்று. அரசின் உறுப்புகளான சட்ட மன்றம், ஆட்சித்துறை, நீதித் துறை ஆகிய வைகளை உருவாக்க மட்டும் அரசியல் சாசனம் வழிவகை செய்யும்.

**அரசியல் சாசனத்தைத் திருத்துவது சம்பந்தமான வழிமுறைகளை ஆழ்ந்து நோக்க வேண்டும். இந்த அரசியல் சாசனம் தவறற்றது என்றோ, இறுதியானது என்றோ இந்தச்சபை முத்திரை குத்தவில்லை.**

ஆனால் அரசின் இந்த அமைப்புகளின் செயல்பாடுகளுக்கு ஆதாரமான காரணிகள் மக்களும், அவர்கள் தங்கள் நோக்கங்களை அரசியல் அபிலாஷைகளையும் நிறைவேற்றக் கருவிகளாக உபயோகிக்கும் அரசியல் கட்சிகளுமேயாகும். இவற்றின் செயல்பாடுகளைப் பொருத்தே அதன் வெற்றியுள்ளது. இந்திய மக்களும் அவர்களுடைய அரசியல் கட்சிகளும் எம்முறையில் நடந்து கொள்வார்கள் என்பதை யார் கூறமுடியும்? தங்கள் நோக்கங்களை அடைய அவர்கள் அரசியல் சாசன ரீதியிலான நடவடிக்கைகளை எடுப்பார்களா அல்லது புரட்சிகர முறைகளைப் பின்பற்றப் போகிறார்களா? என்றால், அரசியல் சாசனம் எவ்வளவு சிறப்புள்ளதாக இருந்தாலும் அது தோற்று விடும் என்றுகூற எந்ததீர்க்கதரிசியும் தேவையில்லை. எனவே, மக்களும் அவர்களது கட்சிகளும் என்ன பாத்திரம் வகிக்கப் போகிறார்கள் என்பதைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல், அரசியல் சாசனத்தைக் குறித்துத் தீர்ப்பளிப்பது பயனற்றது.

கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் சோஷலிஸ்ட் கட்சி ஆகிய இரண்டு தரப்பினரிடமிருந்து பெருமளவில் அரசியல்சாசனத்துக்கு எதிரான கண்டனக் குரலைக் கேட்கமுடிகிறது. அரசியல் சாசனத்துக்கு எதிராக அவர்கள் ஏன் கண்டனக் குரல் எழுப்புகிறார்கள்? ஏனெனில் அது உண்மையிலேயே அரசியல் சாசனமா? இல்லை, என்று நிச்சயமாகக் கூறுகிறேன். தொழிலாளர் களின் சர்வாதிகாரம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல் சாசனம் இருக்க வேண்டுமென்று கம்யூனிஸ்ட்கட்சி விரும்புகிறது.

**நமது அரசியல் சாசனத்தின்படி மாநிலங்கள் தங்கள் சட்டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரத்திற்கு மத்திய அரசைச் சார்ந்து இருக்கவில்லை. இந்த விஷயத்தில் மத்திய அரசும், மாநில அரசுகளும் சமநிலையில் உள்ளன. இப்படிப்பட்ட ஓர் அரசியல் சாசனத்தை மத்திய அரசுக்குச் சாதகமானது என்று கூறப்படுவதைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது.**

நாடாளுமன்ற ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப் படையில் இந்த அரசியல் சாசனம் அமைத்து இருப்பதால் அவர்கள் கண்டனம் செய்கிறார்கள்.

சோஷலிஸ்டுகள் இரண்டு விஷயங்களை விரும்புகிறார்கள். அவர்கள் விரும்பும் முதல் விஷயம் இதுதான். நஷ்டஈடு எதுவும் அளிக்காமல் எல்லாத் தனியார் சொத்துக்களையும் தேசிய மயமாக்க, அரசியல் சாசனம் அவர்களுக்குச் சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று விரும்பு கிறார்கள். இரண்டாவதாக, சோஷலிஸ்டுகள் விரும்புவது, அரசியல் சாசனம் குறிப்பிட்டுள்ள அடிப்படை உரிமைகள் பூரணமானதாக வரம்பற்றதாக இருக்க வேண்டுமென்கிறார்கள். அப்பொழுதுதான் அவர்கள் கட்சி ஆட்சிக்கு வர முடியாவிட்டால், விமர்சிப்பதற்கு அவர்களுக்கு கட்டுப்பாடற்ற சுதந்திரம் இருப்பதுடன் அரசைக் கவிழ்ப்பதற்கும்கூட உரிமை இருக்கும்.

இந்த முக்கியமான அடிப்படைகளில்தான் அரசியல் சாசனம் குற்றம் சாட்டப்படுகிறது. நாடாளுமன்ற ஜனநாயகக் கோட்பாடு மட்டுமே அரசியல் ஜனநாயக முறையில் சிறந்தது என்று நான் கூறவில்லை. நஷ்டஈடு அளிக்காமல் தனியார் சொத்துக்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற கோட்பாடு புனிதமானதென்றோ, அதிலிருந்து விலகிச் செல்வதுகூடாது என்றோ நான் கூறவில்லை. அடிப்படை உரிமைகள் பூரணமாக இருக்கக் கூடாதென்றோ நான் கூறவில்லை. நான் கூறுவதெல்லாம் இந்த அரசியல் சாசனத்தின் கோட்பாடுகள் தற்கால தலைமுறையினரின் கருத்துகளே. ஒருவேளை நான் மிகைப்படக் கூறுவதாகக் கருதினால் அரசியல் நிர்ணயசபை உறுப்பினர்களின் கருத்துகள் அவை என்று கூறுகிறேன். அரசியல் சாசனத்தில் அவைகள் சேர்க்கப்பட்டதற்கு வரைவுக் குழுவின் மீது ஏன் குறைகூறுகிறீர்கள்? அரசியல் நிர்ணய உறுப்பினர்கள்கூட ஏன் குறைகூறப்பட வேண்டும் என்று கேட்கிறேன்?

அமெரிக்க அரசியல் சாசனத்தை உருவாக்கு வதில் பெரும் பங்குவகித்த அமெரிக்காவின் புகழ்பெற்ற அரசியல் நிபுணரான ஜெபர்சன் சில அழுத்தமான கருத்துகளை வெளிப்படுத்தி யுள்ளார். அரசியல் சாசனத்தை உருவாக்கு பவர்கள் எவரும் இதைத் தவிர்க்க முடியாது. ஓர் இடத்தில் அவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

“ஒவ்வொரு தலைமுறையும், பெரும் பான்மையின் விருப்பப்படி தாங்கள் ஒருங் கிணைத்துக் கொண்டு வாழும் உரிமையுடைய ஒரு தனிப்பட்ட தேசிய இனமாகக் கருத வேண்டும். மற்ற நாட்டுக் குடிமக்களுடன் தங்களைப் பிணைத்துக் கொள்ளும் உரிமை யில்லாதது போலவே அடுத்த தலைமுறையையும் பிணைத்துக் கொள்ள முடியாது.”

மற்றொரு இடத்தில் அவர் இவ்வாறு கூறியுள்ளார் :

*“ஒரு தேசத்தின் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள அமைப்புகள் தங்களுடைய நலனுக்காகக்கூடத் தொடக் கூடியதல்ல, மாற்றக் கூடியதல்ல என்ற கருத்து பொது மக்களுக்காக, அவைகளை நிர்வகிக்க நியமிக்கப்பட்டவர்களுக்கு, தாராளமாக வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மன்னர் தவறாகப் பயன் படுத்தாமல் இருக்க ஒரு சட்டவழி முறையாக இருக்கலாம். ஆனால் அந்தத் தேசத்துக்கு எதிரான முட்டாள்தனமான கருத்தாகும். இது நமது சட்ட வல்லுனர்களும் மதகுருமார்களும் பொதுவாக இந்தக் கோட்பாடுகளைப் புகுத்துகிறார்கள். ஒரு வேளை முந்தைய சந்ததியினர்கள் இந்த உலகை அதிக சுதந்திரத்துடன் கையாண்டிருக்கலாம். நம்மால் மாற்ற முடியாத சட்டங்களை நம்மீது திணிக்க உரிமையுள்ளவர்களாக எண்ணியிருக்கலாம். அதேபோன்று நாமும் சட்டங்களை உருவாக்க எதிர்காலத் தலைமுறையினர்களின் மீது திணிக்கலாம். அவர்களுக்கு அதை மாற்றுவதற்கு எந்த உரிமையும் இருக்காது. மொத்தத்தில் உலகம் உயிருடன் வாழும் மனிதர்களுக்கல்ல மடிந்தவர்களுக்கே சொந்தம்.”*

ஜெபர்சன் கூறியது முழுக்க உண்மை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஜெபர்சன் எடுத்துரைத்துள்ள இந்தக் கோட்பாட்டிலிருந்து அரசியல் நிர்ணயசபை விலகிச் சென்றிருந்தால் அதைக் குறைகூறுவது, ஏன் கண்டனம் செய்வதுகூட நியாயமானது தான். ஆனால் அது அப்படி நடந்து கொண்டுள்ளதா என்ற கேட்கிறேன்? அவ்வாறு நடந்து கொள்ளாமல்

முற்றிலும் மாறாக அது செயல்பட்டுள்ளது. அரசியல் சாசனத்தைத் திருத்துவது சம்பந்தமான வழிமுறைகளை ஆழ்ந்து நோக்க வேண்டும். இந்த அரசியல் சாசனம் தவறற்றது என்றோ, இறுதியானது என்றோ இந்தச் சபை முத்திரை குத்தவில்லை. கனடா நாட்டிலுள்ளது போல மக்களுக்கு அரசியல் சாசனத்தைத் திருத்தும் உரிமை வழங்கப்படாமலிருக்கவில்லை. மாறாக அரசியல் சாசனத்தைத் திருத்துவதற்கு மிகவும் எளிதாக நடைமுறைகள் அளிக்கப்பட்டுள்ளன.

நாடு இன்றுள்ள நிலையில் அரசியல் சாசனத்தைத் திருத்த நாம் உருவாக்கியுள்ள எளிதான நடைமுறையை இந்த உலகிலுள்ள வேறு எந்த அரசியல் நிர்ணய சபையாவது கொண்டு வந்துள்ளது என்று நிரூபிக்க முடியுமா? அரசியல் சாசனத்தை விமர்சிக்கும் எந்த நபருக்கும் நான் சவால் விடுகிறேன். அரசியல் சாசனத்தின் மீது அதிருப்தி கொண்டுள்ளவர்களுக்குத் தேவைப் படுவதெல்லாம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைதான். அவர்களுக்கு ஆதரவாக வயதுவந்தோர் ஓட்டுரிமை மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பெற முடிய வில்லை என்றால் அரசியல் சாசனத்தைப் பற்றிய அவர்களது அதிருப்திகளைப் பொதுமக்கள் பகிர்ந்துக் கொள்ளவில்லை என்றுதான் கூறவேண்டும்.

அரசியல் சட்ட முக்கியத்துவம் பெற்ற ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் தான் குறிப்பிடு கிறேன். மத்திய அரசில் அதிகாரம் குவிக்கப்பட்டு மாநிலங்கள் நகரசபைகள் அளவுக்கு அதிகாரம் இழந்துள்ளன என்ற கடுமையான குற்றச் சாட்டுள்ளது. இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட குற்றச் சாட்டு என்பது தெளிவாகத் தெரிவதுடன் அரசியல் சாசனம் எதை நடைமுறைப்படுத்த உள்ளது என்பதைப் பற்றிய தவறான அடிப்படை யிலிருந்து இது எழுந்துள்ளது எனலாம். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பொறுத்தவரையில் அது அமைத்துள்ள அடிப்படைக் கோட்பாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வது அவசியம்.

மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் சட்டமன்ற மற்றும் நிர்வாகப் பிரிவினை மத்திய அரசு இயற்றும் சட்டத்தினால் அல்லாமல் அரசியல் சாசனத்தின் மூலமே நிர்ணயிக்கப் படுகிறது என்பதுதான் கூட்டாட்சி முறையின் அடிப்படையான கோட்பாடு. அதைத்தான் அரசியல் சாசனம் செயல்படுத்துகிறது. நமது அரசியல் சாசனத்தின்படி மாநிலங்கள் தங்கள் சட்டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரத்திற்கு மத்திய அரசைச் சார்ந்து இருக்கவில்லை. இந்த விஷயத்தில் மத்திய அரசும், மாநில அரசுகளும் சமநிலையில் உள்ளன. இப்படிப்பட்ட ஓர் அரசியல் சாசனத்தை மத்திய அரசுக்குச் சாதகமானது என்று கூறப்படுவதைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது.

வேறு எந்தக் கூட்டாட்சி அரசியல் சாசனத்தில் உள்ளதைக் காட்டிலும் அதிக அளவிலான களத்தை அதனுடைய சட்டமன்ற மற்றும் நிர்வாக அதிகாரத்தை நடைமுறைப் படுத்த மத்திய அரசுக்கு இந்த அரசியல் சாசனம் ஒதுக்கியிருக்கலாம். எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசுக்கு அளிக்கப் பட்டிருக்கலாம். இந்த அம்சங்கள் கூட்டாட்சியின் சாரமாக அமைவ தில்லை. மத்திய அரசுக்கும் அதன் மாநிலங் களுக்கும் இடையே சட்டமன்ற மற்றும் நிருவாக அதிகாரத்தை அரசியல் சாசனம் பகுத்தளிப்பது தான் கூட்டாட்சி முறையின் முக்கிய அம்சம் எனலாம்.

இந்தக் கோட்பாட்டைத்தான் நமது அரசியல் சாசனம் கொண்டுள்ளது. அதைப்பற்றி எந்தவித அய்யப்பாடும் இருக்க முடியாது. எனவே மாநிலங்கள் மத்திய அரசின் கீழ் வைக்கப்பட் டுள்ளன என்று கூறுவது தவறாகும். இந்த அதிகாரப் பிரிவின் எல்லையை மத்திய அரசு தன் விருப்பப்படி மாற்ற முடியாது. நீதித்துறைகூட ஒன்றும் செய்ய முடியாது. இது மிகவும் தெளிவாகக்கூறப்பட்டுள்ளது.

> *"நீதிமன்றங்கள் திருத்தம் செய்யலாம் ஆனால் எதை ஒன்றையும் அதற்குப் பதிலாகப் புகுத்த முடியாது. முன்பு கூறிய விளக்கங்களுக்குப் புதிய வாதங்களை, புதிய கருத்துக்களை அளிக்கலாம். ஒருசில விசேஷ சந்தர்ப்பங்களில் இந்த எல்லைக்கோட்டைத் தாண்டலாம். ஆனால் சில வரையறைகளை அவை தாண்ட முடியாது. குறிப்பிட்டு ஒதுக்கப்பட்டுள்ள சில அதிகாரங்களை அவை மாற்றி ஒதுக்க முடியாது. ஏற்கெனவே உள்ள அதிகாரத்தின் கூட்டுக் கோப்பை அவை விரிவுபடுத்த முடியும். வெளிப் படையாக ஒரு அமைப்புக்குக் கொடுக்கப் பட்டுள்ள அதிகாரத்தை வேறு ஒரு அதிகார அமைப்புக்குக் கொடுக்க முடியாது."*

**மதச் சம்பிரதாயங்களில் ஆத்மாவின் விடுதலைக்கு பக்தி ஒரு மார்க்கமாக இருக்கலாம். ஆனால் அரசியலில் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு சீரழிவுக்கு ஒரு நிச்சயமான பாதையாகும். அத்துடன் அது இறுதியில் சர்வாதிகாரத்துக்கே இட்டுச் செல்லும்.**

ஆகவே கூட்டாட்சி முறைக்கு மாறாக மத்திய அரசியல் அதிகாரக் குவிப்பு என்ற முதல் குற்றச் சாட்டு தோற்றுவிடுகிறது.

மாநில அரசுகளைப் புறக்கணித்து செயல்பட மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது என்பது இரண்டாவது குற்றச்சாட்டு இந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் இந்த மாதிரி அதிகப்படியான அதிகாரங்களை அரசியல் சாசனம் அளிப்பதற்கு அதைக் கண்டனம் செய்வதற்கு முன் சில நோக்கங்களை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த அதிகப்படியான அதிகாரம் என்பது அரசியல் சாசனத்தின் பொதுவான அம்சமாக இல்லை. அது உபயோகப்படுவதும், செயல் படுத்தப்படுவதும், நெருக்கடி கால நிலைகளில் மட்டுமே. இரண்டாவதாகச் சிந்திக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், ஒரு நெருக்கடிநிலை தோன்றும் போது மத்திய அரசுக்கு அதிகப் படியான அதிகாரம் கொடுப்பதைத் தவிர்க்க முடியுமா? ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் மத்தியஅரசுக்கு இப்படிப்பட்ட அதிகப்படியான அதிகாரம் கொடுப்பதின் நியாயத்தை மறுப்பவர்கள், பிரச்சினையின் அடிப்படையில் உள்ள விஷயத்தைத் தெளிவாகக் காணவில்லை என்று தெரிகிறது. வட்டமேஜை என்ற இதழின் 1935 ஆம் ஆண்டு டிசம்பர் மாத வெளியீட்டில் இந்தப் பிரச்சினை மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து பின்வரும் பகுதியைக் கொடுப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றுஆசிரியர் கூறகிறார் .

“அரசியல் அமைப்பு முறைகள் என்பவை உரிமைகளும், கடமைகளும் அடங்கிய தொகுதியாக உள்ளன. இறுதியில் யாருக்கு அல்லது எந்த அதிகார அமைப்புக்கு ஒரு குடிமகன் தன் விசுவாசத்தைச் செலுத்துகிறான் என்பதில் இது அடங்கியிருக்கிறது. சாதாரண நடைமுறைகளில் இந்தக்கேள்வி எழுவதில்லை. ஏனெனில் சட்டம் அதைக் கவனித்துக் கொள் கிறது. இந்த மாதிரி பல்வேறு நடவடிக்கைகளில் ஒருகுறிப்பிட்ட செயல்பாடுகளில் ஓர் அதிகார அமைப்பிற்கும், மற்ற நடவடிக்கைகளில் வேறு ஒரு அதிகார அமைப்பிற்கும் பணிந்து குடிமகன் தன் அலுவல்களைக் கவனித்து வருகிறான். ஆனால் ஒரு நெருக்கடி உருவாகும்போது விசுவாசத்தை கோரும் உரிமை யாருக்கு என்பதில் முரண்பாடுகள் தோன்றுகின்றன. இறுதியான விசுவாசத்தைப் பிரிப்பது சாத்தியமில்லை என்பது அப்போது தெளி வாகிறது. இறுதியாக சட்ட விளக்கத்தின் மூலம் விசுவாசப் பிரச்சினையை தீர்மானிக்க முடியாது. எல்லா யதார்த்த நிலைமை களுக்கும் ஒத்து சட்டம் இருக்க வேண்டும். எல்லா சம்பிரதாய முறைகளையும் களைத்துவிட்டுப் பார்த்தால் கேள்வி இதுதான், குடிமகனின் எஞ்சிய விசுவாசம் எந்த அதிகார அமைப்பிற்கு உள்ளது? அது மத்திய அரசுக்காக அல்லது உறுப்பினராக உள்ள மாநிலத்திற்கா?”

பிரச்சினையின் காரணமான இந்தக் கேள்வியின் பதிலைப் பொறுத்துத்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளது. பெரும்பான்மை யான மக்களின் கருத்துப்படி நெருக்கடி காலத்தில் குடிமகனின் எஞ்சிய விசுவாசம் மத்திய அரசின் மீதுதான், உறுப்பினராகவுள்ள மாநிலங்களின் மீதல்ல என்பதில் ஐயப்பாடு இல்லை. நாடு முழுவதற்குமான பொதுநலனுக்காக பொதுவான முடிவுக்கு மத்திய அரசே செயலாற்ற முடியும். ஒரு நெருக்கடி காலத்தில் மத்திய அரசுக்கு அதிகப் படியான அதிகாரங்கள் வழங்கப்பட்டதற்கான நியாயம் இதில்தான் இருக்கிறது. இந்த நெருக்கடி கால அதிகாரங்களினால் உறுப்பு மாநிலங்களுக்கு என்ன கடமைகள் தான் சுமத்தப்பட்டுள்ளன? இதைத் தவிர வேறு ஒன்றுமில்லை ஒரு நெருக்கடி நிலையின் போது தங்களுடைய பிராந்திய நலன் களுடன் மொத்தமாக தேசத்தின் நலன்களையும் கருத்துகளையும் கணக்கிலெத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையைப் புரிந்து கொள்ளாதவர்கள் மட்டும் அதை எதிர்த்துக் குறை கூற முடியும்.

இத்துடன் நான் என் உரையை முடித்திருப் பேன், நமது நாட்டின் எதிர்காலம் என் உள்ளம் முழுவதையும் ஆட்கொண்டுள்ளது. அதுகுறித்து என்னுடைய கருத்துகள் சிலவற்றை வெளிப்படுத்த இந்த வாய்ப்பை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.1950 ஜனவரி 26 இல் இந்திய ஒரு சுதந்திர நாடாக மலர்ந்து விடும். (கரவொலி) பிறகு அதனுடைய சுதந்திரம் என்னவாகும்? தன் சுதந்திரத்தை அது காப்பாற்றிக் கொள்ளுமா அல்லது மீண்டும் அதை இழந்துவிடுமா? இந்தச்

சிந்தனையே முதலில் என் மனதில் தோன்றுகிறது.

இந்தியா ஒரு பொழுதும் சுதந்திர நாடாக இருக்கவில்லை என்று கூறமுடியாது? ஒரு காலத்தில் தான் பெற்றிருந்த சுதந்திரத்தை அது இழந்தது. இரண்டாவது தடவையாக இந்தியா தன் சுதந்திரத்தை இழந்துவிடுமா? இந்தச் சிந்தனைதான் எதிர்காலத்தைப்பற்றி எனக்கு மிகுந்த அச்சத்தை அளிக்கிறது.

இதற்கு முன்பு இந்தியா தன் சுதந்திரத்தை இழந்துவிட்டது என்ற உண்மை மட்டு மல்ல என் மனதில் சஞ்சலத்தை தோற்றுவிக்கிறது. நமது மக்கள் சிலரின் துரோகமும் வஞ்சகத் தன்மையுமே அதற்குக் காரணம் என்பதை எண்ணும் போதுதான் மனம் கவலை அடைகிறது.

சிந்து மாகாணத்தின் மீது முகமது பின் காசிம் படையெடுத்தபோது தாகர் மன்னனின் ராணுவப் படைத்தலைவர்களே தமது மன்னரின் பக்கம் போரிட மறுத்ததுடன் முகமது-பின்-காசிமின் முகவர்களிடமிருந்தே கையூட்டும் பெற்றுள்ளனர். முகமது கோரியை இந்தியாவின் மீது படையெடுக்க அழைத்தவர் ஜெய் சந்த் ஆவார். பிரிதிவி ராஜ் அரசனுடன் போர் செய்ய அவர் உதவி செய்ய முன்வந்ததுடன் சோலாங்கி அரசர்களின் உதவியையும் பெற்றுத் தருவதாகக் கூறினார். இந்துக்களின் விடுதலைக்காக சிவாஜி போரிட்டுக் கொண்டிருந்தபோது, மற்ற மராத்திய பிரபுக்களும், ராஜபுத்திர மன்னர்களும் முகலாய மன்னர்களின் தரப்பில் போரில் ஈடுபட்டிருந்தனர். சீக்கிய ஆட்சியாளர்களைப் பிரிட்டிஷ் அரசு அழிக்க முயன்றபோது சீக்கியர்களின் முக்கிய தளபதி கலாப்சிங் சீக்கிய அரசைக் காப்பாற்ற உதவிக்கு வராததுடன், செயலற்று இருந்து விட்டார். 1857இல் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக இந்தியாவின் பெரும் பகுதியிலும் கிளர்ச்சி வெடித்த போது, வெறும் ஊமைப் பார்வை யாளர்களாக அதை சீக்கியர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மீண்டும் அதே நிகழ்வுகள் நடக்குமா? இந்தக் கவலைதான் என் மனதை ஆட் கொண்டுள்ளது. சாதி மற்றும் மத நம்பிக்கைகள் வடிவத்திலான பழைய விரோதிகளுடன், பல் வேறு மாறுபட்ட அரசியல் கொள்கைகளை யுடைய அரசியல் கட்சிகளும் சேர்ந்து கொள்ளப் போகின்றன என்பதை எண்ணும் போது என் கவலை மேலும் அதிகமாகிறது.

இந்த விளைவுக்கு எதிராக நாம் விழிப்புடன் இருக்கவேண்டும் நமது கடைசி துளி இரத்தம் இருக்கும் வரை நமது சுதந்திரத்தைப் பாது காப்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும் (ஆரவாரம்)

1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 இல் இந்தியா ஒரு குடியரசு நாடாக ஆகிவிடும். அதாவது அந்நாளிலிருந்து இந்திய அரசு மக்களுடைய, மக்களால் ஆன, மக்களுக்கான அரசாக இருக்கும், திரும்பவும் முன்பு தோன்றிய அதே எண்ணம் என் மனதை வருத்துகிறது. அதனுடைய ஜனநாயக அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு என்ன நேரப் போகிறது? அதைக்காப்பாற்றிக் கொள்ளுமா அல்லது மீண்டும் இழந்துவிடுமா? இதுதான் என் மனதில் முன்னதைப் போன்று இரண்டாவதாக என்னை கவலையுறுத்தும் சிந்தனை.

## ஜனநாயகம் – புத்தர் காலத்தில் அறிமுகமாகாது

ஜனநாயகம் என்பது இந்தியா அறியாத ஒரு கோட்பாடல்ல ஒரு காலத்தில் இந்தியாவில் பல ஜனநாயகக் குடியரசுகள் இருந்தன. மன்னர் ஆட்சிகள் இருந்த இடங்களில்கூட அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவோ அல்லது சில வரையறைக்கு உட்பட்டவர்களாகவோ இருந்தனர். அவர்கள் எல்லையற்ற அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. நாடாளுமன்றத்தையோ அல்லது நாடாளுமன்ற நடவடிக்கைகளையோ இந்தியா அறிந்திருக்கவில்லை என்று கூற முடியாது.

பௌத்தர்களின் பிட்சு சங்கங்களைப் பற்றிப் படிக்கும்போது நாடாளுமன்றங்கள் இருந்ததை அறிகிறோம். சங்கங்கள் நாடாளு மன்றங்களைப் போன்றதே. நவீன கால நாடாளுமன்ற நடைமுறைகளை சங்கங்கள் அறிந்திருந்ததுடன் அதை செயல்படுத்தியும் வந்திருக்கின்றன. சங்கங்களில் உறுப்பினர்களின் அமர்வு முறை பற்றியும், தீர்மானங்கள் பிரேரேணைகள், கோரெம், கொரடா, வாக்கெண்ணிக்கை, இரகசிய வாக்களிப்பு, தீர்மானம், ஒழுங்குமுறை, கண்டனத் தீர்மானம், முன் தீர்ப்புத் தடை ஆகியவைகள் குறித்த விதிகள் இயற்றியிருந்தனர். சங்கங்களின் அமர்வுகளை நடத்த இந்த நாடாளுமன்ற விதிமுறைகள் புத்தரால் செயல்படுத்தப்பட்டாலும், அந்தக் காலத்தில் நாட்டில் நடைமுறையில் இருந்த அரசியல் சட்ட மன்றங்களின் விதிகளிலிருந்து இவைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த ஜனநாயக முறையை இந்தியா இழந்தது.

இரண்டாவது தடவையாக அதை அது இழந்துவிடுமா? அது எனக்குத் தெரியாது.

இந்தியா போன்ற ஒரு நாட்டில் அது சாத்தியமே. ஜனநாயகம் நெடுங்காலமாக பழக்கத்தில் இல்லாமல் இருந்ததால் அது ஒரு புதுமையாகவே இருக்கிறது. ஜனநாயகம், சர்வாதி காரத்துக்குப் பணிந்துவிடக் கூடிய அபாயம் உள்ளது. புதிதாகப் பிறந்துள்ள இந்தக் குடியரசு தனது ஜனநாயகத் தோற்றத்தை வைத்துக் கொண்டு யதார்த்த செயல்பாட்டில் ஒரு சர்வாதிகார அமைப்பாக மாறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. ஜனநாயகம் பற்றி மக்களின் சிந்தனையில் தீவிர மாற்றம் ஏற்பட்டால் இரண்டாவதாகக் கூறப்பட்டது நடைபெறக் கூடிய வாய்ப்பின் அபாயம் அதிகமாக உள்ளது.

தோற்றத்தில் மட்டுமல்லாது உண்மை யிலேயே ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டு மென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்? முதலாவது நமது சமூக மற்றும் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு அரசியல் சட்ட முறையை நாம் உறுதியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதை என்னுடைய முடிவாக உள்ளது. அதன் பொருள் இரத்தக்களறியான புரட்சி முறையைக் கைவிட வேண்டும். சட்ட மறுப்பு இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், சத்தியாக்கிரகம் ஆகிய முறைகளைக் கைவிட வேண்டும். பொருளாதார மற்றும் சமூக இலட்சியங்களை அரசியல் சட்டமுறையில் அடைவதற்கு வாய்ப்பில்லாத போதுதான் அரசியல் சட்ட சம்பந்தமற்ற முறையை கையாளுவது நியாயமாக இருக்க முடியும். ஆனால் அரசியல் சட்டரீதியாக வாய்ப்புகள் இருக்கும்போது இம்மாதிரியான அரசியல் சட்டத்திற்கு புறம்பான வழிமுறைகள் நியாய மற்றதாகும். இம்முறைக ளெல்லாம் கட்டுப்பாடு இழந்த அரசியல் குழப்ப நிலையின் இலக்கணமே எவ்வளவு விரைவில் இதை உதறித் தள்ளு கிறோமோ அந்த அளவுக்கு நமக்கு நல்லது.

**இரண்டாவதாக ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ளவர் களுக்கு ஜான் ஸ்டூவர்டு மில் விடுத்துள்ள எச்சரிக்கையை நாம் கடைப்பிடிக்கவேண்டும். அதாவது தங்களுடைய சுதந்திரத்தை எந்த ஒரு பெரிய மனிதரின் கால்களிலும் அர்ப்பணித்து விடக் கூடாது அல்லது ஜனநாயக அமைப்புகளைக் குலைப்பதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கும் அளவுக்கும் அவரிடம் நம்பிக்கை வைத்துவிடக்கூடாது.** நாட்டுக்காக வாழ்க்கை முழுவதையும் அர்ப் பணித்த பெரிய மனிதர்களிடம் நன்றியுடன் இருப்பது எந்த விதத்திலும் தவறாகாது. ஆனால் இதற்கு ஒரு வரம்புள்ளது.

**ஜரிஷ் தேசபக்தரான டேனியல் ஓ கன்னல் குறிப்பிட்டது போல் தன்னுடைய சுயமரியாதையை இழக்கும் அளவுக்கு எந்த மனிதனும் நன்றியுடையவனாக இருக்க முடியாது. தன் கற்பை இழக்கும் அளவுக்கு எந்தப் பெண்ணும் நன்றியுடையவளாக இருக்க முடியாது. தன்னுடைய சுதந்திரத்தை இழக்கும் அளவுக்கு எந்த நாடும் நன்றியுடையதாக இருக்கமுடியாது.** மற்ற நாடுகளைவிட இந்தியா போன்ற நாட்டிற்குத்தான் இந்த எச்சரிக்கை அவசிய மாகிறது. இந்தியாவில் தான் இறைவழிபாடு என்றழைக்கப்படும் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு, இந்த உலகின் வேறு எந்த நாட்டின் அரசியலிலுள்ளதையும்விட அரசியலில் பெரும் பங்கு வகிக்கிறது. மதச் சம்பிரதாயங்களில் ஆத்மாவின் விடுதலைக்கு பக்தி ஒரு மார்க்கமாக இருக்கலாம். ஆனால் அரசியலில் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு சீரழிவுக்கு ஒரு நிச்சயமான பாதையாகும். அத்துடன் அது இறுதியில் சர்வாதிகாரத்துக்கே இட்டுச் செல்லும்.

மூன்றாவது விஷயம் என்னவென்றால், அரசியல் ஜனநாயகத்துடன் மனநிறைவு அடைந்து விடக் கூடாது. நமது அரசியல் ஜனநாயகத்தை ஒரு சமூக ஜனநாயகமாகவும் மாற்றவேண்டும். சமூக ஜனநாயக அடிப்படை யின்றி அரசியல் ஜனநாயகம் நீண்டு நிலைத்திருக்க முடியாது. சமூக ஜனநாயகம் என்றால் என்ன? சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஆகியவைகளை வாழ்க்கையின் கோட்பாடுகளாக அங்கீகரிக்கும் ஒரு வாழ்க்கை முறை அது. சுதந்திரம். சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை களைக் கொண்ட இந்த மும்மையின் தனிப் பகுதிகளாக அவைகளைப் பிரிக்க முடியாது. இந்த மூன்றும் ஒன்றாக இணைந்துள்ளன. அதாவது ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிப்பது ஜனநாயகத்தின் அடிப்படையையே தகர்ப்பதாகும்.

சுதந்திரத்தை சமத்துவத்திலிருந்து பிரிக்க முடியாது. அதே போன்று சமத்துவத்திலிருந்து சுதந்திரத்தைப் பிரிக்க முடியாது. சமத்துவம் சுதந்திரம் ஆகியவற்றிலிருந்து சகோதரத்து வத்தைப் பிரிக்க முடியாது. சமத்துவம் இல்லாத சுதந்திரம் சிலரின் மீது பெரும்பான்மையினரின்

**ஓர் அரசியல் சாசனம் எவ்வளவு சிறப்பாக இருந்தாலும் அதைச் செயல்படுத்துவர்களின் தன்மையைப் பொருத்து, அதுமோசமானதாக மாறலாம். ஓர் அரசியல் சாசனமாகச் செயல் படுத்துபவர்கள் நல்லவர்களாக இருப்பின் அது ஒரு சிறந்த சாசனமாகச் செயல்படும்.**

ஆதிக்கத்தைத் தோற்றுவிக்கும், சுதந்திரமில்லாத சமத்துவம் தனிப்பட்டவரின் முன்முயற்சியை அழித்துவிடும். சகோதரத்துவம் இல்லாத சுதந்திரம் சமத்துவமும் செயல்களின் இயற்கையான போக்காக இருக்க முடியாது. அதை செயல்படுத்த ஒரு காவல் அதிகாரி தேவைப் படுவார்.

இந்தியச் சமுதாயத்தில் இரண்டு விஷயங்கள் இல்லாதிருக்கும் உண்மையை ஏற்றுக் கொள்வதிலிருந்து நாம் ஆரம்பிக்க வேண்டும். அதில் ஒன்று தான் சமத்துவம், சமுதாய நிலையில் சமத்துவமற்ற தரவாரியான கோட்பாட்டைக் கொண்ட ஒரு சமுதாயமே இந்தியாவில் உள்ளது. சிலருக்கு உயர்ந்த அந்தஸ்தும் சிலருக்குத் தாழ்ந்த நிலையுமே அதன் பொருள். பொருளாதார நிலையில் சிலருக்கு அளவிடற்கரிய செல்வமும், சிலருக்கு தாங்க முடியாத வறுமையில் வாட வேண்டிய நிலையும் கொண்டது நமது சமுதாயம்.

***1950 ஆம் ஆண்டு 26 ஜனவரியன்று ஒரு முரண்பாடான வாழ்க்கை முறையில் நுழையப் போகிறோம். அரசியலில் சமத்துவமும், சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் சமத்துவத்தை எவ்வளவு காலம் மறுக்கப் போகிறோம்? நீண்டகாலம் அதைத் தொடர்ந்து மறுத்தால், நமது அரசியல் ஜனநாயகத்துக்கு ஆபத்தை விளைவிப்பதிலிருந்து தப்ப முடியாது. நாம் விரைவில் இந்த முரண்பாடுகளை நீக்கவேண்டும் இல்லையெனில் சமத்துவ உரிமை மறுக்கப்பட்டவர்கள் இந்த சபை கடுமையாக உழைத்து உருவாக்கிய அரசியல் ஜனநாயக கட்டமைப்பையே உடைத்தெறியலாம்.***

இரண்டாவது விஷயம் என்னவென்றால் சகோதரத்துவம் என்ற கோட்பாட்டை அங்கீ கரித்தது எனலாம். சகோதரத்துவம் என்றால் அதன் பொருள் என்ன? இந்தியர்கள் ஒரே மக்கள் என்பதால், எல்லா இந்தியர்களும் பொதுவான உடன்பிறப்புகள் என்ற உணர்வுதான். அது, இந்தக் கோட்டுபாடுதான் சமுதாய வாழ்வில் ஒற்றுமை யையும் ஒருமைப்பாட்டையம் அளிக்கிறது. இதை அடைவது மிகவும் கஷ்டமே, அமெரிக்க ஐக்கிய நாடுகள் பற்றி "அமெரிக்க காமென்வெல்த்" என்ற தனது நூலில் ஜேம்ஸ் பிரைஸ் எழுதியுள்ளதை எடுத்துக் காட்டுவதன் மூலம். இது எவ்வளவு கடினமானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பிரைஸின் சொந்த வார்த்தைகளில் சொல்வ தென்றால், விஷயம் இதுதான்

"சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க புரோடஸ்டென்ட் திருச்சபை பொதுவழிபாட்டு முறையைப் பற்றி மூன்றாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் அதன் கூட்டத்தில் விவாதித்தது. பிரார்த்தனையில் மக்கள் எல்லோருக்குமான ஒரு பிரார்த்தனை வாசகத்தைச் சேர்க்க வேண்டு மென்று ஒரு கருத்து எழுந்தது. நியூ இங்கிலாந்தைச் சார்ந்த ஒரு பிரபல சமயவல்லுநர் பின்வரும் வார்த்தைகளை முன்மொழிந்தார். "ஓ, பிதாவே எங்கள் தேசத்தை ஆசிர்வதியுங்கள்" ஒருநாள் மாலைநேர அவசர நிலையில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் ஆய்வுக்காக மறுநாள் அது கொண்டுவரப்பட்டு "தேசம்" என்ற சொல்லுக்கு எதிராகப் பல ஆட்சே பனைகள் எழுப்பப்பட்டன. "தேசம்" என்ற சொல் தேசிய ஒற்றுமையை மிகவும் அழுத்தமாகத் தெரிவிக்கிறது என்று அது நிராகரிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக இந்தச் சொற்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. "ஓ பிதாவே இந்த ஐக்கிய நாடுகளை ஆசிர்வதியுங்கள்".

இந்த நிகழ்ச்சி நடைபெற்றபோது அமெரிக்காவில் அதிகமான ஒருமைப்பாடு காணப்படவில்லை. அமெரிக்க மக்கள் தங்களை ஒரு தேசிய இனமாகக் கருதவில்லை. இந்திய மக்களுக்கு தங்களை ஒரு தேசிய இனம் என்று கருதுவது எவ்வளவு கடினமான விஷயம். ..... நாம் **ஒரு தேசிய இனம் என்று நம்புவது பெரும் மாயையில் இருக்கிறோம் என்றுதான் நான் நினைக்கிறேன். பல்லாயிரக்கணக்கான சாதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கும் இவர்கள் எப்படி ஒரே தேசிய இனமாக முடியும்?** இந்தச் சொல்லின் சமூக மற்றும் மனோதத்துவ ரீதியான பொருளில் நாம் இன்னும் ஒரு தேசிய இனமாக உருவாகவில்லை என்பதை எவ்வளவு விரைவில் உணர்ந்து கொள்கிறோமோ அந்த அளவுக்கு நமக்கு நல்லது. அப்பொழுதுதான் நாம் ஒரு தேசிய இனமாக வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அந்த இலக்கை அடை வதற்கு தீவிரமாகச் சிந்தனை செய்வோம். இந்த இலக்கை அடைவது மிகவும் கடிமனான விஷயமாக இருக்கும்.

அமெரிக்காவில் ஜாதிப்பிரச்சினை கிடையாது. இந்தியாவில் ஜாதிகள் உள்ளன. தேச விரோதமானது ஜாதிகள் (anti national). முதலில் சமூக வாழ்வில் அவை பிளவுகளை ஏற்படுத்து கின்றன. ஜாதிக்கும் ஜாதிக்கும் இடையே வெறுப்பையும், பொறாமையையும் உருவாக்கு வதால் அவை தேசிய இனக் கொள்கைக்கு விரோதமாக இருக்கின்றன. உண்மையிலேயே நாம் ஒரு தேசிய இனமாக உருவாக வேண்டுமென்றால் இந்த தடைக்கற்களை யெல்லாம் கடந்து வரவேண்டும். ஒரு தேசிய இனம் உருவானால் தான் சகோதரத்துவம் உண்மையானதாக இருக்க முடியும். சகோதரத்துவம் இல்லாத சமத்துவமும் சுதந்திரமும் ஒரு வண்ணப் பூச்சின் ஆழத்தைவிட அதிமாக இருக்க முடியாது.

நம் முன்னுள்ள பணிகளைப் பற்றிய என் சிந்தனைகள் இவைதான். சிலருக்கு இது மனதுக்கு உகந்ததாக இருக்காது. **பல காலமாகவே அரசியல் அதிகாரம் இந்நாட்டில் சிலரின் ஏகபோகமாக இருந்து வந்துள்ளது. பலரும் பொதி சுமப்பவர் களாவும், வேட்டையாடப்பட்டவர்களாகவுமே இருந்து வந்துள்ளனர். சிலரிடம் ஏகபோகமாக இருந்த அதிகாரத்தின் விளைவாக மற்றவர்கள் வாழ்க்கையில் மேம்பாடு அடையும் வாய்ப்பை இழந்தவுடன், வாழ்க்கையின் பொருளையே அது உறிஞ்சிக் குடித்துவிட்டது. தாங்கள் ஆளப்படு வதிலிருந்து அவர்கள் சோர்ந்து போய் விட்டார்கள். தாங்களே ஆளவேண்டும் என்ற ஆவல் அவர்களிடம் பொங்கி வழிந்து கொண் டிருக்கின்றது. நசுக்கப்படும் வகுப்பினரிடையே சுய உணர்வுக்கான ஆர்வம் ஒரு வர்க்கப் போருக்கோ, வகுப்பினர்களுக்கிடையேயான போராட்டத்தை வளர்த்து விடவோ, அனுமதித்து விடக்கூடாது. இந்த அவையின் பிளவுக்கு இது வழி வகுக்கும். உண்மையிலேயே அது அழிவுக்கான நாளாகும்.**

ஆப்ரகாம் லிங்கன் கூறியபடி தனக்குள்ளாக பிளவுப்பட்ட ஓர் அவை (சட்டமன்றம்) நீண்ட நாட்கள் தாக்குப் பிடிக்க முடியாது. அவர் களுடைய அவாக்கள் நிறைவேற வாய்ப்பளித்தால் அந்தச் சிலருக்கு நல்லது நாட்டுக்கும் நல்லது. அதனுடைய சுதந்திரத்தைக் காப்பதற்கும் சிறந்தது. அதனுடைய ஜனநாயகக் கட்டமைப்பைத் தொடர்வதற்கும் சிறந்தது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சமத்துவமும் சகோதரத்துவமும் நிறுவப்பட்டால் தான். இது சாத்தியமாகும் எனவேதான் நான் இதற்கு இவ்வளவு அழுத்தம் கொடுக்கிறேன். ●

## வாசகர்களிடமிருந்து...

பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பை – ‘வகுப்பு வாதம்’ என்று பார்ப்பனர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். பார்ப்பனர்களிடம் மட்டும்தான் பார்ப்பனியம் இருக்கிறதா என்ற கேள்வியை எழுப்பி, பார்ப்பன எதிர்ப்பின் கூர்மையை முனை மழுங்கடிக்கும் முயற்சிகளில், சில படித்த ‘முற்போக்காளர்’ என்று அடையாளப்படுத்தும் சிலரும் பேசியும் எழுதியும் வருகிறார்கள். முதலாளித்துவத்துக்கு ஊற்றுக்கண் முதலாளிகள்; நிலப்பிரபுத்துவத்துக்கு ஊற்றுக்கண் நிலப்பிரபுக்கள்; அதேபோல பார்ப்பனியத்தின் ஊற்றுக் கண் பார்ப்பனர்கள். இது எப்படி வகுப்புவாதமாகும்? ஜாதியை ஒழிக்க பார்ப்பான் என்ற அடையாளமே ஒழிக்கப்பட வேண்டும் என்றார் பெரியார். “பெரியாரும் இந்தியப் பொதுவுடைமையாளர்களும் : உறவும் முரணும்” எனும் கட்டுரையில் க. காமராசன், இந்தக் கருத்தை சிறப்பாக விளக்கியுள்ளார். குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியினர் ஜாதி ஒழிப்புக்கான தளத்தை பொருளாதாரத்தில் தேடியதையும் கட்டுரையாளர் சரியாகவே சுட்டிக்காட்டியுள்ளார். அதன் காரணமாகவே ஏகாதிபத்திய எதிர்ப்பை முன் வைத்து இந்து/இந்திய தேசியவாதிகளுடன் கூட்டுறவு கொண்டிருந்தனர். ஜாதி ஒழிப்புப் போராட்ட மரபைவிட தேசிய விடுதலைப் போராட்ட மரபுடன் தங்களை கம்யூனிஸ்டுகள் அடையாளப்படுத்திக் கொண்டதாக கூறுகிறார். பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு குறித்து அவரது கீழ்க்கண்ட விளக்கம் மிகச் சிறப்பானது.

“பெரியாரின் சாதி ஒழிப்பு வாதத்தில் மையம், பார்ப்பனர் என்னும் சமூக வகைமையை ஒழித்துக் கட்டுவது. எப்படி பொதுவுடைமை சமூக அமைப்புக்கு, முதலாளி என்னும் சமூக வகைமை ஒழிக்கப்படுவது அவசியமோ, அப்படி சாதி ஒழிப்புக்கு பார்ப்பன சமூக வகைமை ஒழிக்கப்படுவதும் அவசியம் என்பது பெரியாரின் வாதம்.

பார்ப்பன சமூக வகைமை யின் இருப்பு இந்து மதம், இந்திய தேசியம், இவற்றின் தொடர்ச்சியாக அமைந்த இந்திய அரசு ஆகியவற்றால் ஆதாரப்பட்டிருப்பதால், இவற்றை ஒழித்தால்தான் பார்ப்பன சமூக வகைமையை ஒழிக்க முடியும் என்றார்.”

வகைமை என்ற சொற்றொடரைப் பார்ப்பனர் என்ற தனித்துவமான ஆதிக்க அடையாளங்கள், பண்பாடுகளைச் சுட்டுவதற்கு பயன்படுத்தி யிருக்கிறார் கட்டுரையாளர்.

**– குகானந்தன், சென்னை**

# ‘சமூக சீர்திருத்தப் படை’ நடத்திய

# ஜாதி எதிர்ப்புப் போராளி பள்ளிகொண்டா கிருஷ்ணசாமி

● எட்வின் பிரபாகரன்




*வடாற்காடு மாவட்டத்தில் ஜாதி எதிர்ப்புக்காகப் போராடிய தளபதி கிருஷ்ணசாமியின் வரலாற்றை இளைய தலைமுறைக்கு உணர்த்தும் சிறந்த நூல்.*

“தளபதியாய் எங்களை வழிநடத்தினாய் !!

அண்ணாவாய் எங்களை அரவணைத்தாய் !!

தென்னாட்டு அம்பேத்கர் எனும்போது எம் உள்ளம் மகிழ்ச்சிக் கடலாகும் !!

இந்த பாடல், தேர்தல் அரசியல் தலைவரான பள்ளிகொண்டா கிருஷ்ணசாமியைப் பற்றி, அவருடைய நூற்றாண்டு விழாவில் பாடப்பட்ட பாடலாகும். அத்தகைய சிறப்புக்குரிய தலைவரைப் பற்றி, அவருடைய மகன் ப. கி. மனோகரன் எழுதிய நூல் “தென்னாட்டு அம்பேத்கர், தளபதி அண்ணா எம் கிருஷ்ணசாமி” என்பதாகும். தற்போதைய வேலூர் மாவட்டத்தின் ஒரு பகுதியான பள்ளிகொண்டாவில் 1916ஆம் ஆண்டு ஜூன் ஒன்றாம் நாளில் முருகனுக்கும், சின்னத்தாய்க்கும் மகனாக கிருஷ்ணசாமி பிறந்தார். சிறுவயதிலிருந்தே ஆதிதிராவிடர்கள் சந்தித்த ஒடுக்குமுறைகளை நேரில் கண்டு வளர்ந்தார். 1932 இல் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆதரவான இரட்டை வாக்குரிமையை எதிர்த்து காந்தி சிறையில் உண்ணாநோன்பு இருந்தார். அம்பேத்கரை அடிபணியவைக்கும் முயற்சிகள் நடந்தன. இரட்டை வாக்குரிமையை எந்த சூழலிலும் கைவிட வேண்டாம் என்று பெரியார், அம்பேத்கருக்கு தந்தி அனுப்பினார். ஆனால் காந்தியின் நீண்ட பட்டினிப் போராட்டம், அம்பேத்கரையும் வேறு வழியில்லாமல் விட்டுக்

கொடுக்க வைத்தது. அப்போது ஏற்பட்ட சமரசம் தான் பூனா ஒப்பந்தம்.

காந்தியின் இந்த செயல் சிறுவயதிலேயே கிருஷ்ணசாமியை சிந்திக்க வைத்தது. அதன் தொடர்ச்சியாக 1934இல் பள்ளிகொண்டாவில் உள்ள உருத்திர அரங்கநாதர் கோவிலுக்கு காந்தி வந்தார். அப்போது ஒரு இளைஞர் காந்தியை நோக்கி, "ஒடுக்கப்பட்ட மக்களை இந்த கோயிலுக்குள் அனுமதிப்பதில்லை. எல்லோரும் சமமென்றால் எங்களையும் இந்த கோயிலுக்குள் அழைத்து செல்வீர்களா?" என்று வினவினார். காந்தியும் ஒப்புக்கொண்டு, ஒடுக்கப்பட்டோரை அனுமதித்தால் தான் தானும் உள்ளே வருவேன் என்றார். சனாதனதர்மத்தில் ஊறிப்போன கோயில் நிர்வாகம் ஏற்க மறுத்ததால், காந்தி திரும்பிச் சென்றார். காந்தியிடம் கேள்வி கேட்ட அந்த இளைஞர் தான் கிருஷ்ணசாமி.

1936 இல் தாழ்த்தபட்டோர் பாசறையை உருவாக்கி இரவு பள்ளிகள் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தியவர் கிருஷ்ண சாமி. பாதிரியார் பிலிப்ஸ் மூலமாக இலவச கோதுமையும், பால் பொடியும் கிடைக்கச் செய்தார். பின்பு, ஜாதிக்கொடுமைகளுக்கு எதிராக "ஆதிதிராவிடர் இளைஞர் சங்கத்தை" தோற்று வித்தார். பள்ளிகொண்டா தேனீர் கடைகளில் இரட்டைக் குவளை முறையும், தீண்டாமையும் கடைபிடிக்கப்பட்டு வந்த நிலையில், கிருஷ்ண சாமியின் வழிகாட்டுதலின்படி போராட்டங் களின் மூலமாகவும், வழக்குகளின் மூலமாகவும் இந்த கொடுமைகள் நீங்கின. தாழ்த்தப்பட்டோரை நுழைய அனுமதிக்காத தெருக்களில், மக்களை திரட்டி மிகப்பெரிய அணிவகுப்புகளை நடத்தி, தெருக்களில் நுழையும் உரிமையை பெற்றுத் தந்தார். இராணுவ உடையுடன் பூட்சுகளை அணிந்து கொண்டு, விடுப்பில் வந்த ராணுவ வீரர்கள் முன்னே செல்ல, அவர்களை பின் தொடர்ந்து இளைஞர் பட்டாளம் சென்ற அணி வகுப்புகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

பறை இசைக்கும் ஒடுக்கப்பட்டோரை ஆதிக்கவாதிகள் அடிமைகளாக நடத்தும் அதே வேளையில், சாவுக்கு பறை இசைக்கவும் பயன்படுத்திக் கொண்டனர். "தம் பரம்பரை இழிவுக்கு காரணமானதும், வேண்டிய வருவாயை கொடுக்க வழியற்றதுமான பறையடிக்கும் தொழிலை கைவிடுவதற்கு அறிகுறியாக, தமது தப்பட்டைகளை கொளுத்தி, தமது வெறுப்பை வெளிப்படையாக தெரிவித்துகொள்வார்களாக. இதற்கான ஒத்துழைப்பையும், ஆதரவையும் தருமாறு ஆங்காங்குள்ள திராவிடர் கழக தோழர்களை கேட்டுக்கொள்கிறேன்" என்று அறிக்கை விடுத்தார் பெரியார். சாவுக்கு பறை இசைப்பதை நிறுத்த தொடர் பிரச்சாரம் மேற்கொண்டார் கிருஷ்ணசாமி. பலரும் பறைத் தொழிலை கைவிட்டனர். கைவிடாதவர்களின் பறைகள் இளைஞர்களால் உடைக்கப்பட்டன. பிற்காலத்தில் ஆர்.கே. எம் பள்ளியில் ஆசிரியராக பொறுப்பேற்ற கிருஷ்ணசாமி, மாணவர்கள் மத்தியில் நூல் வாசிப்பு பழக்கத்தை பெரிதும் வளர்த்தார்.

1938ஆம் ஆண்டு, இரட்டைமலை சீனிவாசன் அவர்களால், "மதராஸ் மாகாண பட்டியலின கூட்டமைப்பு" (Madras Provincial Scheduled Caste Federation) தொடங்கப்பட்டது. இக்கூட்டமைப்பின் கொடி உதயசூரியன் கொடியாகும்; இதழ் உதயசூரியன் இதழாகும். இவ்விதழின் உதவி ஆசிரியராக பள்ளிகொண்டா கிருஷ்ணசாமி பணிபுரிந்தது குறிப்பிடத்தக்கது. 1942 ஆம் ஆண்டு, அம்பேத்கரின் வழிகாட்டு தலின்படி, தந்தை சிவராஜ் தலைமையில் "அகில இந்திய பட்டியலின கூட்டமைப்பு" (All India Scheduled Caste Federation) உருவாக்கப்பட்ட பின், "உதயசூரியன்" இதழ் இரண்டு கூட்டமைப்பு களுக்கும் பொதுவான இதழாக செயல்பட்டது. அதன் அடையாளமாக உதயசூரியன் கொடியும் இதழில் இருந்து நீக்கப்பட்டு, வெள்ளைக் கொடி இடம் பெற்றது. பின்னர், வெள்ளைக் கொடிக்கு பதிலாக, 7 நட்சத்திரங்களுடன் SCF என்ற எழுத்துகளைக் கொண்ட அகில இந்திய சம்மேளனத்தின் கொடி இடம்பெற்றது. பின்னாளில் 7 நட்சத்திரங்கள் 12ஆக மாற்றப் பட்டன.1947ஆம் ஆண்டு ஜூலை வரை இவ்விதழ் வெளியானது. 1942ஆம் ஆண்டிலிருந்தே அகில இந்திய பட்டியலின கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக கிருஷ்ணசாமி செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

"பட்டியல் இன மக்கள் ஜாதி இந்துக்களின் கொடுமை கண்டு அஞ்ச வேண்டாம்; துணிவுடன் போராடுவோம்" என்று அறைகூவல் விடுத்தது. கூட்டமைப்பின் செயல்பாடுகளை பெரியாரின் 'விடுதலை' நாளேடு தொடர்ந்து வெளியிட்டது. நூலாசிரியர் இந்த நூலில் 'விடுதலை'யின் செய்திகளையே தரவுகளாகப் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார். பார்ப்பனரல்லாதார் இயக்கமான ஜஸ்டிஸ் கட்சி தோழர்கள் தளபதி கிருஷ்ணசாமியுடன் இணைந்து செயல்பட்டிருக் கின்றனர். 1954, ஜன. 23, 24 தேதிகளில் ஈரோட்டில்

பெரியார் நடத்திய புத்தர் கொள்கைப் பிரச்சார மாநாட்டை நடத்தினார். பட்டியல் இனக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.என். ராஜ்போஜ் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியிருக்கிறார். பள்ளி கொண்டா கிருஷ்ணசாமி பங்கேற்று சிறப்புரையாற்றியிருக்கிறார்.

புரோகித ஒழிப்பு - ஜாதி மறுப்புத் திருமணங்களை உறுதியாக ஆதரித்து பரப்பி யிருக்கிறார், தளபதி கிருஷ்ணசாமி. ஆயிரக் கணக்கில் சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறார். மணவிழா மேடைகளில் பார்ப்பன - புரோகித - ஜாதி எதிர்ப்புக் கருத்து களைப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக் கிறார். கிராமங்கள் தோறும் பேசுகிற கூட்டங் களில் பெண் கல்வியையும் பெண்ணுரிமையையும் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

1939இல் தொடங்கிய இரண்டாம் உலகப் போரில், ஒடுக்கப்பட்டோரும், இந்திய பிரிட்டிஷ் இராணுவத்தில் இணைய அம்பேத்கர் விரும்பினார். கிருஷ்ணசாமியும் இளைஞர்களை அனுப்பினார். அவ்விளைஞர்கள் தான் போருக்கு பின், கிருஷ்ணசாமியின் தளபதிகளாக இருந்து வீரத்தோடு செயல்பட்டனர். அந்த வகையில் அவருடைய தொலைநோக்குப் பார்வை பாராட்டு க்குரியது. போரின்போது ஆங்கிலேய ஆட்சி யாளர்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்றிருந்தார் கிருஷ்ணசாமி. மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பெயரில், சென்னை மாகாண ஆளுநர் சர் ஆர்தர் ஆஸ்வல்ட் ஜேம்ஸ் ஒப்பால், செங்கல்பட்டு மண்டலத்திற்கு மாநில பிரதம போர் பிரச்சாரகராக (Regional Propagandist) நியமிக்கப்பட்டிருந்தார்.

1940இல் சிறுமேலூர் கிராமத்தில் ஜாதிக் கொடுமைகள் மிகப்பெரிய அளவில் நடை பெறுவதை அறிந்த கிருஷ்ணசாமி, தன்னுடைய சமூக சீர்திருத்தப்படையை அனுப்பி வைத்த தோடல்லாமல், தானும் சிறுமேலூர் கிராமத்தில் 5 நாள்கள் மக்களுடன் தங்கி, அவர்களுக்கு தைரிய மூட்டி போராட வைத்தார். போராடுவதையே வாழ்க்கையாகக் கொண்ட கிருஷ்ணசாமி 1945இல் கனகாம்பாளை மணந்தார். இணையர்களுக்கு கிருஷ்ணகுமார், மனோகரன் (நூலாசிரியர்), காவேரி ஆகியோர் பிறந்தனர். 1946ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடைபெற்ற திருவண்ணாமலை தொகுதி தேர்தலில், சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றார். பூனா ஒப்பந்தம் நிறை வேறாமல், தாழ்த்தப்பட்டோருக்கு இரட்டை வாக்குரிமை கிடைத்திருந்தால், அவரைப் போன்ற திறமையான தலைவர்கள் பல பேர் வென்றிருப்பார்கள். அம்பேத்கரையும் இதே போல தோற்கடித்தது இந்திய ஜாதிய சமூகம்.

1946 ஆகஸ்ட் 24 இல் அமைந்த இடைக்கால அமைச்சரவையில், பட்டியலின மக்களுக்குரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. ஜெகஜீவன் ராம் பெயர் மட்டுமே இடம் பெற்றிருந்தது. எனவே, பூனாவில் கூடிய பட்டியலின கூட்டமைப்பு, ஜெகஜீவன்ராம் அப்பதவியை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொண்டது. இதனை ஏற்க மறுத்த ஜெகஜீவன் ராம், அமைச்சரவை குழுவிடம், டாக்டர் அம்பேத்கர் தலைமையிலான தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்துக்கும், தன்னுடைய தாழ்த்தப்பட் டோர் லீகுக்கும் உள்ள வேறுபாடுகளை தெரிவித்தார். அம்பேத்கர் தலைமையிலான தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தில் உள்ள தாழ்த்தப்பட்டோர் இந்துக்கள் இல்லை, அவர்கள் மதச் சிறுபான்மையினர் என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளதாகவும், ஆனால் லீகில் உள்ள தாழ்த்தப்பட்டோர் தங்களை இந்துக்களாகவே கருதுகின்றனர் என்றும் கூறினார். ஜெகஜீவன் ராமின் இந்த கருத்து அகில இந்திய பட்டியலின கூட்டமைப்பினரை வெகுண்டெழச்செய்தது. 25.12.1946 அன்று சென்னையிலும் ஜோலார் பேட்டையிலும் (தளபதி கிருஷ்ணசாமி தலைமையில்) ஜெகஜீவன்ராமுக்கு கருப்புக்கொடி காட்டப்பட்டது. அதில் பெரியார் இயக்கத் தினரும் பங்கேற்றனர்.

தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு உற்ற தலைவராகவும் தோழராகவும் அன்பிற்குரிய சகோதரராகவும் விளங்கிய ஜே.ஜே. தாஸை பாராட்ட 1947இல் ஒரு விழாவை ஏற்பாடு செய்திருந்தார் கிருஷ்ணசாமி. அதே கூட்டத்தில், பெரியார் கிருஷ்ணசாமியையும் பாராட்டினார். அதே ஆண்டில், “சமத்தும சங்கு” என்ற இதழை கிருஷ்ணசாமி தொடங்கினார். 3.12.1947இல் வெளியான அவ்விதழின் ஒரு பிரசுரத்தில், “ஆதிக்க மோகம் கொண்ட முஸ்லிம்களுக்கும், கட்சிப்பித்து கொண்ட காங்கிரசுக்காரர்களுக்கும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் சாட்டை” என்ற தலைப்பில் அம்பேத்கரின் எழுத்துகள் வெளி யிடப்பட்டன. “பாகிஸ்தானில் பட்டியலினத்தவர் பலவந்தமாக மதம் மாற்றப்படுகின்றனர். இந்தியாவில் அவர்கள் பலவந்தமாக அரசியல் கட்சிக்கு (காங்கிரசுக்கு) மாற்றப்படுகின்றனர்” என்ற பேருண்மையை அம்பேத்கர் வெளிக்

கொண்டு வந்தது, "சமத்துவ சங்கில்" பதிவு செய்யப் பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1948இல் சட்ட விரோதமான கட்சி என தடை செய்யப்பட்டது. அதனால் 1948 முதல் 1950 முடிய கொடிய அடக்குமுறைகள் ஏவப்பட்டன. கட்சி தோழர்கள் பலர் தலைமறைவாகினர். திராவிடர் கழகமும், பட்டியலின கூட்டமைப்பும், இன்னும் பல முற்போக்கு அமைப்புகளும் கம்யூனிஸ்டுகளுக்கு அடைக்கலம் தந்தன. ஜீவா போன்ற தலைவர்களுக்கு பள்ளிகொண்டாவிலுள்ள செல்லியம்மன் மலை முக்கிய அடைக்கலமாக இருந்தது. அவர்களுக்கு வேண்டிய உணவு தளபதி கிருஷ்ணசாமியின் நம்பிக்கைக்குரிய தொண்டர்கள் மூலம் அனுப்பப்பட்டன. இரவு நேரங்களில் கிருஷ்ணசாமி நடத்திய கோழிப் பண்ணையிலும், நம்பிக்கையான நண்பர்கள் இல்லங்களிலும் தங்க வைக்கப்பட்டு, மிக்க பாதுகாப்போடு அவர்கள் காக்கப்பட்டார்கள். 1952இல் இராஜகோபாலாச்சாரி (ராஜாஜி) குலக்கல்வியை கொண்டு வர எண்ணினார். மனுதர்மத்தைக் காக்கும் இந்த நடவடிக்கையை எதிர்த்து, திராவிடர் கழகமும், பட்டியலின கூட்டமைப்பும், இன்னும் பல இயக்கங்களும் போராடின. இவற்றின் விளைவாக, ராஜாஜி பதவி விலக நேரிட்டது. 1954 ஜனவரியில் பெரியார் நடத்திய ஆச்சாரியார் குலக்கல்வி திட்ட எதிர்ப்பு மாநாட்டில், தளபதி கிருஷ்ணசாமி கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

1956ஆம் ஆண்டு அக்டோபர் 28இல் வேலூர் நகரசபையில் அம்பேத்கர் படத்திறப்பு நிகழ்வு நடைபெற்றது. கிருஷ்ணசாமி மிகச் சிறப்பாக வரவேற்கப்பட்டார். திரண்டிருந்த மக்களின் பலத்த கைதட்டலுடன், அம்பேத்கரின் படத்தை பெரியார் திறந்து வைத்தார். இன்றைக்கு சில அம்பேத்கரியர்களும், பெரியாரியர்களும், பெரியாரின் தனித் தமிழ்நாடு கோரிக்கையை எதிர்த்தும், இந்திய தேசியத்தை ஆதரித்தும் பேசுகின்றனர். ஆனால், அம்பேத்கர் உருவாக்கிய இந்திய குடியரசு கட்சி, அம்பேத்கர் மறைவுக்குப் பின், தமிழ்நாட்டில், கிருஷ்ணசாமியின் வழிகாட்டுதலில் இயங்கியபோது, 1958ஆம் ஆண்டில், விடுதலை நாளை துக்க நாள் என்று அறிவித்தது. (இந்த விடுதலை பார்ப்பனர்களுக்கான விடுதலை என்ற புரிதலின் அடிப்படையில்). இதற்கு 11 ஆண்டுகளுக்கு முன்பே, 1947இல், சுதந்திரநாளை துக்க நாள் என்று பெரியார் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

தளபதி கிருஷ்ணசாமியின் கொள்கைகள் எத்தகையன என்பதனை அறிய, 1960இல் விவசாய மாநாட்டில் அவர் நிறைவேற்றிய தீர்மானங்களே போதும்.

1. ஆங்கிலேயர் காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்ட பஞ்சமி நிலங்களை ஆக்கிரமித்துள்ள ஜாதி இந்துக்களிடமிருந்து நிலங்களை மீட்டு உரியவர்களுக்கே மீண்டும் அரசு ஒப்படைத்தல் வேண்டும்.
2. தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகியவற்றை முறையாக கணக்கெடுத்து, ஏழை விவசாயிகளுக்கு தலா 5 ஏக்கர் நிலத்தை அரசு வழங்க வேண்டும்
3. ஜாதி இந்துக்களின் சமூகக் கொடுமைகளிலிருந்து, தாழ்த்தப்பட்ட மக்களை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுப்பதோடு, அரசு கடுமையான சட்டம் இயற்ற வேண்டும். இருக்கின்ற வன்கொடுமை சட்டத்தை முறையாக அரசு பயன்படுத்தி, ஜாதி வெறியர்களையும், அவர்களின் கொடுமைகளையும் அடக்க வேண்டும்.
4. கோயில் நிலங்களை வேளாண் குடிகளுக்கு அரசு குத்தகைக்கு விட பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்
5. அர்ச்சகர் தொழிலை அனைவருக்கும் என ஆக்கிட வழிவகுக்கும் சட்டம் இயற்றிடவும், நடவடிக்கை மேற்கொள்ளவும் அரசை வலியுறுத்துகிறது.
6. கிராமங்களில் மணியக்காரர், கணக்கு பிள்ளை பணிகளை பரம்பரையாக அனுபவிப்பதை தடுத்து, கல்வியின் அடிப்படையில் தேர்ச்சி பெறுகிறவர்களுக்கு வழங்கிட வேண்டுமென அரசை வலியுறுத்துகிறது.
7. இரயில்வே புறம்போக்கு நிலங்களில், வீடில்லா ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக்கொள்ள முறையான பட்டா வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாநாடு வலியுறுத்துகிறது

ஆகிய 7 தீர்மானங்கள் அவர் யாரென அடையாளம் காட்டும். இறுதிவரை நேர்மையான அரசியல் வாழ்வை நடத்திய தென்னாட்டு அம்பேத்கர் தளபதி அண்ணா கிருஷ்ணசாமி 30.09.1973 இல் மறைந்தார்.

நூல்: 'தளபதி - அண்ணா தென்னாட்டு அம்பேத்கர் எம். கிருஷ்ணசாமி' ஆசிரியர் ப.கி. மனோகரன்.
தொடர்புக்கு - 9444059643

### இந்து இராஷ்டிரத்தை நோக்கிய ஆபத்து:

# குடியுரிமைக்கு மத அடையாளமா?

ஒரு நாடு தன் நாட்டின் குடிமக்களாக யார் இருக்க முடியும்? என்பதை வரையறுப்பதன் மூலம் தன்னை வரையறுத்துக் கொள்கிறது. ஏனென்றால் உண்மையில் குடியுரிமை தான் உரிமைகளைப் பெறுவதற்கான உரிமையாகும்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்றுக் கொண்ட 1950ஆம் ஆண்டிலேயே இது வரையறுக்கப்பட்டுவிட்டது. அதாவது, குடியுரிமையைப் பற்றிய பிரிவு 2 இந்திய நிலப்பரப்பில் வசிப்பதன் அடிப்படையில் குடியுரிமை வழங்குகிறது.

உண்மையில் அரசியல் சட்டத்தின் பிரிவு 6ன் படி பாகிஸ்தானிலிருந்து இந்திய நிலப்பரப்பிற்கு குடிபெயர்ந்தவர்களுக்கும் குடியுரிமை வழங்கப்பட்டது. மதம் குடியுரிமை வழங்குவதற்கான ஒரு காரணியாக இருக்காது என்பது இதில் பளிச்சென்று விளங்கும்.

அதேசமயம் அரசியல் சட்டம் குடியுரிமையை வழங்குவது மற்றும் குடியுரிமையைப் பறிப்பது குறித்த சட்டமியற்றி நாடாளுமன்ற உரிமையை அங்கீகரித்திருந்தது. இதன் தொடர்ச்சியாகவே நாடாளுமன்றம் குடியுரிமைச் சட்டம் 1955ஐ இயற்றியது. அதாவது, மதம் குடியுரிமை வழங்குவதற்கான ஒரு காரணியாக 1955ஆம் ஆண்டு சட்டத்திலும் இல்லை. இந்த நிலையை குடியுரிமைச் சட்டத்திருத்த மசோதா 2019 மாற்றுவதற்கு முயல்கிறது. அதேபோல, 1955ஆம் ஆண்டு சட்டத்தில் சில பிரிவுகளையும் மாற்ற முயல்கிறது.

இதுகாறும் இந்தப் பிரச்சினையில் பெரும்பான்மையான கேள்விகளும், விவாதங்களும் மதச்சார்பற்ற அரசியல் அமைப்பைக் கொண்ட இந்தியா போன்ற நாடு, மத அடிப்படையிலான சில குழுக்களை குடியுரிமை வழங்குவதற்கு தேர்ந்தெடுக்கலாமா என்பதைப் பற்றியே நடைபெறுகிறது.

மதச்சார்பின்மை அரசு அமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று என்று பல்வேறு தீர்ப்புகளில் அறுதியிட்டுக் கூறப்பட்டுள்ளது. அடிப்படையான இந்தக் கேள்வியைத் தவிர இந்த மசோதாவை நோக்கினால் அரசியல் சட்டத்திற்கு விரோதமான அம்சங்கள் விரவிக் கிடப்பதைக் காண முடியும்.

நாடுகள் மற்றும் குழுக்கள் சம்மந்தமான இந்த மசோதா வின் வகைப்பாடு சந்தேகத்திற்கு இடமானது.

ஆப்கானிஸ்தான், பாகிஸ் தான் மற்றும் வங்காளதேசத்தை இணைப்பதற்கும், அதே போன்று மற்ற அண்டை நாடு களை விட்டுவிட்டதற்குமான அடிப்படை தெளிவற்றது.

அனைவருக்கும் ஒரே வர லாறு என்பது அடிப்படையாக இருக்க முடியாது. ஏனெனில் ஆப்கானிஸ்தான் ஒருபோதும் பிரிட்டிஷ் இந்தியாவின் பகுதி யாக இருந்ததில்லை. எப்போ தும் தனி நாடாகவே இருந் திருக்கிறது. பூகோள ரீதியாக அண்டை நாடு என்றும் ஆப்கானிஸ்தானைச் சொல்ல முடியாது. ஏனெனில் இரண்டு நாடுகளுக்கும் பொதுவான எல்லைப் பகுதி கிடையாது. மிக முக்கியமாக நேபாளம், பூடான், மியான்மர் ஆகிய இந்தியா வுடன் எல்லைகளைக் கொண்ட நாடுகள் ஏன் இதிலிருந்து விலக்கப்பட்டன என்பது தெரியவில்லை.

நோக்கம் மற்றும் காரணங் கள் பற்றிய பகுதியில் இந்த மசோதாவிற்கு காரணமாகச் சொல்லப்படுவது மேற்கண்ட மூன்று நாடுகளிலும் அரசில் மதங்கள் இருப்பது என்பதும், எனவே, மதச் சிறுபான்மை யினரை பாதுகாப்பதற்காகவும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்திற்கு எந்த வலுவும் இல்லை. பிறகு ஏன் பூடான் இந்தப் பட்டியலில் இல்லை. அது இந்தியாவின் அண்டை நாடு. வஜ்ராயனா புத்த மதத்தை தனது அதிகாரப் பூர்வ மதமாக ஏற்றுக் கொண்ட நாடு. இது ஏன் இந்தப் பட்டி யலில் இருந்து விடுபட்டுள்ளது.

உண்மையில் பூடானிலுள்ள கிறித்தவர்கள் தங்கள் வீடு களுக்குள் தனிமையில்தான் வழிபட முடியும். பூடானைச் சேர்ந்த பல கிறித்தவர்கள் இந்தியாவில் எல்லைப் பகுதி யில் இருந்தால் ஒரு தேவால யத்தில் வழிபாடு செய்வதற்காக இந்தியாவிற்கு வந்து செல் கிறார்கள். ஆனால், அவர் களுக்கு குடியுரிமைச் சட்ட மசோதாவின் அடிப்படையில் இந்த வாய்ப்பு வழங்கப்பட வில்லை.

**மேலும், மதச் சிறு பான்மையினர் அந்தக் காரணத் திற்காக துன்புறுத்தலுக்கு அண்டை நாடுகளில் உள்ளா கிறார்கள் என்றால் இலங்கை ஏன் இதில் சேர்க்கப்பட வில்லை. அது புத்த மதத்தினர் பெரும்பான்மையாக உள்ள நாடு.**

தமிழ் இந்துக்கள் துன்புறுத் தப்படுவது அந்த நாட்டின் வரலாறாக இருக்கும் போது அந்த நாடு ஏன் சேர்க்கப்பட வில்லை? மியான்மர் ஏன் சேர்க் கப்படவில்லை. ரோகிங்கியாக முஸ்லீம்களுக்கு எதிராக அந்த நாடு நிகழ்த்தியிருக்கிறது. அந்த மக்களில் பலர் இந்தியாவில் அகதியாக வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏன் சேர்க்கப்படவில்லை. குடி யுரிமைச் சட்டத்தில் மூன்று நாடுகள் மட்டும் சேர்க்கப்பட் டிருப்பது நியாயமற்றது.

### மதங்களின் வகைப்பாடு

தனிநபர்கள் பற்றிய வகைப் பாட்டில் மத ரீதியான துன் புறுத்தலுக்கு உள்ளானவர் களுக்கு மட்டும் வாய்ப்பளிக் கிறது. இதுவே, சந்தேகத்திற்கு இடமான வகைப்பாடாகும். உலகம் முழுவதும் மத ரீதியான துன்புறுத்தல்கள் நிலவுகின்றன. அதற்கு சற்றும் குறையாத வகையில் அரசியல் ரீதியான துன்புறுத்தல்களும் நிறைந்து கிடக்கின்றன. துன்புறுத்தல் களால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதுதான் நோக்க மெனில் மத ரீதியான துன் புறுத்தலுக்கு உள்ளானவர்களை மட்டும் பாதுகாப்பது எனும் கட்டுப்பாடு தர்க்க நியாய மற்றது.

இன்னும் கூடுதலாக ஒரே மதத்தில் உள்ளவர்கள் மத அடிப்படையிலான துன்புறுத் தல்களுக்கு ஆளாவதில்லை என்கிற எண்ணமும் தவறானது. வங்காளதேசத்தைச் சேர்ந்த தஸ்லீமா நஸ்ரின் பிரச்சினையே சரியான உதாரணமாகும். அவரோ அவரைப் போன்ற வர்களோ இந்த சட்டத்தின் அடிப்படையில் இந்திய குடிமகளாகும் வாய்ப்பைப் பெற மாட்டார்கள். சொல்லப் போனால், வங்காளதேசத்தில் இருந்த இந்துக்களை விட மிக அதிகமாக தனிப்பட்ட முறை யில் அரசியல் துன்புறுத்தல் களை எதிர்கொண்டவர் தஸ்லீமா நஸ்ரின்.

இதேபோன்று பாகிஸ் தானில் உள்ள ஷியாப் பிரிவினர். ஒரே மதத்தில் உள்ள வேறு பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ப தால் பாகிஸ்தானில் மிகக் கடுமையான துன்புறுத்தல் களுக்கு உள்ளாக்கப்படு கிறார்கள்.

இறை நம்பிக்கையற்றவர்கள் இந்தச் சட்டத்தின் அடிப்படை யில் குடியுரிமை பெற தகுதி யற்றவர்கள் என்பது அதிர்ச்சி யளிக்கும் உண்மையாகும்.

இந்துக்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர், ஜைனர்கள், பார்சிகள் மற்றும் கிறித்த வர்கள் ஆகிய ஆறு மதப் பிரிவினருக்கு மட்டும் மதச் சிறுபான்மையினர் என்ற அந்தஸ்து அளித்து குடியுரிமை பெற வாய்ப்பளிப்பது கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியதாகும்.

பாகிஸ்தானிலுள்ள அகமதியாக்கள் அந்த நாட்டில் முஸ்லீம்கள் என்று அங்கீகரிக்கப்படுவதில்லை. வேறு மதத்தைச் சார்ந்தவர்களாகவே நடத்தபடுகிறார்கள். உண்மையில் இஸ்லாத்தின் அர்த்தங்களை மாற்றுவதற்கு முயல்கிற மதமாகப் பார்க்கப்படுவதால் பாகிஸ்தானில் இந்துக்களை விடவும் கிறித்தவர்களை விடவும் மிக அதிகமான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுபவர்கள் அகமதியாக்கள். இந்தச் சட்டத்தில் அறிவிக்கப்பட்ட நோக்கம் மதத்தின் காரணமாக தான் பிறந்த நாட்டில் துன்புறுத்தப்படுபர்களுக்கு குடியுரிமை வழங்குவதுதான் எனில் அகமதியாக்கள் இந்தப் பட்டியலில் இடம் பெறாதது (உள்நோக்கத்தை) தெளிவுபடுத்துகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 14வது பிரிவு எந்தவொரு மனிதனுக்கும் (குடிமகனும் அல்ல) சட்டத்தின் முன் சமத்துவத்தையும் அல்லது சட்டத்தில் பாதுகாப்பையும் இந்திய மண்ணுக்குள் மறுப்பதைத் தடுக்கிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மிகத் தீவிரமான பொருத்தமின்மைகளின் காரணமாக இந்தச் சட்டம் ஒரே மாதிரியான மனிதர்களுக்கு ஒரே மாதிரியான பாதுகாப்பு அளிப்பதிலிருந்து தவறுகிறது என்பதை யூகிப்பது கடினமல்ல.

சட்ட விரோத குடியேற்றக்காரர்களாக இந்தியாவிற்குள் வந்தவர்களில் உண்மையிலேயே மிக அதிகமாக தேவைப்படுகிறவர்களுக்கு குடியுரிமை அளிப்பதற்குப் பதிலாக இந்தச் சட்டம் அதற்கு குறைவானவ பாதிப்பிற்கு உள்ளானவர்களுக்கு குடியுரிமை வழங்க முனைகிறது.

தன்னை மியான்மர் அரசாங்கத்தின் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக இந்திய எல்லைக்குள் வந்தவர்கள் குடியுரிமை பெறும் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களாகவும் அதே சமயம் நேரடியான எந்த மதத் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகாமல் பொருளாதார காரணங்களுக்காக மட்டும் இந்தியாவிற்குள் வந்தவர்களுக்கு மதத் துன்புறுத்தல் காரணமாக குடிபெயர்ந்தவர்களாகக் கருதி குடியுரிமை வழங்குவதை வேறெப்படி விளங்கிக் கொள்ள முடியும்.

இதேபோன்று யாழ்ப்பாணத்திலிருந்து கடல் வழியாக தோணிகள் மூலம் இலங்கையில் அட்டூழியங்களுக்குப் பயந்து வந்த தமிழர்கள் தொடர்ச்சியாக சட்டவிரோத குடியேற்றக்காரர்களாகவும் ஒருபோதும் குடியுரிமை பெற வாய்ப்பில்லாதவர்களாக ஆக்கப்படுவதையும் எப்படிப் புரிந்து கொள்வது?

இதேபோன்று ஏராளமான உதாரணங்களைக் குறிப்பிட முடியும். இந்தச் சட்டம் எந்த அளவிற்கு தானடித்த மூப்பாக கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதற்கு.

இதேபோன்று இந்திய குடியுரிமை பெறுவதற்கு இந்தியாவில் 11 ஆண்டுகள் தொடர்ந்து இருந்திருக்க வேண்டும் என்பது தற்போது 5 ஆண்டுகளாக குறைக்கப்பட்டிருக்கிறது. தானடித்த மூப்பானது என்பதற்கு மிகச்சரியான உதாரணமாக இதைக் கொள்ள முடியும்.

குடியுரிமை திருத்தச் சட்டம் எந்த அரசியலமைப்பு தர்க்கத்திற்கும் உட்படாதது. ஆனால், அதற்கு அரசியல் ரீதியான கெட்ட உள்நோக்கம் இருக்கிறது என்பது தர்க்க ரீதியாக பொருந்திப் போகிறது. **சட்ட ரீதியாக இந்துக்களுக்கு முன்னுரிமை அளித்து (இஸ்லாமியர்களை விலக்கி) குடியுரிமை வழங்குவது இந்தியாவை இந்து நாடாக மாற்றுவதற்காக முயல்வதாகும். இதுதான் இந்தியாவை ஹிந்து ராஷ்டிரமாக மாற்றுவதற்கான பிள்ளையார் சுழியாகும்.**


இந்தியர்களுக்கான நாடாக இந்தியா இருக்க வேண்டுமென்றால் அதாவது இந்து ஆப்கானியர்கள், இந்து பாகிஸ்தானியர்கள், இந்து வங்காள தேசிகள், இந்து ரஷ்யர்கள், இந்து அமெரிக்கர்கள் ஆகியோருக்கான நாடாக இந்தியா ஆகிவிடக் கூடாது என்றால் குடியுரிமைச் சட்ட திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட வேண்டும்.

இந்த சட்டத்தை அப்பட்டமான அரசியல் சட்ட மீறல் என்று நீதிமன்றம் நிராகரிக்க வேண்டும். இல்லையேல், இது ஆரம்பமாக மட்டுமே இருக்கப் போகிறது. இது முடிவாக இருக்காது. காலப்போக்கில் இதுபோன்ற சட்ட நகர்வுகள் இன்றைக்கு நாம் அறிந்திருக்கும் அரசமைப்புச் சட்டத்திற்கு முடிவு கட்டிவிடும்.

('இந்து' ஆங்கில நாளேட்டில் ஷதன் ஃப்ராஷத் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம்)

# எல்லைகளைத் தாண்டிய அயோத்தி தீர்ப்பு

● எஸ்.வி. ராஜதுரை



***பாபர் மசூதி விவகாரம் தொடர்பான அயோத்யா வழக்கில் வழங்கப்பட்டுள்ள ‘வரலாற்றுச் சிறப்புமிக்க’ தீர்ப்புடன் ஓர் இணைப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. அதை எழுதிய நீதிபதியின் பெயர் குறிப்பிடப்படவில்லை. பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்பது தொடர்பான வழக்கு அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் நடந்து வந்தபோது, அந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் உச்ச நீதிமன்றத்தால் பரிசீலனை செய்யப்பட்டன. அவற்றில் உச்ச நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்புக்காக ஏற்றுக்கொண்ட சாட்சியங்களிலொன்று ராஜிந்தர் சிங் என்ற சீக்கியர் கூறியதாகும்.***

“சீக்கிய வழிபாட்டு மரபு பற்றிய மத, பண்பாட்டு, வரலாற்று நூல்கள் பற்றிய ஆய்வில் அக்கறை கொண்டவர்” என்றும், “சீக்கியர்களுக்கென்றேயான வழிபாட்டு முறை, அவர்களது வரலாறு ஆகியன பற்றிய பல புத்தகங்களிலிருந்து மேற்கோள் காட்டியவர்” என்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அவரைப் பற்றிக் கூறுகிறது. இப்படிக் கூறுகையில் உச்ச நீதிமன்றம் ‘Sikh cult’ என்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளதற்குப் பல சீக்கிய மதத் தலைவர்களும் வரலாற்று அறிஞர்களும், வழக்குரைஞர்களும் கடும் ஆட்சேபணை தெரிவித்துள்ளனர் என்று ‘தி ஒயர்’ டிஜிட்டல் ஏட்டில் 13.11.2019இல் வெளிவந்துள்ள கட்டுரையொன்று கூறுகிறது (Why Sikhs Are Angry With the Ayodhya Judgment).

ஏனெனில் ‘cult’ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, “பெரும்பாலும் ஒன்றுகூடி வாழ்கின்ற, அதீதமானதும் விநோதமானதுமான நம்பிக்கைகள் என்று பலரால் கருதப்படுகின்றவற்றைக் கொண்டுள்ள ஒரு மதக் குழு” என்று பொருள் என கேம்பிரிட்ஜ் ஆங்கில அகராதி கூறுகிறது. “வழக்கத்துக்கு மாறானது, போலியானது என்று கருதப்படக்கூடிய ஒரு மதம்” என்று மிரியம் வெப்ஸ்டர் அகராதி கூறுகிறது. ஆகவே, தங்கள் மதத்தை ‘cult’ என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் தவறாகவோ, கவனக் குறைவாகவோ பயன்படுத்தியுள்ளதை சீக்கிய சமுதாயத்தினர் ஆட்சேபணைக்குரியதாகக் கருதுகின்றனர்.

பாபர் மசூதி தொடர்பாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இருந்த தாவாவில் தங்கள் மதத்தை வம்புக்கிழுத்திருக்கக் கூடாது என்று கூறும் அவர்கள், மேற்சொன்ன ராஜிந்தர் சிங், 1510-11இல் குருநானக், ‘ராம ஜென்ம பூமிக்கு’ தரிசனம் செய்வதற்காக வந்திருந்தார் என்று தனது சாட்சியத்தில் கூறியதை எந்த ஆட்சேபணையும் இல்லாமலும் சீக்கிய மதத் தலைவர்களையோ, சீக்கிய அறிஞர்களையோ கலந்தாலோசிக்காமலும் உச்ச நீதிமன்றம் ஒப்புக் கொண்டதையும் அவர்கள் விமர்சித்துள்ளனர். சிலை வழிபாட்டிலோ சடங்காச்சாரங்களிலோ நம்பிக்கை கொண்டிராத குருநானக் அயோத்திக்கோ, மெக்காவுக்கோ, வேறு எந்த இடத்துக்குக்கோ சென்றிருந்தாலும் உருவம் இல்லாதவரும், எல்லோருக்கும் பொதுவானவருமே கடவுள் என்பதை உபதேசிக்கவே சென்றிருப்பார் என்றும், தரிசனம் செய்வதற்காக அவர் ராம ஜென்ம பூமிக்குச் சென்றார் என்பது அப்பட்டமான வரலாற்றுத் திரிபு என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

அதேபோல், இன்றைய உத்தரப்பிரதேசத்தில் இருப்பதும் முன்பு அவத் என்றழைக்கப்பட்டதுமான சிற்றரசைச் சேர்ந்த காவல் துறை அதிகாரியொருவர் கூறியதாகச் சொல்லப்படுவதையும் உச்ச நீதிமன்றம் இந்துக்களுக்கு சார்பான சாட்சியமாக எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த அதிகாரி, சீக்கியர்களில் நிஹாங் பிரிவைச் சேர்ந்த ஒருவர் ராம ஜென்ம பூமியில் நெருப்பை வளர்த்து பூஜை செய்ததாகக் கூறியுள்ளார். சீக்கிய மதத்துக்கு விரோதமான இந்தக் காரியங்களை ஒரு நிஹாங் சீக்கியர் ஒருபோதும் செய்திருக்க மாட்டார் என்றும், இப்படிப்பட்ட சாட்சியத்தை உச்ச நீதிமன்றம் எந்தப் பரிசீலனையுமின்றி ஏற்றுக் கொண்டது தவறு என்றும் சீக்கிய மதத் தலைவர்களும் அறிஞர்களும் கூறியுள்ளனர்.

மேற்சொன்ன இரண்டு சாட்சியங்களையும் 'தயாரித்தவர்கள்' சங் பரிவாரத்தினர் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

மத நம்பிக்கை என்பது பொதுவாக அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் புனித நூல்கள் என்று கருதப்படுவனவற்றையும், அந்த நூலை அடிப்படையாகக் கொண்டு சமயச் சான்றோர்களால் வகுக்கப்பட்டு, அந்த மதத்தைப் பின்பற்றுபவர்களால் குறைந்தபட்சம் கோட்பாட்டளவிலேனும் கடைப்பிடிக்கப்படச் செய்யப்படுவனவற்றையும் அடிப்படையாகக் கொண்டவை. இந்தியாவில் சீக்கியர்களுக்கு குரு கிரந்தம், பார்சிகளுக்கு அவெஸ்தா, கிறிஸ்தவர்களுக்கு விவிலியம், முஸ்லிம்களுக்கு குரான் என்று புனித நூல்கள் உள்ளன. ஆனால், இந்துக்களுக்கு அப்படிப்பட்ட புனித நூல் ஏதும் இல்லை.'பகவத் கீதை'யை இந்துக்கள் எல்லோருக்குமான புனித நூலாக்குவதற்கான முயற்சியை சங் பரிவாரம் மேற்கொண்டுள்ளது என்றாலும், இதுவரை அது பலிக்கவில்லை.

மேலும், அதிலுள்ள அறநெறிகளைப் பின்பற்றினால், ஒருவன் சகோதரக் கொலையைச் செய்வதும்கூட நியாயப்படுத்தப்பட்டுவிடும். ஆனால், அண்ணல் அம்பேத்கர் சுட்டிக்காட்டியது போல, கொலை செய்தவன் எவனாவது நீதிமன்றத்தில் கிருஷ்ணன் கூறியதை மேற்கோள் காட்டி, "நான் அழித்தது உடலைத்தானே அன்றி ஆன்மாவை அல்ல" என்று கூறினால் அதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாது. அதனால்தான் சங் பரிவாரத்தினரிடம் இல்லாத, இருக்கவே முடியாத தமிழர்களின் அறநூலான 'திருக்குறளை' சுவீகாரம் எடுத்துக் கொள்ள அவர்கள் தவியாய்த் தவிக்கின்றனர்.

**சிலை வழிபாட்டிலோ சடங்காச்சாரங்களிலோ நம்பிக்கை கொண்டிராத குருநானக் அயோத்திக்கோ, மெக்காவுக்கோ, வேறு எந்த இடத்துக்குக்கோ சென்றிருந்தாலும் உருவம் இல்லாதவரும், எல்லோருக்கும் பொதுவானவருமே கடவுள் என்பதை உபதேசிக்கவே சென்றிருப்பார் என்றும், தரிசனம் செய்வதற்காக அவர் ராம ஜென்ம பூமிக்குச் சென்றார் என்பது அப்பட்டமான வரலாற்றுத் திரிபு**

இந்துக்கள் என்று முதலில் முஸ்லிம்களாலும் பின்னர் ஆங்கிலேயர்களாலும் வகைப்படுத்தப்பட்டவர்களும், பல்வேறு சாதிகளையும் பல்வேறு தெய்வங்களையும் பல்வேறு சமயச் சடங்குகளையும், ஆச்சாரங்களையும் கடைப்பிடிப்பவர்களுமான மக்களுக்கென்று 'இந்துச் சட்டத் தொகுப்பு' என்பதே ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில்தான் பார்ப்பனர்கள் போன்ற இரு பிறப்பாளர்களின் துணையோடு உருவாக்கப்பட்டது. பின்னர் இந்து சமுதாயத்திலுள்ள பிற்போக்குத்தனமான நடைமுறைகள், பெண்ணடிமைத்தனம் முதலியவற்றைப் போக்குவதற்காக இந்திய அரசமைப்பு அவையில் அம்பேத்கர் கொண்டு வந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா அந்த அவையிலிருந்த பிற்போக்காளர்களால் எதிர்க்கப்பட்டதால் நிறைவேற்றப்படவில்லை. எனினும் பின்னர் அது பகுதி பகுதியாக இந்திய நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், 'பகவத் கீதை'யை இந்துக்களின் பொது புனித நூலாக்குவதற்கு இந்திய நாடாளுமன்றத்தில் முயற்சி செய்யப்படவில்லை.

உலகில் பொதுவாக, 'புனித நூல்' என்பது ஒரு குறிப்பிட்ட மதத்தினரின் நம்பிக்கைக்கு அடிப்படையாக இருப்பதால், அப்படிப்பட்ட 'புனித நூல்' என்பது இந்துக்களுக்கு இல்லாத குறை போக்கப்பட வேண்டும் என்பதற்காகவோ என்னவோ, உச்ச நீதிமன்றத்தால் இப்போது புராணங்களும் தர்மசாஸ்திரங்களும் இந்துக்களின் 'நம்பிக்கை'களுக்கு ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன என்று கருதலாம்.

### வைதீகம் அழிந்த அறிவுக் கூடங்கள்

இப்படிப்பட்ட சூழலில் வரலாற்றை எழுதுவதற்கோ, அறிவியல், பண்பாடு ஆகியவற்றைப் பற்றி விளக்கவோ 'நம்பிக்கை' ஒன்றே போதுமானது என்ற நிலை வலுப்பட்டு வருகிறது. மறுக்கமுடியாத வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டவற்றையோ, ஐம்புலன்களுக்குத்

தெளிவாகப் புலப்படுகின்றவற்றையோ, பகுத்தறிவால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படக் கூடியனவற்றையோ நிராகரித்துவிட்டு, 'நம்பிக்கை'யின் அடிப்படையில் மட்டுமே கூறப்படுவனவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிர்பந்தம் இப்போது உருவாக்கப்பட்டு வருகிறது.

எடுத்துக்காட்டாக, பண்டைய இந்தியாவில் உயர் கல்வி, அறிவு ஆராய்ச்சி ஆகியவற்றுக்கான முக்கிய மையங்களாக இருந்தவை என்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள வரலாற்று அறிஞர்களால் (இவர்கள் எல்லோரும் மார்க்ஸிஸ்டுகளோ, முஸ்லிம்களோ அல்லர்) கருதப்படுபவை பீகாரிலுள்ள நளந்தாவிலும், ஒடிசாவிலுள்ள புஷ்பகிரியிலும், தற்போதைய பாகிஸ்தானிலுள்ள தக்ஷசீலாவிலும் இருந்த பல்கலைக்கழகங்கள். இவை யாவும் பௌத்த மையங்களாகும்.

கி.பி.5ஆம் நூற்றாண்டிலிருந்து 12ஆம் நூற்றாண்டு வரை நீடித்த நளந்தா பல்கலைக் கழகம், இன்றைய நவீன பல்கலைக்கழகங்களைப் போல உணவு, உறைவிட வசதிகளைக் கொண்டிருந்தது. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களையும் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆசிரியர்களையும் கொண்டிருந்த அந்தப் பல்கலைக் கழகத்தில் ஏராளமான வெளிநாட்டு மாணவர்களும் இருந்தனர். கி.பி. 7ஆம் நூற்றாண்டில் இந்தியாவின் பல பாகங்களில் பயணம் செய்தவரும், அறிஞரும் மொழி பெயர்ப்பாளருமான ஹுவென் ஸாங், நளந்தா பல்கலைக்கழகம் அறிவுக்கோவிலாக மட்டுமின்றி, 'சகிப்புத் தன்மையின், மத சகிப்புத்தன்மையின் உச்ச நிலையைக் கொண்டிருந்தது' என்பதைப் பதிவு செய்துள்ளார். பன்மைத்துவம் கொண்டிருந்த அப்பல்கலைக்கழகம், அறிவுக்கு - ஒரு தனிப்பட்ட நபரால் அல்ல - பலர் ஒன்றுசேர்ந்து உருவாக்கும் அறிவுக்கு முதன்மை கொடுத்ததால்தான் அண்டை நாடுகள் பலவற்றைச் சேர்ந்த மாணவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தனர்.

வைதீகப் பார்ப்பனியம் வளர்ந்து வலுமிக்கதாகியபோதுதான், அந்தப் பல்கலைக்கழகங்களெல்லாம் அழிக்கப்பட்டன.

**மத்திய அமைச்சரின் பொய்யுரை**

ஆனால், சகிப்புணர்வு சிறிதுமற்ற, வரலாற்றை திரிக்கின்ற, இந்தியாவின் பன்மைத்துவப் பண்பாட்டு மரபைத் துடைத்தெறிகிற, 'நினைவுக்கெட்டாத பழங்காலத்திலிருந்தே' இந்து (பார்ப்பன) நாகரிகம்தான் இந்தியாவில் கோலோச்சி வருவதாகச் சொல்லி வருகின்ற சங் பரிவாரத்தைச் சேர்ந்த இந்திய ஒன்றிய அரசாங்கத்தின் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் புதிய கயிறொன்றைத் திரித்துள்ளார். அதாவது, இந்தியாவில் மட்டுமல்ல, உலகிலேயே மிகப் பழமை வாய்ந்த பல்கலைக்கழகம், உத்தரகாண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்திலுள்ள பத்ரிநாத்தில் இருந்ததாகவும் அது 'பத்ரிஸ்' பல்கலைக்கழகம் என்று அழைக்கப்பட்டு வந்ததாகவும் அண்மையில் டேராடூன் நகரில் நிகழ்த்திய உரையொன்றில் கூறியுள்ளார். அப்படிப்பட்ட பல்கலைக்கழகம் இருந்ததற்கான எந்தச் சான்றும் இல்லை. ஆனால், அமைச்சரோ அதன் பழம் புகழ் மீண்டும் நிலைநாட்டப்படும் என்று கூறியுள்ளார். மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சகத்திலிருந்து இதற்காக நிதி ஒதுக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

ஏனென்றால், ரமேஷ் பொக்ரியால் நிஷாங்க் போன்ற 'வரலாற்று அறிஞர்'களுக்கு நரேந்திர மோடி, அமித் ஷா போன்ற பேராசிரியர்கள் இருக்கிறார்கள். 2014ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது நரேந்திர மோடி, அந்நியப் படையெடுப்பாளனாகிய மகா அலெக்ஸாந்தர் பீகார் மண்ணில் தோற்கடிக்கப்பட்டதாகக் கூறினார். உலகிலுள்ள பல வரலாற்று அறிஞர்கள் திரட்டியுள்ள வரலாற்றுச் சான்றுகளின்படி, மாஸிடோனியாவைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் ஒருபோதும் பீகாருக்கு அருகில்கூட வந்ததில்லை. மோடி, இதோடு நிற்கவில்லை. இப்போது பாகிஸ்தானிலுள்ள தக்ஷசீலாவையும் பீகாரிலுள்ள நளந்தாவையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பினார். மேலும், கி.பி. 3-4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சந்திரகுப்த மௌரியரை 'குப்த' வம்ச ஆட்சியாளர் என்றும் கூறினார். இவையெல்லாம், திருக்குறளையும் புறநானூற்றையும் கரைத்துக் குடித்துள்ள மோடி 'வாய் தவறிக் கூறியவை' என்று வைத்துக்கொண்டாலும், மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரோ, அதுபோன்ற சந்தேகத்துக்கு இடமே தரவில்லை. அவர் கூறியது தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டபோதிலும், அந்தத் தவற்றை அவர் இதுவரை ஒப்புக்கொள்ளவே இல்லை. உலகிலேயே மிகப் பழைமையான 'பத்ரிஸ்' என்ற பல்கலைக்கழகம் பத்ரிநாத்தில் இருந்தது என்று அவர் சொல்வதற்குக் காரணம், இந்துக்களின் புனிதத் தலங்களிலொன்றாக பத்ரிநாத் இருப்பதும்,

இந்துகளின் மத நம்பிக்கையைப் பயன்படுத்தி பொய்யை மெய்யாக்க முயலுவதும்தான்.

சங் பரிவாரத்தினருக்கு பத்ரிநாத் மிக முக்கிய இடம். பௌத்தக் கருத்துகளை அப்படியே நகல் செய்து, ஆனால் அவற்றுக்கு முற்றிலும் வேறான விளக்கத்தைக் கொடுத்து அவற்றை முற்றிலுமாக ஒழித்துக்கட்டுகிற அத்வைத வேதாந்தத்தைத் தோற்றுவித்து வருணாசிரம தர்மத்திற்குப் புத்துயிர் ஊட்டிய ஆதி சங்கரரால் நிறுவப்பட்ட புண்ணியத் தலம்தான் பத்ரிநாத். ஆக, இந்திய வரலாறு முழுவதையும் பார்ப்பனிய சாயலில் வார்த்தெடுக்கும் சங் பரிவாரத்தின் முயற்சிகளிலொன்றுதான் 'பத்ரிஸ்' பற்றிய 'கண்டுபிடிப்பு'.

மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் போக்ரியால் 44 புத்தகங்களை எழுதியுள்ள அறிஞராக சங் பரிவாரத்தால் போற்றப்படுகிறவர். 'சோதிட சாஸ்திரம்' உலகிலேயே மிக உயர்ந்த 'அறிவியல்' என்றும், வெட்டப்பட்ட தலையை இன்னொரு உடலில் பொருத்தக்கூடிய மருத்துவ, அறிவியல் அறிவு பழங்கால இந்தியர்களிடம் (இந்துக்களிடம்) இருந்தது என்பதற்கான சான்றே விநாயகர் என்றும் நாடாளுமன்றத்தில் பேசியவர் இவர்தான். பண்டைக்கால இந்தியர்கள் அணு ஆயுத சோதனைகளை நடத்தினார்கள் என்ற 'நம்பிக்கை' கொண்டிருப்பவர் இவர்.

இந்திய ஒன்றிய அரசாங்கத்தில் அறிவியல், தொழில்நுட்பத் துறை அமைச்சராக இருந்த ஹர்ஷ்வர்தன், ஐன்ஸ்டினின் சார்புநிலைக் கோட்பாட்டைவிட (E = MC squared) மிக உயர்ந்த அறிவியல் கோட்பாடுகளை வேதங்கள் கொண்டிருக்கின்றன என்று உலகப் புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் ஸ்டீஃபன் ஹாக்கிங்ஸ் கூறினார் என்ற அப்பட்டமான பொய்யை சென்ற ஆண்டு நடந்த இந்திய அறிவியலாளர்கள் மாநாட்டில் கூறினார். இப்போது சுகாதாரத் துறை அமைச்சராக உள்ள அவர், அண்மையில் டெல்லி நகரம் கடுமையான காற்று மாசால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தபோது, மக்கள் எல்லோரும் கேரட் சாப்பிட்டால் எல்லாம் குணமாகிவிடும் என்ற 'மருத்துவ ஆலோசனை' வழங்கினார். மக்கள் காற்று மாசால் அவதிப்பட்டிருந்ததைப் போக்குவதற்கு உச்ச நீதிமன்றம் அடுக்கடுக்கான உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தபோது உத்தரப் பிரதேச அமைச்சர் சுனில் பராலா, மழை பொழியுமாறு இந்திரனை வேண்டிக்கொள்ளும் யாகங்களை நடத்த வேண்டும் என்ற 'மேலான யோசனை'யைத் தெரிவித்தார். லக்னோ நகரிலிருந்து 50 கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஓரிடத்தில் இந்து அமைப்பொன்றைச் சேர்ந்தவர்கள் 'மகா யக்ஞம்' ஒன்றை நடத்தி, 50 டன் மாமரக் கட்டைகளையும் ஏராளமான பசு நெய்யையும் எரித்தனர்.

திரிபுரா மாநில முதலமைச்சரோ (இவரும் ஒரு 'சங்கி'தான்) இன்னும் ஒருபடி முன்சென்று மகாபாரதக் காலத்திலேயே இன்டர்நெட்டும் செயற்கைக்கோள் மூலம் செய்யப்படும் தகவல் தொடர்பும் இருந்ததாகக் கூறினார். மாலேகான் குண்டு வெடிப்பில் குற்றம்சாட்டப்பட்டு, மோடி அரசாங்கத்தின் தயவினால் 'குற்றமற்றவராக்கப் பட்ட'வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான 'பெண் சாமியார்' ப்ரக்ஞ்யா சிங் தாகூர், அண்மையில் சில பாஜக தலைவர்கள் இறந்து போனதற்குக் காரணம் எதிர்க்கட்சிகளிடம் 'கொல்லும் சக்தி' ( மாரக் சக்தி) இருப்பதுதான் என்றார்.

'நம்பிக்கை' இருந்தாலே போதும் - “இந்தியனின் நோக்குநிலையிலிருந்து' இந்திய வரலாறு, இந்திய அறிவியல் முதற்கொண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் வரை எதையும் எழுதலாம்; எழுதவும் வேண்டும். இதுதான் அமித் ஷா பெனாரஸ் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை மூலம் இந்திய மக்களுக்கு விடுத்துள்ள செய்தி.

கட்டுரையாளர் குறிப்பு :

எஸ்.வி.ராஜதுரை (எஸ்.வி.ஆர்.) மார்க்சியச் சிந்தனையாளரும், எழுத்தாளரும் ஆவார். மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம் தமிழக அரசியல் பற்றிய பல நூல்களையும் கட்டுரைகளையும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். சிறுகதைகளையும் கவிதைகளையும் தமிழாக்கம் செய்துள்ளார். மனித உரிமை இயக்கத்தில் களப்பணி ஆற்றியவர். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயர் ஆய்வு மையத்தின் தலைவராகப் பணிபுரிந்தவர். The Communist Manifesto என்னும் புகழ்பெற்ற நூலை 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' என்னும் தலைப்பில் தமிழாக்கம் செய்திருக்கிறார். வ.கீதாவுடன் இணைந்து மார்க்சியம், பெரியாரியம் சார்ந்த முக்கியமான நூல்களை எழுதியுள்ளார்.

●

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at
BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29,
New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN

# கடவுள்களைக் கொன்று விட்டு வந்தவன்

புதினங்கள் காப்பியங்கள் உபநிடதங்கள் வழி ஒழுகி
புனிதமாக்கப்பட்டு...
புனிதராக்கப்பட்டவன் தொடங்கி...

செவி வழி செய்தியாக...
வாய்வழி பிரசவித்த வதந்திகளாக...
கதை நெடுக ஓடியவன்

காப்பாளனாக, ரட்சகனாக அவதரித்தவன் வரை
எவனையும் விடாது, சகல கடவுள்களையும் ஆயுதமுனையில்
கைவிடப்பட்டக் கழிவறையொன்றில் அடைத்தேன்.

தொழுது / ஜெபித்து / சேவித்து, சிறிது சிறிதாய் வளர்த்து...
பூமியெங்கும் பரவிய மதமெனும் விஷ விருட்சங்களின்
வேர்தான் கடவுள்கள்.

உலக வரைபடம் முழுக்க
மனிதக் குருதி வழியும் நாவால்...
வன்முறையின் எல்லைகளை வரைந்திருக்கிற,
மதங்களின் பிம்பந்தான் இக் கடவுள்கள்!

சிசுக்களின் உடல் துளைத்துச் சுவையுணர
துப்பாக்கியின் ரவைகளாய் மாறிய மதம்

சூல்கொண்ட பெண்ணின் பிறப்புறுப்பு கிழித்து
கருவைத் தின்ன சூலமாய் உருவெடுத்த மதம்

புகைவண்டி எரித்து...
விசவாயு பரப்பி...

மனித உயிர்கள் கூடுகிற இடமெல்லாம்
குண்டுகளாய் அவதரித்து
வெடித்து...

மரண ஓலங்களினூடே தம் இருப்பை எழுதுகிற
வெறிகொண்ட

**மதம்! மதம்!! மதம்!!!**

– அரவிந்த் குமார்
ஊடகவியலாளர்

# சட்டம் நீதிக்கல்ல; பார்ப்பனர் பாதுகாப்புக்கே!

● சட்டம் நீதிக்கு ஏற்பட்டதல்ல. ஒரு கூட்டத்தின் பாதுகாப்புக்கு ஏற்பட்டது. ஆதலால், அதில் பரிகாரத்துக்கு மார்க்கம் காண முடியாது.

● சட்டத்தை எழுதினவன் பார்ப்பான். அந்தச் சட்டத்தை அமுல் நடத்துகிறவன் பார்ப்பான். நிர்வாகத் துறையில், நீதித் துறையில் பார்ப்பனன் ஆதிக்கமே இருப்பதால் அது நமக்கு மேலும் மேலும் கேட்டையே அளித்து வருகிறது. கேடாகவே இருக்கிறது. அந்த வாய்ப்பால் நம் ஆட்கள் இரண்டொருவர் இருந்தாலும்கூட, அவர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமையாகவே தான் இருந்தாக வேண்டும். இல்லாவிட்டால் தங்கள் சுய நல வாழ்வு கெட்டுவிடும். அதனால் நம்மவர்களும் வாலை அடக்கிக் கொண்டு பார்ப்பனர்களுக்கு ஏற்றபடி நடந்து விடுகிறார்கள். அதற்காகத் தான் நாங்கள் பாடுபட வேண்டியிருக்கிறது. இந்த முயற்சியில் நமக்கு என்ன கேடு வருவதானாலும், அதைப் பற்றிக் கவலைப்படாமல் கேட்டை ஒழிக்க நாம் துணிந்து பாடுபட வேண்டியிருக்கிறது.

● யுத்தம் நடக்கிறபோது போர்முனைக்குச் செல்லும் சிப்பாய் (போர் வீரன்) என்ன நினைத்துக் கொண்டு செல்வான்? ஜெயமா? தோல்வியா? என்பது ஒருபுறமிருந்தாலும், போர் முகத்தில் இருக்கும்போது சாகத் தயாராக இருந்தால் தானே துப்பாக்கி எடுக்க முடியும்? சாவு வருமே என்று பயந்தால் அவனவன் தன்மை எப்படிப்பட்டதாகும்? அதுபோல் நாம் இதனால் பலன் அடைகிறோமோ இல்லையோ, என்ன பலனை அடையப் போகிறோம் என்பது பற்றிக் கருதாமல் சாகத் தயாராக இருக்கும் போர் வீரர்கள் மாதிரி இந்த முயற்சியால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கத் தயார் என்ற நிலையில்தான் நாம் இருக்க வேண்டும்.

(உயர்நீதிமன்ற பார்ப்பன ஆதிக்கத்தைக் கண்டித்து
பெரியார் - 23.10.1960 அன்று திருச்சியில்ஆற்றிய உரை)